யெட்டும் சிவயோகிக் கில்லையென மாமறைக
ட்டும் பெருமுரசத் தான்.

சித்தைபயமிலச்சை சிலமருவருப் - பத்தைவிடுஞ்சாத்திருல்மா சார - மித்தவழி-யெட்டும்-எ-து-எனக்கின்னதுவேண்டுமென்னுஞ் சித்தனையுத் தட்டே மிருகாதி தோன்றி யக்கா லச்சமு மின்னு மின்னது சொல்லப்பொருளொன்னு நாணமுஞ் சாத்திராயண விரத முதலிய'சீலமு மீச்சுத்தமென்னு மருவருப்பு மகற்தையாற் செய்தபாவத் தீர்க்கும் புண்ணிய மீதென்ற செய்யுஞ் சாத்தியுங் குலாசாரமுஞ் சமயாசாரமுமாகிய விந்தமார்க்க மென்வகையும்.

சிவயோகிக்கில்லையெனமாமறைக - டட்டும்பெருமுரசத்தான் -எ-து-சிவத்தோ டிரண்டுறக்கூடி நின்றசிவயோகிக்கில்லையென்று மாமறைகளாகிய பெரியபேரிகை முழக்கும்-எ-து.

* அசுத்தை-என்பது-அத்தையென் நிலைக்குறையர்யிற்று.

"மாமறைகடழுதும் பெருமுனை,, மென்றது அவர்க்கில்லையென் றும் பலபடக்கூறுதல் வியையெட்டுஞ் சிவத்திற் கின்றுகளி னதுவையடை ந்த சிவபோகிக்கு மின்றென்ப தாயிற்று. (கூஈ)

தத்துவத்தா ரல்லார் சலசந்நிர ஞெப்பார்
தத்துவத்தார்செய்யுந்தவாதவங்கள் - சுத்தக்
கனமழை யாற்கழுவிக் காற்றைக் கனலாற்
றெகண்ஞ் செயல்போற் றெளி.

தத்துவத்தாரல்லார் சலசந்நிரஞெப்பார்-தத்துவத்தார்செய்யுந் தவாதவங்கள் - எ-று-மெய்ப்பொருளாகிய பாதத்துவத்தையடையா தோர் தற்போதத்தாற்செய்யுந் தவாதவங்களினுனு மிவற்றின் பயன்க ளினுனு முயர்ந்துந் தாழ்ந்துஞ் சலந்திற்பிரதிபலிதமான சந்திரனைப் போலுமாவர் அப்பாதத்துவத்தை யடைந்தோ ரருள் வடிவாயிருந்து செய்யுந் தவங்களு மவங்களு மிவற்றுள்வரும் பயன்களுமிவர்க்கென் ஞன மாமெனின்.

சுத்தக்-கனமழையாற் கழுவிக்கற்றைக் கனலாற்-றெகணஞ்செ யல்போற்றெளி-எ-று-நிருமலமாயுள்ள வாகாயத்தை மழையாற்கழு விக் காற்றைக் கனலாற் சுடுவதுபோலுமா மென்றறிந்-எ-று.

கனத்தைமழையாற்கழுவதலுங் காற்றைக்கனலாற்சுடுதலு மின் றுயின வாறுபோற் றற்போதம் போய்ப் பேய்பிடி யுண்டவனைப் போலுந் திருவருளே வடிவாயிருந்த மெய்ஞ்ஞானிக டிருமேனியி னிகழுந் "தவாதவங்க,, ளவ்வருள் வினையாட்டேயன்றி யவரவற்றைச் செய்தது மவற்றின்பய னவனைச் சார்வது மின்றென்பதாயிற்று.

"தவாதவங்கடத்துவத்தாரல்லார்க்கு,, வருவிக்கப்பட்டது - நத் துவமென்ற நீண்மிசிவத்தை. (கூச)

காலனுக்குப் பாவமென்னுங் காற்றுங் கதிரவனுஞ்
சிலமிலா ரொன்றுஞ் சிவயோகி - மேலொன்றைச்
சுட்டுவதுந் தம்மைச் சுழற்றிவிடா தாட்டுமலக்
கட்டின் பிராந்திவலுக் காண்.

காலனுக்குப் பாவமென்றுங் காற்றுங்கதிரவனுஞ் - சிலமிலாரொ ன்றுஞ் சிவயோகி - மேலொன்றைச் - சுட்டுவது - எ - து-உயிர்களைக் கோறலாற் காலனுக்குப் பாவமுண்டென்றும் மெசுத்த நிலத்திற் சலித்த லானு மந்நிலத் தெறித்தலானுங் காற்றுங் கதிரவனு மாசார மிலரொன் றுங் கூறுதல்போற் சிவபூசையாற் நன்மார்க்கங்களைச் செய்திலரொன்

நீர்ச்சாடலாதி யாசார மிலரென்று மிவைமுதலிய குணதோடங்களைச் சிவயோகிகண்மேற் சுட்டிக்கூறுவது.

தம்மைச்சுழற்றிவிடா தாட்மேலக்-கட்டின் பிராத்திவனுக்காண்-எ-து தம்மைவிடாது பற்றிநின்றவத்தைகடோறஞ்சுழற்றியாட்டப்பட்ட மலபந்தத்தினுற்றோற்றும் பிராத்தியினதுசாமர்த்தியமாம்-எ-று.

சரிதை கிரியாயோக ஞானங்களுள் ஞானமொன்றுமே முத்திக்கேதுவாகலி லிஞ்ஞானத்தான் முத்தியை யடைந்திருத்தலாற் சரிதாதிகளும் உடம்பாதியசுத்தங்களை யெல்லாங் கடந்து சுத்தமாயுள்ள வாநந்த வெள்ளத்தின் மூழ்கியிருத்தலா னீராடலாதி யாசாரங்களுஞ் செய்வதின்றிச் சிவயோகி சும்மாவிருப்பன் அங்ஙன மிருப்பது சரிதாதிகளைச் செய்வோர்க்கு மலமறைப்பாற் றெரியாது தம்மைப்போற்பார்த்தவனை யிகழ்தலான் "மலக்கட்டின் பிராத்திவனுக்கா,, ணென்றார் - காலனுக்குப்பாவமுஞ் காற்றிற்குங் கதிரவனுக்குஞ் சுத்த மின்றியதுபோ னன்மார்க்கஞ் செய்யாமையாற் பாவமு மாசாரமின்மையாலசுத்தமுமவர்க் கின்றென்பதுங் காண்க. (௫௬)

நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென் - மேயார்
பெருமை சிறுமையில்லை பின்னுமுன்னு மில்லை
வானவற்று வேண்டிய செய்வார்.

நாயேறிவீழ்ந்தென்னடாத்துகிலென்ஞானிக்குப் - பேயாஞ்சகம்பழித்தென்பேணுகிலென்- மேயார் - எ - து - நாய்மேலிவர்ந்தோனதினின்றும் வீழ்ந்ததனு லிகழ்ச்சியெய்னை - வீழாதிருந்ததனைநடாத்தியதாற் புகழ்ச்சியெய்னை - அதுபோல் ஞானிகட்குப் பேய்க்கூத்துப்போற் றோற்று மிச்சகத்தினுள்ளா ரிகழ்ந்தா லவர்க்கோர்சேதமென்னை,புகழ்ந்தாலோர் இலாபமென்னை-யவரொன்றேடுத்தோயார்.

பெருமைசிறுமையில்லைபின்னுமுன்னுமில்லை - வானவற்றுவேண்டியசெய்வார் - எ - து - அஃதென்றியுயர்ச்சி வந்ததென்று பெருமையுந் தாழ்ச்சிவந்ததென்று சிறுமையு மவர்க்கில்லை பிறிதுயிய சகலமுமுன்னுயிய கேவலமு மில்லையாகலிற் சுத்தமாகிய வருள்வடிவாயிருத்தலவின்றித் தாம் வேண்டியவாறே திருவிளையாட் டாடுவார்-எ-று.

இகழ்ச்சியாயுள்ள நாயேறிக்கு வீழ்ந்தாலு நடாத்துகிலுமிகழ்ச்சி புகழ்ச்சியின் முயதுபோல் ஞானிக டமக்கிகழ்ச்சியா யிருத்தவுடம்பையிகழ்ந்தாலும் புகழ்ந்தாலு மவரவர்க்கின்றென்பதாயிற்று

செம்பிற் காளிதம்போன் முயிரை யனுதியிற்பற்றியிருந்த சகச்மல நீக்கற்பொருட்டு மாயையிற்றனுவாதி கொடுத்தவிற்சகத்தைத் பின் னென்று மாணவசம்பந்தமான கேவலத்தை முன்னென்றுங்கூறினர்.

சித்தை-பயமிலச்சை யென்றுந் திருவெண்பாமுத லிற்றான்கு திருவெண்பாவாலுஞ் சிவஞானி மகிமையையறிவித்தவாறுகாண்க. ()

சன்மார்க்க மேமுதலாய்த் தாதமார்க்கத் தளவுந்
தன்மார்க்கமான வெங்கள் சம்பந்தன் - றன்னைத்
துறவி யரசுசுகி யோகி போகி
யறவன் மறவனென லாம்.

சன்மார்க்கமேமுதலாய்த்தாதமார்க்கத்தளவுந் - தன்மார்க்கமான வெங்கள் சம்புந்தன் - றன்னை - எ - து - ஞானமுதற் சரியையீறாய்ச் சொல்லப்பட்ட 'நான்குபாதத்திற்கு முரித்தாகிய சன்மார்க்கமுதற் றாதமார்க்க மீறாய்ச் சொல்லப்பட்ட விந்நான்கினையுந் தமதருணெறி யா லனைக் குண்டாகச் செய்தருளிய வெமது சுவாமிகளாகிய திரு ஞான சம்பந்தப் பிள்ளையாரை.

துறவியரசுசுகியோகிபோகி - யறவன்மறவனெனலாம் - எ-து. எல்லாவற்றோடுங் கூடியிருந்து மவற்றோ டொக்கற்று நிற்றலிற் றுறவி யென்றுஞ், சகலபுவனங்களையுந் தாமேயிருந்து நடத்தலி னரசென் று மாநந்த மயனாயிருத்தலிற் சுகியென்றுஞ் சிவயோகத்தை யநுக்கி ரகித்தலின் யோகியென்று மான்ம போதங்களைவிழுங்கிக் கோடலிற் போகியென்றுஞ்சகல தருமங்களுமோர்வடிவாயிருத்தலி னறவனென் று மடைந்தோர் மும்மலங்களைக்கோறலான் 'மறவனென்றுஞ், சொல்லலாம்-எ-று.

சன்மார்க்கஞ் சகசமார்க்கஞ் சற்புத்திரமார்க்கந் தாதமார்க்கமென நான்கு; இவற்றுட்சன்மார்க்கமாவது,நீயேநான்-நானே நீயென்பது.

சகசமார்க்கமாவது, தொழனுந் தொழனும், சற்புத்திரமார்க்க மாவது, பிதாவும் புத்திரனும் - தாதமார்க்கமாவது, ஆண்டவனு மடி யானு மெனக்கொள்க.

ஞானம் பெற்றோரைப் புகழ்ந்து கூறிய பின்னர் இத்திருவெண் பாவா லந்தஞானத்தை யருளிச்செய்தற்குத் தலைவராகிய பிள்ளையா ரைப் புகழ்ந்து கூறியவாறு காண்க. (இ)

தானல்லர் தன்னதல்லர் தத்துவசா லத்தலிவர்
மேனி சதாநந்தம் விளையுமிட - மியானைக்கைப்
போலே யிவருடம்பிற் போகமெலாம் பூசையித
ஞாலசகம் பிழைக்கு மென்.

தானல்லர்தன்னதல்லர்தத்துவசாலத்தலிவர் - மேனிசதாநந்தம் விளையுமிடம்-ஆ-து-தனுகரண புவன போகங்களாயுள்ளதத்துவங்களெல்லாந் தமக்கயலாகலினவை தாமுமல்லாமல் அசுத்தந் துக்கமனித்தியமாயிருத்தலினவை தனதுமல்லாமல் அத் தத்துவங்களோடுகூடியுங் கூடாத சாலத்தோடுமவற்றிற்குத் தலைவராயிருந்த மெய்ஞ்ஞானிகடிருமேனி சதாநந்த மேன்மேலு முண்டாகு மோரிடமாகலின்.

ஆனைக்கை-போலேயிவருடம்பிற்போகமெலாம்பூசையித-ஞாலே சகம்பிழைக்குமென் - எ - து-எடுத்தபொருளின் பரிசமறிவதுபோற் றோற்றித் தன்னுளிருந்த நாதிக்குக்கெந்தவிடயமுமாகவிருந்தயானைக் கைப்போ லிந்தஞானிகளது திருமேனியாலநுபவிக்கும் போகமெல்லாமிதிருமேனியநுபவிப்பதுபோலிருந்திதிருமேனியுள்ளிருந்தபரிபூரணசிவத்திற்கும் பூசையாயிப்பூசையினுலே சகத்திலுள்ளார்பிறவித்துன்பத்திற்குத் தப்பிவீட்டின்பத்தையெய்துவரென்றறிதி-எ-து.

மூற்றநுகரணங்களே யாமென்றும், புவனபோகங்களே யெமதென்றுங் கருதி நின்ற தற்பேதந் கெட்டிப்போதறிவுதாமா யாநந்தமாயிருத்தலிற் "ஞானல்லர்தன்னதல்ல,, ரென்றார்.

தேகத்திருந்த போதத்தையுங் கருவிகளையும் விழுங்கிக்கொண்டதனுட் சிவங்குடியாயிருத்தலின் மேனி சதாநந்தம்விளையுமிடமென்றும் போகமெல்லாம் பூசையென்றுங் கூறினர்.

இத்திருவெண்பாவான் ஞானிகட்குப் பதிதிசெய்வார் வீடடைவாரென் றறிவித்தவாறு காண்க. (இ)

பூசிமுடிப்பனவும் பூண்பனவும் பொற்றுகிலு
மாசை மிகுத்த வாசியர்க்காம் - காசிற்ற
மூண்டையர்க் காகாசிவன் முத்தனுக்குப் போகமல்லாற்
குண்டையொப்பார்க் கேனு வாகும்.

பூசிமுடிப்பனவும் பூண்பனவும்பொற்றுகிலு - மாசைமிகுத்த வாசியர்க்காம்-எ-து - சந்தனமாதி பூசப்படுவனவும்மல்லிகையாதிமுடிக்கப்படுவனவுங் கொத்தளப்பொன் னூலியாதி பூணப்படுவனவும் பொற்சரிகைச் சேலையாதி யுடுக்கப்படுவனவுமாகிய விவைமுதலிய

போகங்களெல்லா மாயையுன் மிகவு மிச்சிக்கப்பட்ட சுமங்கலியாகி யவரசியர்க்கேயாகுமதுபோலும்.

சிவன்முத்தனுக்குப்போகமல்லாற் - காசிற்ற - மூண்டையர்க்கா கா - முண்டையொப்பார்க்கே னிதுவாகும் - எ - து - சிவனதிச்சைப் படியேயவனது திருவடிசேர்ந்த சிவன்முத்தனுக்கே போகமஷ்டி மங்கலநீக்கிய வமங்கலிக்குப் போகங்களி லொன்றேனு மாகாவ்வாறு போலுஞ் சிவனடிசேராது தவம்பண்ணுவோர்க்கு மத்தவத்திற்குரிய விரதஞ்செயீஇ முடிப்பதேயன்றிப் போகங்களிலொன்றேனு மநுப விக்கலாகாதஃதன்றிக் குண்டையைப்போலுஞ் சரிதாதி தொழிற்செ ய்வோர்க்கு மிப்போக மநுபவிப்பதேனுகும் - எ - று.

தம்முதலாகிய சிவத்தை யிழந்து தவம்பண்ணுவோரை மூண் டையனென்று குறிப்பாற்கூறினார்.

குண்டைக்குத்தொழிற்செய்வதேயன்றியயையெடுங்கூட்டரவின் மைபோற்சரிதாதிகளைச்செய்வோர்க்கு இத்தொழிற்செய்வதேயன்றி சிவத்தோடுங்கூட்டரவின்மையாலிவரைக்குண்டையொப்பா,னென்றார்

இத்திருவெண்பாவாற் திருவடியையடைந்தோர்க்கேபோகமநு பவிப்பதாமன்றி மற்றையர்தமக்குச்சொன்ன நெறிநிற்பதேயன்றிப் போகமநுபவிக்க லாகாதென் றறிவித்தவாறுகாண்க. (நகூ)

ஆனைமதப் பட்டா லலங்கார மன்றிநாய்
தானு மதப்பட்டாற் சரியாமோ - ஞானி
தடை மீறினு லுஞ் சதிராகுங் கன்மி
கடைமீற லாகாது காண்.

ஆனைமதப்பட்டா லலங்காரமன்றிநாய் - தானுமதப்பட்டாற்சரி யாமோ - எ - து - மதமேறு மூன்னுஞ்சிறப்புள்ள யானைபின் மதமேறி த் தன்றடைகடந்து சேறினுஞ்சிறப்பேயாமன்றிப்பே யேறுமூன்னு மிழிவுள்ள நாய்தானும் பின்பேயேறினு லதுபோலுஞ்சிறப்பாமோ வவைபோலும்.

ஞானி - தடைமீறினுலுஞ் சதிராகுங்கன்மி - கடைமீறலாகாது காண் - எ - து - முன்னின்ற நிலை கடவாதிருந்தபோதுஞ் சிறப்புள்ளமெ ய்ஞ்ஞானி பின்னைநற்மேலிட்டா லந்நிலைகடந்து சேறினுஞ் சிறப் பேயாவன் கருமி நிலைகடவாமுன்னு மம்மெய்ஞ்ஞானிகட் டிழிவா வன் றற்போதத்தா லந்நிலைகட்ந்தபோது மிகவுமிழிவாவனுகலிற் றன் னிலைகடக்கலாகாது-எ-று.

ஆனமதமேறினுன் மிகவுஞ்சிறப்பு-நாய்பேயேறினுன் மிகவு மிழிவு. அவைபோல ஞானி தடைமீறினுன் மிகவுஞ் சிறப்பு கன்மிகடை மீறினுல் மிகவு மிழிவென்பதுங் காண்க.

இத்திருவெண்பாவான் ஞானி கிரியை செய்யினுஞ் செய்யாவி டினுஞ் சிறப்பாவ னென்பதுங் கன்மி கிரியை செய்யாவிடின் மிகவு மிழிவாவ னென்பது மறிவித்தவாறு காண்க. (கூ)

அதி பக்குவத்தாற் கறுக்கிரகஞ் செய்யும்
புதுமைக்குச் சாத்திரங்கள் போதா - திதுவென்னப்
பேறே யனந்தம் பிரகாரம் வந்தானும்
வேறே யனந்த விதம்.

அதிபக்குவத்தாற் கறுக்கிரகஞ்செய்யும்-புதுமைக்குச்சாத்திரங் கள் போதா - எ-து - தீவிரதர பக்குவமுடையானுக்கு ஞானுறுக்கிரக ம்பண்ணு மதிசயத்திற்கு வெவ்வேறு வகைப்பட்ட சாத்திரங்க ளெல் லாம் போதா தஃதெங்ஙன மெனின்.

இதுவென்னப்பேறெனந்தம் பிரகாரம்வந்தானும் - வேறெய னந்தவிதம்-எ-து- இதுவென்றெண்ணைச்சுட்டுதற்கிடம் வைக்காதகூ றுமுபதேசப்பேறே யவனுக் கநந்தம் விதமாய்க் கூறுஞ் சாத்திரங்க ளாகு மிங்ஙனம் வந்த பக்குவனு மநந்தம் பெயர்களுள்ளும் வேறிவ னெயொழித்த பக்குவர்களு மநந்தவிதமாவார்கள்-எ-று.

தீவிரதர பக்குவனதறிவு சிவத்தையேயன்றி மற்றெண்ணையும்ப ருத்தறாடாதாகலிற் சாத்திரங்கள் போதாதென்றார்மந்தமந்தரதீ விரமென்னு மிம்மூன்று பக்குவரு நாலுபேதமாய் வருதலினு மிவர் க்குபதேச நாலுபேதமாகக்கூறிப் பக்குவப்படுத்தவேண்டு மாகலினு மநந்தவிதமென்றார்.

இத்திருவெண்பாவால் தீவிரதரபக்குவனுக்குக் கூறுமுபதேச மேபோதுமென்பது மற்றைய மூவர்க்கு மவர்கூறுமுபதேச மொ ழியுமன்றி வேதாகமங்களா ஆணர்த்தவேண்டுமென்பது மறிவித்தவா றுகாண்க. (கூ)

அறியாமை நீங்கி யறிவா யறிவே
யறியாம லாயிரண்டு மற்றுப் - பிறியாதார்
தன்னிழற்பின் ஞான சமாதிக்குச் சாதகரா
மந்நிலைக்கே சீவன் முத்தராம்.

அறியாமைநீங்கியறிவாயறிவேயறியாமலாயிரண்டுமற்றுப்-பிறி யாதார் - எ - று - சகலகேவலமாகிய வறியாமை நீங்கித் தம்மையரு

ளாற்கண் டவ்வருளறிவாகி முன்மலமாகிய வறியாமையினீ மன்றந்நி
ருத்தாற்போ லவ்வறிவு தானே யறியாமையாகி யதனுண் முறைந் திவ்
வறிவென்பதுந் தாமென்பது மாகிய விரண்டுமற் நிதனைப் பிரியாதி
ருப்போர்.

தன்னிழப்பின்ஞான சமாதிக்குச்சாதகரா - மற்நிலக்கேசீவன்மூ
த்தராம் -எ - று - அவ்வனமிருக்கவே தற்சுதந்தரபோதமறும் அஃது
அறிவே பனாதனுகிய ஞானசமாதிக்குச்சாதகராவ ரிச்சாதகம்வந்தவ
க்கணமே சீவன்முத்தருமாவர்-எ-று.

இம்முறைவந்தபனாயோகத்தினின்றேர்க்குச்சுகப்பேறுஞ்சுகா
தீதமுந்தாமேகிடைக்குமாகலி னந்நிலக்கேசீவன் முத்தராமென்றார்.

இத்திருவெண்பாவாற் பனாயோகத்தி னிற்போருஞ் சீவன்முத்
தராவாரென் றறிவித்தவாறுகாண்க. (சுஉ)

மகவான்கண் பார்த்தவர்க்கு மாண்பாய்த் தனக்குப்
பகமாயி லச்சைவிடாப் பண்பாய்ச் - செகமாணக்
கண்ணுரி போல்வேடக் கண்ணுடி காட்டுதவ
மெண்ணுழிகால மிருந்தென்.

மகவான்கண்பார்த்தவர்க்குமாண்பாய்த்தனக்குப் - பகமாயிலச்
சை விடாப்பண்பாய் - எ - று - இந்திரனது கண்களாற் பார்த்தபெ
யர்க்கு மாட்சிமையாயவ்விந்திரனுக் கல்குலாயவனதுள்ளே நாணம்
விடா முறைமையா யிருந்தது போல.

செகமாணக்-கண்ணுரிபோல்வேடக்கண்ணுடிகாட்டுதவ - மெண்
ணுழிகாலமிருந்தென்- எ - று - தவவேடத்தைப் பார்கின்ற சகத்
தோர்க்கு மாட்சிமையாயிருப்ப விவ்வேடத்திற்குரிய ஞாநத்தமக்கி
ன்றென்றுதம்மூள்ளே நாணமுறவேசிபோன் மிணுக்கியவேடமாகிய
கண்ணுடி காட்டப்பட்ட தவத்தா ரளவிறந்த காலமிருப்பினுமவ்வே
டத்தாற் பய னவர்க்கென்னையுள-எ-று.

அவனுக்குக் கண்களாற் பார்க்குந்தோறு மிலச்சைவரலாலிலச்
சைவிடாவென்றார், அவனை யிவர்க் குவமை கூறினமையா லிவர்க்கு
மிவ்வேடத்தைப் பார்க்குந்தோறு மிலச்சைவருமென்பதாயிற்று.

தவத்தோர்க்குரிய வுள்ளொழுக்கமான ஞானசார மொன்றுந்
தோற்றாது வடிவமாத்திரையே தோற்றினமையால் "வேடக்கண்ணுடி
காட்டுதவ,, மென்றார்.

இத்திருவெண்பாவாற் சிவஞான மில்லார்க்குச் சிவவேடத்தாற்
பயனின்றென் றறிவித்தவாறுகாண்க. (சுக)

மூன்றாவது
வேதாகமப் பொதுவி லுபதேசம்-முற்றும்.

உ

சிவமயம்.

இரண்டாவது

சத்திநிபாதத்துத்தமொழிவு.

நால்வகைச் சத்திநிபாதத் துத்தமர்களது பிரபஞ்சப் பற்றொழிவை முறையே கூறினமையா லிவ் வதிகாரத்திற்குச் சத்திநிபாதத்துத்தம மொழியென்றுபெயராயிற்று.

இவர் இத்நூற்குரியவராகலி னிவ்வதிகாரத்தின்பின் னிவ்வதிகாரம்வைக்கப்பட்டது.

சரிதாதி நால்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல் - குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ணல்வர்க் குபதேச
மானத்தையு நிகழ்த்தி னன்.

சரிதாதிநான்கினுக்குஞ் சாலோகமாதி - வருமாறெனக்களித்த வள்ளல்-குருராயன்-எ-து-சரிதை - கிரியை-யோக-ஞானமென்னுமிந் நான்கு பாதத்திற்குஞ் சாலோக - சாமீப-சாரூப-சாயுச்சிய மென்னு மிந்நான்குபதமும் வருமுறைமையை யெனக்கருளிச்செய்த வள்ளல் குருராயனுடைய திருஞானசம்பந்தப் பிள்ளையார்.

ஞானத்திற்பக்குவர்க ணல்வர்க்குபதேச-மானத்தையுநிகழ்த்தினன் -ற-து-ஞானபாதத்திற்குரிய மத்தமநாதாதீவிராதீவிரதர மென்னு மிப்பக்குவமுடையார் நால்வர் நிலக்கணமு மவர்க்குபதேசித்த முறைமையையு மருளிச்செய்தார்-எ-து.

மூப்பத்தாறு தத்துவங்களையு நியதிகளையு சரிதை, யவற்றை யறித்துநீங்கிய தன்னை யருளா லறித்தவற்றின்முடிவினிற்பது சாலோகபதம் ஆங்குத்தனக்கறிவித்த வவ்வருளாற்தெரிசித்துப் பின்னருளென்றுந் தானென்றும் பிரித்துநோக்காது தற்போதத்தை யடக்குவது கிரியை யவ்வருளே வடிவாயிருப்பது சாமீபபதம் - அங்ஙனமிருந்து தற்போதஞ் சிறிதுந்தோன்று தொழிப்பது யோக மாங்குப்பரை தானுயிருப்பது சாரூபபதம் - ஆப்பன் நீக்கத்திற்றோன்று ஞானத்தைப்பெறுவது ஞானமார்க்க வாதாத்தத்தி லதீதப்படுவது சாயுச்சிய

பதமாகலிற் "சரிதாதி நான்கினுக்குஞ் சாலோகமாதி வருமா," நிங்ங னமெனக்கொள்க. (க)

கின்னரியைத் தொட்டவர்போற் கேட்டவளவுக் களவு
சொன்னதல வெங்கள் சுவாமியுரை - மன்னடத்தி
லாநந்த மூர்ச்சிதர்கை பாடகயாழ் தன்னிலே
தானு நலம்போல மொழிந்தான்.

கின்னரியைத்தொட்டவர்போற்கேட்டவளவுக்களவு - சொன் னதலவெங்கள்சுவாமியுரை- எ- து- வருடி வாசிப்பார் தாம்நினைத்துக் கேட்ட பாட்டி னளவுக்களவு கூறுங்கின்னரியைப்போன்றியா னினைந் து விரும்விய மட்டிற்கு விம்மட்டிவிடை. கூறியதன் றெமது சுவாமிக ளாகியதிருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவாக்கு;தெங்ஙனமெனின்.

மன்னடத்தி - லாநந்தமூர்ச்சிதர்கைபாட்கயாழ்தன்னிலே - தா னுநலம்போலமொழிந்தான் - எ - து - பரமேச்சுரன் திருநடனத்தி லத்நடன வதிசயத்தைப்பார்த் தாநந்தபரவசராய்நிற்போர் கைப்பி டித்தபொன்னினு னியற்றப்பட்டயாழ்தன்னிலேதான் வாசிக்குநலம் போ லியான் கேளாதுகேட்க வெனக் குபதேசமொழிகளை யருளிச் செய்தார்-எ-து.

அவரானந்த பரவசராய் நிற்கவுந் தெய்வயாழ் வருடாது வாசி த்தல்போலப் பிள்ளையா ரானந்தாதிதரா யெழுந்தருளியிருக்கவு மவ ரது தெய்வவாக்கு நினையாது கூறிற்றென்பதறிக.

"கின்னரியைத் தொட்டவர்போற் கேட்டவளவுக்களவு சொன் னதல,, வென்றமையாற் கடாவும் விடையுந் தாமே யருளிச்செய்தா ரென்பதாயிற்று.

தெய்வயாழ்க்குமேல் வேறியா ழின்மைபோ லித்தவாசாரியர்க் குமேல் வேறுசாரிய ரிலரென்பதுங் காண்க. யாழுன்னி வாசியாதிரு க்கவும் பிறர்க்கங்ஙனஞ் செய்ததுபோற் றோற்றலிற் "றானுநலம்போ லமொழிந்தா,,னென்று திருவாக்குக் கதனையுவமையாகக் கூறினர்.

இவையிரண்டுதிருவெண்பாவானுந் தம்தாசிரியர் ஞானபக்குவர் நால்வர்க்கு முபதேசிக்கு முறைமையைத் தமக்கருளிச்செய்யும்போ து மாநந்தாதிதரா யெழுந்தருளியிருந்தேயருளிச்செய்தாரென் றறி வித்தவாறுகாண்க. (உ)

சும்மாதே பார்த்திருக்கச் சுத்தியா முத்தமர்க்குத்
தம்மாய்வார்க் கோருரையே சஞ்சீவ - மென்மேலு

மாற்றஞ் சகுனப் புள்வாக்கு மதுவுண்ட
போற்றும்பி யின்பாட்டுப் போல்.

சும்மாதேபார்த்திருக்கச்சுத்தியாமுத்தமர்க்குத் - தம்மாய்வார்க் கோருரையேசஞ்சீவம் - எ - து- தீவிரதர பக்குவர்க் கோர்மொழியுங் கூற்று ஞானசாரியர் மவுனமுத்த நே க்கமாற் பார்த்திருக்கவே யான்ம சுத்தியாந், தீவிரபக்குவ மூடையராய்த் தற்போத மொழிப்போர்க் கப்போதஞ் சிறிதேனும் பதையாதொழிதற் கேதுவாய்க்கூறுமோர் மொழியே சஞ்சீவம்போன்று சுத்தியாம்.

மென்மேலு - மாற்றஞ்சகுனப்புள்வாக்குமதுவுண்ட - போற் றும்பியின் பாட்டுப்போல் - எ - து:- மந்தரபக்குவர்க்கு விட்டிசை யாதிசைக்குஞ் சகுனப்புள் வாக்குப்போலச் சிற்சிலசொற்களாற் றெ ளிவிக்கச் சுத்தியா மந்தபக்குவர்க்கு மதுவை நிற்றையுண்டதும்பி யி டையருது பாடும் பாட்டுப்போல வேதாகம. சாத்திரங்களானு நா நாவுபாய யுத்திகளானு மிடையறு தறிவிக்கச் சுத்தியாம்-எ-று.

திருநோக்கக் குறிப்பா லந்நிலை தெரிந்துகோடலிற் சும்மாதே பார்த்திருக்க வென்றுஞ், சஞ்சீவத்தாலுடலஞ் சுத்தியாவதுபோல வோருரையா லான்மசுத்தி பெறுதலிற் சஞ்சீவமென்றுஞ், சகுனப் புள் வாக்காற் றுணிவுத்தபொருள் கிடத்தல்போற் சிற்சிலசொற்க ளான் மெய்ப்பொருளைத் தெரிந்து கோடலிற் சகுனப்புள்வாக்குப் போலென்று மூர்ச்சித்துக்கிடந்த பெண்பிப்பியை யாண்டும்பிசிறந் துகொண் டிடையறுது பாடியாடவே யதற்கம்மூர்ச்சை தெளித்தி தனோடு பறந்து கூடல்போல நாநாவுபாய யுத்திகளா னிடைவிடா த றிவித் தறிவின தாணவ மூர்ச்சையை நீக்கித் தம்மோடு சேர்த்தலாற் றும்பியின் பாட்டுப்போலென்று கூறினர்.

சுத்தியாவது, சகலகேவலங்களுநீங்கி யவற்றின் வாசனையோடு மூந்ததற்போந்தமுமொழிதல்"மென்மேலுமாற்றஞ்சகுனப்புள்,, என் றதனு லாந்ததையென்பதாயிற்று, சகுனப்புள் வாக்குப்போலென்று மதுவுண்ட தும்பியின் பாட்டுப்போலென்றுங் கூட்டுக.

இத்திருவெண்பாவான் ஞானசாரிய ருபதேசத்தா னுல்வகை பக்குவருந் தெளித்துகொள்ளு முறைமை யறிவித்தவாறு காண்க.(ச



மூலமுதிர நாண முதிர்ந்தடங்கி மூடிக்
கலவியிலே நக்கினதைக் காட்டற் - சலனபய

ஞனலுந் தம்பனைசெய் தாதநத்த மாக்குவது
போனலா மிந்தப் பொருள்.

முலைமுதிர்நாண முதிர்ந்தடங்கிழுடிக் - கலவியிலேதக்கினத்தீத
க்காட்டல்-எ-து-ஓர்பேதைப்பெண்டனது முலைமுதிரமுதிர்ந்மேன்மேலு முதிர்ந்து பிறபுருடோடு முன்போன கையாடலாதி செய்யாதடங்கியம் முலையினைமறைத்தற்குத் தனது சுயபுருடனுக்குக் கூட்டாவின் கண்ணக்கினத்தைக் காட்டிவதுபோலு மொருவனறிவு முதிர முதிரமுன்போல விடயங்களிற் செல்வதற்கு நானமுதிர்ந் தவிடயங்களிற்செல்லும் போதத்தை யுள்ளடக்கித் திருவருளின் மறைத்து ஆதநத்தத்திற் கொப்பித்து நிற்றல் அப்போதத்தை யாதநத்தத்திற்கெகப்பிக்கவெனி னங்ஙன மொப்பிக்குமாறே நிலீலாமல்.

சலனைபய ஞனலுந்தம்பனைசெய்தாதநத்தமாக்குவது-போனலா மிந்தப்பொருள்-எ-து-போதச்சலனையினாலும் விடயப்பயனை யதுபவிப்பதானலு மிவ்விடயப்பயனை நீக்கி யப்போதச்சலனையை யடக்கி யப்போதத்தை யாநத்த மயமாக்குவ தானலு மிவ்வாதநத்தப்பொருளோ ரியல்பிற்றாய்த் தோன்று தங்ஙனஞ்செய்வனபோமா யினிப் பொருளோ ரியல்பிற்றாய்த் தோற்றுவதாம்-எ-று.

முலைமுதிர்ந்த பெண் ணம்முலையையு மல்குலையும் பிறபுருடனுக்குக் காட்டாது மறைத்துச் சுயபுருடனுக்குக் காட்டுதல்போ லறிவுமுதிர்ந்தோர் தற்போதத்தை விடயங்களிற் செல்லவொட்டாது மீட்டுள்ளடக்கி யதனைச் சிவாநத்தத்திற் கொப்பிக்கவேண்டுமாகலி னங்ஙன மூவமைகூறினர்.

போதம் விடயங்களிற் சென்றழுந்தியு மாநத்தத்திற் சென்றழுந்தியு மிங்ஙன மாறிநிற்குமெனி னுநத்தமு மாறித்தோன்றுமாகலி னுஞநத்தமாக்குவது - போனலாமிந்தப்பொரு, ளென்னீர், ஆனலுமெனபதனைச் சலனை யென்பதனோடு மாநத்தமாக்குவ தென்பதனோடுங் கூட்டுக.

இதிருவெண்பாவா லறிவாநத்தத்தழுந்திய போதம் விரித்து விடயா நத்தத்திற் செல்லாதோ ரியல்பிற்றாய் நின்றோர்க்கே யவ்வாதநத்தமாறது கிடைக்குமென் றறிவித்தவாறுகாண்க. (அ)


பஞ்சமலமும் பசுவநத்த மும்பதியு
மஞ்சு தொழிலு மவத்தைகளுங் - கிஞ்சிறிவுங்
கேட்டுச் சரிதாரி செய்துகிலேகங் கெடாக்
காட்சி மெழுகிற் கனகங்காணே.

பஞ்சமலமும்பசுவதத்தமும்பதியு-மஞ்சுதொழிலுமவத்தைகளு ங் கிஞ்சறிவுங்- கேட்டு-எ-து-ஆணவமாலை காமியந் திரொதை மாமா யை யென்று கூறப்பட்ட பஞ்சமலங்களின திலக்கணமுமிம்மலங்க ளாண் மறைபட்டிருந்தவனேகமாயுள்ள பசுவினதிலக்கணமு மிப்பசு பாசங்கட்கு முதன்மையா யேகமாயிருந்த பதியினதிலக்கணமு மப் பதியாற் செய்யாநின்ற பஞ்சகிருத்திய விலக்கணமு மிப்பஞ்சகிருத் தியத்தானடக்குஞ் சாக்கிராதியஞ்சவத்தையினதிலக்கணமுமிவ்வஞ்ச வத்தைகடோறுஞ்சூழ்ந் மான்மபோத விலக்கணமுங்கேட்டறிந்தும்

சரிதாதிசெய்துகிலேசங்கெடாக் - காட்சிமெழுகிற்கனகங்காண்- எ - து-சரிதைகிரியாயோகங்களைச்செய்து மப்பாசத்தை நீங்கிப் பதி யையடைந்து பிறவித்துன்பத்தை நீக்கமாட்டாதா ரறிவுமாற்றறி மெ, ழுகி லடங்கிய கனகம் போலுமாம்-எ று.

உளைத்தொட்டவேறிய கனகமுருக்கியெடாமையின் மெழுகின் மறைத்தாற்போலத் திரிபதார்த்தங்களினதுண்மையைக் கேட்டறித்த வறிவு சுவாநுபவத்தான் வெளியாகாது மலத்தாண் மறைந்தமையான் மெழுகிற் கனகங்காணென்றார்? அவ்வறிவுபிறருக்குக்காட்சியாய்த்தோ ற்றலானதனைக் காட்சியென்றார்.

இத்திருவெண்பாவாற் பதிபசு பாசங்களின தண்மையை வே தாகமங்களா லுணர்ந்த வு மப்பதியைச் சுவாநுபவத்தா லுணரார்க் குப் பயனிலையென் றறிவித்தவாறுகாண்க.



வாதி வடத்தினமு மாமருத்து வன்பிணியுஞ்
சாதித்த வீரன்மேற் றம்பலமுந் - தீதுபோன்
ஞானத்திலின்பை, நசிப்பித்து நானதுவா
மூனத்தை யாசொழிவிப் போர்.

வாதிவடத்தினமு மாமருத்துவன்பிணியுஞ் - சாதித்தவீரன்மேற் றம்பலமுந்-தீதுபோன் - எ-து - பஞ்சலோகங்களையும்பொன்னுக்கி னேனென்றுகூறு மிரதவாதி மிடியனையிருத்தலும் பிறர்பிணிகளெ ல்லாம் போக்கினேனென்று கூறு மகாவயித்தியன் பிணியனையிருத்த லும் பகைகளையெல்லாம் வென்று சாதித்தேனென்று கூறு மகாவீர ன்மேற் பிறர்போட்ட தம்பல மிருத்தலுங் குற்றமாமதுபோல.

ஞானத்திலின்பை நசிப்பித்து நானதுவா- மூனத்தையாசொழி விப்போர் - எ - து- சுவாநுபவத்தான் ஞானநற்றத்தை யடைதற்கே துவாகக்கூறும் ஞான சாத்திரங்களைக்கேட் டுணர்ந்தமாத்திரத்தில் யாம வ் வாணவத்தம்பெருதனை விடயச்சேற்றுள்ளெடுப்பிக் கிவ்விடயச்சே

ற்றிலழுந்திநின் றவ்வாநந்தத்தின் மயமானேமென்று கூறுங் குற்றத் தையாவர் நீக்குகிற்பார்-எ-று.

மிடிமிணிதம்பல மவரிடத்திருத்தலாற் ருஞ் சொன்னவாறு செப்பல ரலொன் றறிந்தாற்போல விடையப்பற்றுவிடாமையா னிவ்விங்ஙனங் கூறுதலேயன்றி யதனை யடைந்திலரென்பதறிக.

மிடியாதியவர்க்குக் கூறினமையால் விடையமிவர்க்கு வருவிக்கப்பட்டது இங்ஙனங் கூறுதன் மிகவுந்தோடமாகலி "ஞானத்தையாரொழிவிப்பேர்,, என்றார்.

இத்திருவெண்பாவாற் சிவாநந்தத்தைப் பெறுதிருத்தும் பெற்றேமென்று சத்தியங்கூறன் மிகவும்பாவமென் றறிவித்தவாறுகாண்க

மயலற்றூர் கேட்க மகிழ்ந்துரைத்த வார்த்தை
யயலுக் குபதேச மாகுந் - துயிலார்த்
தொறுவினப்போ னின்றகே சமூக்கு நோயு
மறுமுரைத்தோ நாமுரைப் பதை.

மயலற்றூர்கேட்க மகிழ்ந்துரைத்த வார்த்தை-யயலுக்குபதேச மாகும் -எ - று-தேகாதிப்பிரபஞ்சங்களே யானெனதென்று கருதுமயக்கமற்ற வதிபக்குவத்தார்கேட்க ஞானுசாரியா ராநந்தமகிழ்ச்சியா லருளிச்செய்த வுபதேசமொழிக ளப்பக்குவர்க்கன்றியயலிருந் தோர்க்கு முபதேசமாகுமாகலி னம்மொழிகளே.

துயிலாத்-தொறுவினப்போனின்று கேடிசமூக்குநோயு- மறுமுரைத்தோநாமுரைப்பதை- எ-று-சாக்கிரத்தினில்லாது சொற்பனத்துஞ் செல்லாதிடையான தன்மையாய்த் துயின்றுந் துயிலாத விடையனைப் போன்று கேவலசகலங்களிற் றூக்கற்று நின்றுகேட்டியிங்ஙனங் கேட்டியெனிற் றூசிற்மேலேறு மழுக்குப்போன் றேறுவதாய வாகாமிய துன்பமு மொழியு மியாமுனக்குச் சொல்லவேண்டியபுத்திமைச் சொன்னே மிதனை நீயறிதி-எ-று.

இடையன் சோற்கண் டுயிலாது துயின்று மாட்டுமணிய ரவத்தைக்கேளாதுகேட்கு முறைமைபோ லிப்போது ஞானுபதேசங் கேட்கும்போதே சகலகேவலங்க டாக்காது கேட்போ னறுபவமுற்றும் பெற்று முன்னிலைச்சுட்டி மொழிந்து நிற்பனுகவின் "தூசமூக்கு நோயுமறு,, மென்றூர், தூசமூக்குநோயுமறுமென்றவும்மையாற்சஞ்சித பிராரத்தமு மறுமென்பதாயிற்று.

அஃதெங்ஙனமெனில், கருவிகள் சடமாகலி னவைகளான்மாலவ யறிந்து கூட்மாட்டா வான்மா கேவலத்தின் மறைபட்டுக் கிடத்தலி

னவஸ்தைச்சென்று கூடமாட்டா, கருவிகளைப் பிரோகம்பண்ணி யிக்கேவல மறைப்பைநீக்கிச் சகலத்தில்வைத்துப் பெத்தத்திற் றேகா தி பிரபஞ்சங்களை யறிவிப்பது போலவுங் தோலவத்தைப்படுத்திக்கே வலத்தில வைப்பதுபோலவு முத்தியிலிக்கேவலசகலங்கடாக்காலவை த்துச் சுத்தாவத்தையிற்செலுத்திச் சுத்தத்தில்வைப்பதுந் திருவருளே யென்று மிஃதன்றிக் கருவிகளைக் கூட்டுவித்தபோ தான்மாவிற்குச்சு த்தா வறிவுதோன்றித் தானல்லாத தேகாதிதத்தைத் தானெனக் கருதிநின் றி யானே யெல்லாவற்றையுமறிவே னெல்லாவற்றையுஞ்செய்துமுடி ப்பே னெனக்கெதி ரொருவரு மின்றெனநிற்கு மிங்ஙனநிற்பதனு லி தாகிதங்களு மிவற்றுள்வரும் வினைகளுத் தொடரு மித்தொடர்ச்சியா ல்லாவிறந்த பிறவிகளி னெடுங்காலஞ் சுழல்வதின்றெனமென் றத்தட்பு ல்லறிவை விட்டுநீங்கிக் கானலை நீரென்று மயங்கிக் கண்டபோதும் நீ ரை நீரென் றுள்ளபடி கண்டபோதுந் தனக்குச் காட்டிநின்றது தனி ரொளியென்று கண்கண்டி நின்றுற்போ லான்மா பொய்ய மெய் யென்று மயங்கிநின் றறிந்தபோதும்.

மெய்யை மெய்யென்று தெளிந்துநின் றறிந்தபோதுத் திரோ பவித்து மதுக்கிரகித்து மறிவித்து நின்றதுந் திருவருளேயென்று மு ள்ளபடி யறியிற்றானென்பது மிந்தமுறையே அவன வளது வென்னு முன்னிலைக் கண்ணுந் திருவருணடப்பிக் கின்றதென்று கண்டம் முன் னிலைகளாற் றனக்கோ ரிதாகிதங்கள் வந்தகாலை யம்முன்னிலைகளை நா டாதுவினைக்டோய்த் திருவருணடப்பிக்கின்றதென்று அத்திருவருளை நாடி நிற்றலாற் பிறன்பதும்போ யெங்குந்திருவருளாய்க் காண்ட லாகாமி யமறுமென்பதும் ஞாஞசாரியர் திருபாதோக்கத்தாற் சஞ்சி தமறுமென்பது முண்மை.

மூற்சனனம்புரிந்த வல்வினை யுடலுட னகலுமென்றும் "வினை ப்போகமேயுறுந் தேகங்கண்டாய் வினைதா னுழிந்தாற்றினைப்போ தளவு நில்லாதுகண்டா,, யென்று மிங்ஙன மீச்சுரவாக்கிய ஞானிகள் வாக்கியமிருக்க நீர் பிராரத்தவினையும் போமென்ற தென்னையெனி னீண்டுக்கூறியமுறையே. நீதீஇ யான்பிறன்பதொழிந்து திருவரு ளே கண்ணுகச்சென்று சிவதரிசனம் பண்ணியதி லத்தப்பட்டுநின்ற சிவயோகி பஞ்சகிருத்தியங்களையுங்கடத்து பரமுத்தனைப்போலிருப் பலுகலினு மவன் பிராரத்தம் வருவன போற்றோன்றி யழிவதையன்றி யவனை வாதியாதாகலினு மவனுக்குப் பிராரத்த மின்றென்பதறிக இ ன்னு மப்பர் மாணிக்கவாசகர் முதலாயினோர் சரித்திரங்களினுணர்க காண்க.

(யான்பிறனென்பதனுல்வினையேறுமென்பதற்குதாரணம்.)

(திரட்டு) தானலாதொன்றுதன்னைத்தானெனக்கருதிக்கொண்டே யானெலாஞ்செய்தே னென்னுஞானமருஞானமத்தா, லீனமாம்வி னையிரண்டா மிருவினையாலுடம்பா, மூனமாருடம்பாலூழா லூழினு லாகாணண்டோ.

(சித்தியார்) யான்செய்தேன் பிறர்செய்தா னென்னதியானென் னு - மிக்கோணு ஞானவெரியால் வெதுப்பிநிமிர்த்துத் - தான்செவ் வேநின்றிட வத்தத்துவன்ருனே சேதனையளித்து முன்னிற்கும் வினை யொளித்திட்டோடி - நான்செய்தேனெனு மவர்க்குத்தானங்கின்றி ந ண்ணுவிக்கும் போகத்தைப்பண்ணுவிக்குங் கன்ம, மூன்செய்யா ஞா னந்தானுதிப்பினல்லா, லொருவருக்கும் யானெனதெனுங்கொழியா தன் றே (சிவஞானதீபம்) யான்செய்தேன் பிறர்செய்தாவொழுங்கோணீ ந்தி என்றும்மற்றும் வருவன வற்றுற்காண்க.

பிராரத்துவ மின்றென்பதற் குதாரணம் (திருவருட்பயன்) மூம் மைதரும்பவனு மூளாவா மூதறிவார்க் - கம்மையு மிம்மையேயாம் என்றுராசாரியாரும்.

இத்திருவெண்பாவா லாசாரியருபதேசங் கூறுமிடத்து மாணாக் கன் சகலகேவலங்களிற் றுக்கற்றுநின்றுகேட்பின் மூவகைவினைகளு மறுமென் றறிவித்தவாறு காண்க. (எ)

அண்டமூதலா யதந்தம் பிறப்பில் விதங்
கொண்டுநரராய்வினைகள் கூறுத்தித் - தொண்டிற்
சரிதாதி செய்து தவச்சார்பி னிற்போர்க்
கரிதான பக்குவ நாலாம்.

அண்டமூதலாயதந்தம் பிறப்பிலிவிதங் - கொண்டுநராராய்த்தொ ண்டிற்சரிதாதிசெய்துவினைகள்கூறுத்து - எ - து - அண்டசஞ்சுவே தச மூற்பீசம் சராயசமென்னு மிந்நான்கினிற் றோற்று மெழுவகை ப் பிறவியிலுண்டாகிய வெண்பத்துநான்கு நூறுயிர யோனிபேதங் களினு மதந்த மூருக்கொண்டு மாறிமாறிச்சுழன் றவைதொலைத்துப் பின்பு நரவடிவுகொண் டிவ்வடி வதந்தங்கோடியிற் சிவபுண்ணியமே ரீட் டச்சிவ புண்ணியத்தாற் சிவத்தொண்டு பூண்டிச் சிவத்தொண்டி னுற் சரிதை - கிரியா யோகங்களைச்செப் திச்சரிதை கிரியாயோகங்க ளா விருவினையொப்பு மலபரிபாகம்பிறந்து

தவச்சார்பினிற்போர்ச்-சரிதாதிபக்குவநாலாம் - எ - து - உயிரிச் சார்பு பொருட்சார்புகளே நீத்துத் தவச்சார்பி னிற்போர்க்குக் கிடை

த்தற்கரிதாகிய மந்தமந்ததரந் தீவிரந்தீவிரதரமெனப் பக்குவநான்
குள - எ - து.

இத்திருவெண்பாவானிருவினையொப்புமலபரிபாக முடையோ
ர்க்குப்பக்குவ நால்வகையாயிருக்குமென் றறிவித்தவாறுகாண்க.

மேலைச் சுகம்வெறுத்து மேலொடுகீழ்றுவெறுஞ்
சாலப்பொய் யாயுடலார் தானுரித்தன் - மூலமா
ரென்று தெரிவிப்பாரை யெய்துவோ மென்றிரண்டா
யொன்றுபடத் தேட்ட முதிக்கும்.

மேலைச்சுகம்வெறுத்துமேலொடுகீழ்றுவெறுஞ்-சாலப்பொய்யா
யுடலார்தானுரித்தன்-மூலமா ரென்று-எ-து-மேலாகிய வனிதாதி சுகங்
களைவெறுத்து மேலடையும்பதமுத்திகளினும்பூலோகபோகத்தினும்
விருப்பற்றவைகளை யெல்லா மிகவும் வெறும் பொய்யாய்க்கண் டிவ்
வுடலுன் யாது இதனுளிருத்த நானியாவ னெனக்குமூதல்யாவுள்ளபதி
யாதென்று விசாரித்து நிலை யெய்மா றறியக் கூடுவதில்லை யாகலின்.

தெரிவிப்பாரையெய்துவோமென்றிரண்டா-யொன்றுபடத்தே
ட்டமுதிக்கும்-எ-து-இவற்றை யறிவிக்கு ஞானுசாரியரை யடைவோ
மென்றுகருதித்தானென்றுஞ்சிவமென்று மிரண்டாய்ப்பகுத்தறிவ்தா
யபின்னர்ச் சிவத்தோ டொன்றுக விங்ஙனம்பகுத்தறிவ தொன்றுக்கு
மத்தகுரூனுசாரிய ரெங்குளரென்று தேடித் தேட்டம்பிறக்கும்-எ-து.

மூன்போன் மெய்யாய்த் தோன்றுமையின் "வெறுஞ்சாலப்
பொய்யா,, யென்றார்.

இத்திருவெண்பாவாற் பக்குவர்க்கு ஞானுசாரியரைத்தேடுந்தே
ட்டமிங்ஙனம் பிறக்குமென் றறிவித்தவாறு காண்க. (கூ)

வேர்க்குங் கண்ணீர்தளும்புங் கம்பிக்கு மெய்த்தடுங்கும்
வார்த்தைத் தழுவு மனம்பதறும் - கார்க்கதமாய்க்
காத்து முரோமாஞ் சலியாகுங் காதலித்தாரீக்
கேய்ந்த குணங்கா ணிவை யெட்டும்.

வேர்க்குங்கண்ணீர்தளும்புங்கம்பிக்குமெய்த்தடுங்கும்-வார்த்தை
தழுவுமனம்பதறும் - கார்க்கதமாய்க் - காத்துமுரோமாஞ்சலியாகும்
- எ - து - உடற் கண் வேர்வை யரும்புங் கண்களி லானந்த நீரொழுகு
முண்ணடுக்கு மூடனடுங்கும் வசனங் குழறு மாசாரியரை யென்றுற
க்கடைவோமென்று மனம்விம்மாத்து நரம்மேகம்போ லுள்ளெகுழ்
றி யுள்ளமெலாம் வெதும்பு முட்கி மயிர்க்கூச்செறியும்.

காதலித்தார்க் - கேட்டதருணங்காணிவையெட்டும்- எ - து- ஆங்ய விவை யெண்வகையும் ஞாஞசாரியன்ர விரும்பித் தேடுவோர்க் கியைந்தருணங்களாம்-எ-று.

இத்திருவெண்பாவான் ஞாஞசாரியனைத் தேடும்போது பிறக்குங்குணமறிவித்தவாறு காண்க.

அரைநோட்டஞ் சித்தை பெருமூச் சறியாச்
சுரமூட்ட மெல்லாந் துறத்த - லுரைதோற்ரு
மான மவுனம் விகள மற வைசா
வான விவைபத்து மவத்தை.

அரைநோட்டஞ்சித்தைபெருமூச்சறியாச்- சுரமூட்டமெல்லாந் துறத்த - லுரைதோற்ரு - மானம் - எ - து - மனஞ் சகமுகத்தைவிட்டகமுகமாய் நிற்றலினருகியநோக்கமுமெப்போது ஞாஞசாரியரை யறிந்தடைவோமென்னுஞ் சித்தனையு மவரை நினைக்குந் தோறு நெட்டியிர்ப்பெறிதலு மிந்நினைவு மேலீட்டாற் பிறரா லறியக்கூடாத சுரமே லெழுதலு மிதனு ணுணுறக்க முதலியவெல்லாந் துறத்தலு மிதனைப் பிறருக் கியாதென்று சொல்கோமென்று சொல்லாதடக்குமாண்மும்.

மவுனம்விகளமறவைசா - வானவிவைபத்துமவத்தை - எ-து.இம்மானத்தா லொருவரோ டொன்றுஞ் சொல்லாதிருக்கு முவுனமு மிங்ஙனங்கூறும் விசாரமேலீட்டாற் பித்தமேறலுமிந்தவவத்தைகள்படுங்காலத்து மத்ஞாஞசாரிய ரெதிர்ப்படாராயின் மூர்ச்சித்தலுமிறத்தலுமாகிய விவைபத்தும் பக்குவர்க்குத்தோற்று மவத்தைகளாம்-எ-று.

மறவை சாவென்னு மிரண்டவத்தையுந் தீவிரதர பக்குவர்க்கெனக்கொள்க.

இத்திருவெண்பாவான் ஞாஞசாரிய ரெதிர்ப்படாதபோ தவர்க்கிங்ஙன மவத்தைக டோற்று மென்றறிவித்தவாறுகாண்க. (ஙக)

தேட்டந் திரண்ட திருமேனி யுட்புறம்பாய்க்
காட்டு மளவே களைபுரண்டு - கேட்ட
வதிபக்கு வத்தார்க் ககம்புறமென் ரூறு
விதிவைத்த தீக்கையாமென்.


தேட்டந்திரண்டதிருமேனியுட்புறம்பாய்க்-காட்டுமளவே-எதமதுயிருள்ளிருந்தும் தெரியாது தாந்தேடித் தேட்டமாகிய பொரு

நந்தந்தானே திரண்ட ஞானசிரியர் தமது திருமேனியை யவர் கண ணாக்காணும்படி புறம்பாய்க் காட்டுமாத்திரத்திலே.

களைபுரண்டு - கேட்ட-வதிபக்குவத்தார்க்கம்புற்மென்றுறுவிதி லவத்திதீக்கையாமெண்-எ-து-அல்லெனு மாறு களைபுரண்டெழுந்து ர்தவல்வாசாரியரைப் பலதரம் வலம்வந் தட்டாங்கமுதலிய வணக்கஞ் செய்து பின்னெழுந் தஞ்சலியத்தராய் நின் றுபாத்தக்கண்ணீரொழுக வநேகதோத்திரம்பண்ணி யெமது சுவாமிகளே படியேங்கட்கிவ்வுடல் வந்தவாறியர திவற்றுளிருந்தயா மியாவ ரெமக்கு முதலாய்ள்ள மெய் ப்பொருள் யாதென்றுகேட்ட வதிபக்குவமுடையோர்க்கு வேதாகம ங்களில் விதித்துவைத்தபடி யவர்பண்ணுந்தீக்கை யகத்தீக்கை மூன்று புறத்தீக்கை மூன்றென் றுறுவகையா யிருக்குமென் றறிந்-எ-து.

"தீக்கைகளாறுவன,,திருநோக்கம்-பரிசம்-வாக்கு-பாவனை-நூல்-யோகமென்பன,இவற்றுட்டிருநோக்கம்பாவனை யோகமென்னுமிம் மூன்றுமகத்தீக்கை-பரிசம்-வாக்கு - நூலென்னுமிம்மூன்றும்புறத்தீக் கையெனக்கொள்க, உள்ளென்பதையுயிருள்ளிருந்து மெனக்கொள்க.

இத்திருவெண்பாவான் ஞானசாரியர் தமக்கெதிரே யெழுந்தரு ளியபோது பக்குவர்வுணங்கி விளவுமுறைமையு மிவர்க் கவர் பண்ணு ந்தீக்கை யிவையென்பது மறிவித்தவாறு காண்க. (அ2)



பரிசித்துஞ் சித்தித்தும் பார்த்து மல மாயைக்
கருமத்தை யெல்லாங் கழற்றிச் - சரிதாதி
வாதனையாம் போத மயக்கத்தை வாக்காலே
போதைசெய்து போக்கிவிடப் போம்.

பரிசித்துஞ் சித்தித்தும் பார்த்துமலமாயைக் - கருமத்தையெல் லாங்கழற்றி-எ-து-பறவை மூட்டையைச் * செட்டையாற் பரிசித்தல் போன் மாணுக்கனைக் கரசரணங்களாற் பரிசித்து மாமைகளைக்கணிரு த்தமூட்டையைத் தன்மனத்திற் பாவித்தல்போ லவனைத்தமதருளுரு வாய்ப் பாவித்து மீன் றனது சினையைப்பார்த்தல்போ லவனைத் தம துகிருபைப் பார்வையாற்பார்த்து 'மாணவமல மாயாமலங் கன்மம லமாகிய விவையெல்லா நீக்கிச்

சரிதாதி-வாதனையாம்போத மயக்கத்தைவாக்காலே-போதைசெ ய்துபோக்கிவிடப்போம்-எ-து-சரிதை-கிரியா-யோகங்களைச்செய்யும்

* செட்டையாற் பரிசித்தன் முதலியன வவ்வவ் மூட்டைகடந் தம் பிருவ மடைதற் கென்றறிக.

வாசனையாகிய தற்போதமயக்கத்தை நீக்குதற் பொருவாகிய வுப்தேச மொழிகளைத் திருவாக்காற் போதித்து நீக்கப்போம்-என்று.

யோகத்தைப் பாவனையுள்ளடக்கி ஞானவாக்கிலடக்கி யவ்வாறையுமீண்டு நானோர்க் கூறினர்.

இத்திருவெண்பாவான் ஞானசாரியர் மாணாக்கனுக்குத் தீக்கையான் மும்மலங்களையுந் தற்போதத்தையு நீக்குமுறைமை யறிவித்தவாறுகாண்க. (அசு)

காலமறை தேசமறை கன்மமறைபோற் காண்பாரும்
பாலுணும் புள்ளிப்பிமீன் பக்கிதீக் - காலு
மிருட்பினீர் மின்னலிலே யேற்றபணம் பார்ப்பார்
தரும்பொருளைக் கொள்ளுவார் தாம்.

காலமறை தேசமறை கன்மமறைபோற் காண்பாரும்-என்றது-மூன்றேர் காலத்தோர்பொருளை யறியா திருந்து பின்னேர்காலத்ததனை யறிந்துகொள்ளுங் காலமறைபோலு மோர்தேசத் தறியாதிருந்தபொருளை யோர்தசத்தறிந்துகொள்ளுந் தேசமறைபோலு மூன்மணியென் றறியாதிருந்தும் பின்னதினோட்ட மறிவாரோடும் பழகுமணியென் றறிந்துகொள்ளுங் கன்மறைபோலு மாசாரிய ரூக்கிரகித்த பொருளை யறிந்துகொள்ளுவாருமுள ரஃதன்றி.

பாலுணும்புள்ளிப்பிமீன்பக்கிதீக் காலு- மிருட்பினீர்மின்னலிலே யேற்றபணம்பார்ப்பார்-தரும்பொருளைக் கொள்ளுவார்தாம்-என்று-பாலுண்ணு மல்லப்புட்போலுஞ் சிப்பிபோலு மீனுண்ணுங் கொக்குப்போலு முலையிலெழக்காய்ந்த விரும்பினீர்போலுமின்னலொளியிலேற்கப்பட்ட பணநோட்ட மறிவார்போலு மவ ரருளிச்செய்த பொருளை யங்ஙன மேற்றுக்கொள்ளும் பக்குவருமுளர்-என்று.

ஆசாரியரநுக்கிரகித்தபொருளக்காலத்துத்தோற்றுதிருந்து சின்னட்குப்பின்னர் தம்முள்ளே தெரிந்துகோடலாற்காலமறிதலென்று மவர்கொடுத்தநூலிற் றெரியாதிருந்த தந்நூற் பொருளைக்கூறு மற்றேர் நூலிற்றெரிந்துகோடலாற்றேச மறையென்றுந்தாங்கற்றநூல்கற்றோரோடும் பழகித்தெரிந்துகோடலாற்கன்மறைபோலென்றுங்கூறினர்.

அன்னம்நீலாநீக்கிப் பாலுண்டாற்போற் சரிதாதிகளைநீக்கி ஞானமொழியைக்கோடலாற் பாலுண்ணும்புள்ளென்றுஞ்-சிப்பி-சோதி கண்முழக் கங்காற்றிருந்து தூளிவிழுந்தமாத்திரத்தில் வாய்மூடிக்கொள்ளுதல்போ லெப்போது, கூறுவானென் றிதயமலர்ந்துகேட் டங்ஙனங் கேட்டபொருளை யுள்ளடக்கிப் பயன்படுத்திக்கோடலா னீர்ப்பி

யென்றுங் கொக்குமூலைக்கண் ணசைவறநின்று மீன்வந்தழிக்க வருதல்போற், சித்திரப்பாவைபோ லசைவறவிருந்து பயன்றருமொழி வருந்தோறு மேற்றுக்கோடலான் "மீன்பக்கு,, யென்றும்இரும்புதா மென்றுநீர்மாத்திரமெடுத்துக்கொண் டதனைமீளவிடாதிருத்தல்போ லத் தமக்குவேண்டிய வுபதேசமொழிகளே யேற்றுக்கொண்டு மீளவி டாதிருத்தலா லிரும்பினீரென்றுங் கட்கூர்மையால்விளைந்து மின்ன லொளியிற் பணம்பார்ப்பதுபோ லறிவுகூர்மையா லந்நீக்கரத்திற்கூ றிய மொழிகளி னருத்தமெல்லா மறிந்துகோடலின்.

"மின்னலிலே யேற்றபணம்பார்ப்பா,, என்றுங்கூறினர்.

காலமறையாதி மூன்றற்குமின்ன காலத் தின்னபொரு ளுளதென் றும் மின்னதேசத்தி னின்னபொரு ளுளதென்றும் மின்னமலக்கப்பா' வின்னபொரு ளுளதென்றுந் தமக்குத்தனதுள்ளவன்கூற வம்மொழி யை புன்மையாகக் காண்பரர்போற் காண்பாருமுளரென்றுமாம்.'

இத்திருவெண்பாவா லாசாரியருபதேசித்தபொருள்களே மாணா க்கரிம்முறைமைகளா யேற்றுக்கொள்வாரொன் றறிவித்தவாறுகாண்க.

பதியிறக்கக் கேட்டிறந்த பத்தினிபோற் பால்போ
லதிமோகி தீப்புகல்போ லன்பாம் - விதவையர்போற்
கன்னன் கடையிற் கொடைபோலக் காணலாந்
தன்னையிழவா திழுத்த முன்.

பதியிறக்கக்கேட்டிறந்த பத்தினிபோற்பால்போ-லதிமோகிதீப் புகல்போல்-எ-து - பதியிறந்தானென்று பிறர்கூறக்கேட்ட வக்கணத் திற்றானுயிறந்த பதிவிரதைபோலுங் கடைகாலிருந்துகவிழ்ந்த பால் போலுந் தனது புருடன்மே லதிமோகியாயிருந்துளா ளவனிறந்த காலத் தவனோடு மக்கினிப்பிரவேச மாதல்போலும்.

அல்பாம்-விதவையர்போற்- கன்னன்கடையிற்கொடைபோலக் காணலாந்-தன்னையிழவாதிழுத்தமுன்-எ-து- புருடனிறந்துபோயபின் னரு மூன்ன ரன்பு விடாதிருந்த விதவையர்போலு மறுமைகுறித்தீ ட்டிய புண்ணியமெல்லாமோரந்தணனுக்குக் கன்னன்றன் றேசாந்தி யத்திற்கொடுத்த கொடைபோலு மாசாரிய ருபதேசித்த மொழிகளே யுட்கொண்ட பக்குவர்தம்மை யொழியாதொழித்தற்குமுறைமையைக் காணப்படும்-எ-று.

கேட்டவக்கணத்திறந்தாரைப்போலுபதேச மொழியைக்கேட்டவக்கணத்திற்போதமிறத்தலிற் "பதியிறக்கக்கேட்டிறந்த பத்தினிபோ லென்றும், பாலெல்லாங் கவிழ்ந்ததாயினு மதனுள்வாசனை யிருத்தல்

போற் போதமிறத்ததாயினு மப்போதவர்சனை யிருத்தலிற் "பால் போ,, லென்றுஞ்சின்னுழிகை சென்றபின்னர் தீப்புகல்போற் சின்னு ளிற்போத மிறத்தலி னதிமோகி தீப்புகல்போலென்றும் புருடனெ டிறவாதிருந்து தேகபோகங்களை வெறுத்திருத்தல்போ லியானென தென்றெழும் போதவெழுச்சியை யடக்கியிருத்தலின் விதவையர் போலென்று மொன்றையுங்குறியாது கொடுத்தல்போலொன்றையுங் கருதாது எல்லாவற்றையும் விடுத்தலிற் "கின்னன்கடையிற் கொடை போ,, லென்றுங் கூறினர்.

இத்திருவெண்பாவா லாசாரிய ருபதேசித்தபொருளை யுட்கொ ண்டபக்குவர் தற்போதமொழிக்கு முறைமையை இங்ஙனமென் றறி வித்தவாறுகாண்க. (ம)

மாற்றுப் பலவ்கையாம் பொன்னோட வைப்பான்போற்
றேற்றிச் சிவாகமத்தாற் செப்புகினு - மேற்ற
பரிபாகத் தாலே பழுப்பாம் பலவு
மொரு பாகமன்றென் றுணர்.

மாற்றுப்பலவகையாம்பொன்னோடவைப்பான்போற்-றேற்றிச் சிவாகமத்தாற்செப்புகினும் - எ - து - பலவகையாய்த்தோற்று மாற் றுப்பொன்களைப் பத்துமாற்று மாக்குதற்பொருட்டுப் புடம்போடு மொருவனைப்போலும் பக்குவர் நால்வர்க்கு மோர்படித்தாற் சிவாக மத்தாற் றெளிவித்துக்கூறினும்.

ஏற்ற- பரிபாகத்தாலேபழுப்பாம்பலவு - மொருபாகமன்றென் றுணர் - எ - து - மாற்றேற்றமாயிருந்தபொன் பரிபாகத்தான் மூன் பழுப்பாகுமன்றிக் குறைந்த மாற்றுயர்ந்தமாற்றுக்களாகிய பலபொ ன்களு மொருபாகமாப் பழுப்பாகுவ தன்றதுபோ லுயர்ந்தபக்கு வனுக்கு மூன்னர் ஞானமேறுமன் றியெல்லார்க்குமோர்பிரகாரமாய் ஞானமேறுதென்றறிந்-எ-து.

தாழ்ந்தமாற்றுப் பொன்களைப் புடம்போடுந்தோறு மிடைகு றைத்து மாற்றுயர்தல்போலத் தாழ்ந்தபக்குவர்க்குச் சிவாகமத்திற்கூ று தர்னுவுபாய்புத்திகளை யுபதேசிக்குந்தோறும் பாசங்குறைந்துஞா னமேறுமென்பதுங் காண்க.

இத்திருவெண்பாவா லாசாரிய ருபதேசிக்குமொழி யோர்பிர காரமாயினும்பக்குவவுயர்ச்சிதாழ்ச்சிப்படி ஞானமேறுவதன்றியோ ர்படித்தாய் ஞானமேறுதென் றறிவித்தவாறுகாண்க. (ஙசு)

கல்லியுருவாக்குங் கழற்றியிலே யில்வாழ்க்கைச்
சில்லநீர்போலத் தெளித்துவருந் - தொல்லுலகங்
கான்றசோ றருங் கதலித்தண் டைக்கனலி
லூன்றல் போன் ஞான முதிக்கும்.

கல்லியுருவாக்குங்கழற்றியிலேயில்வாழ்க்கைச்- சில்லநீர்போலத் தெளித்துவரும் - எ - து - கல்லினேயோர் பாலைவடிவாக்கு முறைமை போ லருள்வடிவாக்குதற்பொருட்டி மந்தபக்குவர்க் குபதேசமொழி களாற் பாசத்தை நீக்குமிடத்துத் தேறிட்டநீர் தெளித்து வருதல்போ லவர்க்கில்வாழ்க்கை யிழந்தாரியாமாறென்று தெளிவுபிறந்துவரும்.

தொல்லுலகங்-கான்றசோ றருங்கதலித்தண்டைக்கனலி-லூன்றல் போன்ஞானமுதிக்கும் - எ - து- பழையதாகவரு மிப்பிரபஞ்சங் கக் கினசோறுபோ லருவருப்பாகத்தோற்றும் வாழைத்தண்டை யக்கினி யிற்சுடுதல்போ லவர்க்கு ஞானந்தோன்றும்-எ-து.

பிரித்தசேறுந் தெளித்தநீருங் கலந்துவருதல்போல் வாழ்க்கை யிற் பற்றும் பற்றின்மையுங் கலந்துவருதலிற் றெளிந்துவருமென்றுர் வாழைத்தண்டைப் பன்னூட் பல்காட்டத்தாற் சுடல்போ லிவர்க்குப் பன்னூலிற் பற்பல வுபதேசமொழிகளான் ஞானி மேறுமென்பதறிக.

இரும்பை வடிவாக்கு மியல்பினர்க்குப் பச்சை
மரஞ்சுடுமா போன்ஞானம் வாய்க்கு - மிருந்தவிட
நீர்த்தா மரையிலைபோ னீக்கு முலகமெலாம்
பேய்த்தேர் போற்றோன்றும் பிரிந்து.

இரும்பைவடிவாக்குமியல்பினர்க்குப்பச்சை-மரஞ்சுடுமாபோ ன்ஞானம்வாய்க்கும்-எ-து-இரும்பினேயோர்பாலைவடிவாக்கு முறை மைபோற் பாசத்தைநீக்கி யருள்வடிவாக்கப்பட்ட மந்தரபக்குவர்க் குப் பச்சைமரத்தை யக்கினியாற் சுடுமாறுபோன் ஞானம்பலிக்கும்.

இருந்தவிட-நீர்த்தாமரையிலைபோனீங்குமுலகமெலாம்-பேய்த் தேர்போற்றோன்றும்பிரிந்து - எ - து - தாமிருந்தவில்வாழ்க்கை தாம ரையிலை நீர்போற் கூடவிருந்து மதிற் கூடாதுநீங்குவர், பிரபஞ்சமெ ல்லா மவர்க்கன்னியமாகக் கானற்சலம்போற் றோன்றும்-எ-து.

சிலகாட்டத்தாற் பச்சைமரஞ் சுடல்போற் சிலவுபதேசமொழி களா லிவர்க்கு ஞானமேறுமென்பதறிக. (அ)

மாப்பாவை போலுடம்பின் வர்த்தனையை மாற்றிக்
கொய்திக்கக் கவர்வதுவாங் காமித் - திருந்த

மனைபொதுவின் மண்டபமும் வானோர்கள் வாழ்வுங்
கனவெனவே தோன்றியிடுங் காண்.

மரப்பாவைபோலுடம்பின்வாதனையைமாற்றிக் - கரித்திடுகவர்
வதுவாம் - எ - து - மரத்தினையோர் பாவைவடி. வாக்குதல்போ லருள்வடிவாக்குதற்பொருட்டித் தீவிரபக்குவர்க் குடம்பின்வாதனையாய பொறிகரணமுதலியவற்றைநீக்கி ஞானதேகையுணர்த்தக்கரித்தியேற்று க்கொளல்போன்ஞானமுண்டாம்.

காமித் - திருத்த மனைபொதுவின் மண்டபமும் வானோர்கள் வாழ்வுங் - கனவெனவேதோன்றியிடுங்காண் - எ - து - தான்சித்திரு த்த மனைவாழ்க்கை நாலுபேருங் கூடியிருக்கும் பொதுமண்டபம் போலாகுங்கேள்வியாலறியப்பட்ட விந்திராதிதேவர்கள் செல்வமுஞ் சொற்பனம்போற்றோற்றும்-எ-து.

உடம்பின் வாதனையைமாற்றி யென்றமையா னிவர்க்குப் போக வாதனை மாற்றவேண்டிவ தின்றெனத்தாயிற்று. வானோர்கள்வாழ்வுங் கனவெனவே தோன்று மென்றமையா னரர்வாழ்வு சூழ்ந்திக்காட்சி போற் றோன்றுமென்பதாயிற்று.

இருத்த வென்பது இருத்த வென்று வலித்தல் விகாரமாய் வந்தது. ()

வெண்ணெயுறு பாவையர்க்கு ஞானம் விளக்கின்மே
லண்ணின்மயிர் பஞ்சாகு மாசையில - கண்ணீ
ரொழுகும் பொழுதறியா துள்ளுருகி விம்மி
யழுது சிரிப்பார் புளகமாம்.

வெண்ணெயுறுபாவையர்க்குஞானம்விளக்கின்மே - லண்ணின்மயிர் பஞ்சாகுமாசையில -எ-து.வெண்ணெயினப்பொருந்தாநின்றவோ ர்பாவையாக்குதல்போ லருள்வடிவாக்கப்பட்ட தீவிரதரபக்குவர்க்கு விளக்கின்கொழுந்திற்பிடித்தவண்ணிலின் மயிர்போலும்பன்னியபஞ் சுபோலும் பாசநீங்கிஞானமுண்டா மவர்க்கொன்றினு மாசையின்று

கண்ணீ - ரொழுகும்பொழுதறியா துள்ளுருகிவிம்மி - யழுது சிரிப்பார்புளகமாம் - எ - து - ஆனந்தக் கண்ணீரோடும்போதுந் தா மறியா துள்ளமெல்லா நெக்குநெக்குருகி விம்மிவிம்மி யழுதுசிரிப் பாரவர்க் குடம்பெல்லாம் ரோமாஞ்சலியாம்-எ-து.

அழுவது முன்பட்ட பிறவித்துன்பங்களேநோக்கி. சிரிப்பது துன்பங்களேயெல்லா மொருகணத்தில் மாற்றிய வாசாரியர்தஞ்சயத்தை நோக்கி யெனக்கொள்க.

பிரபஞ்சத்திலிம்மே லில்வாழ்க்கை மேலுடம்பின் மேலாகியமூ
ன்றிடத்து மவர்க்காசை யின்மையாற் பொதுப்பட வாசையிலையெ
ன்றார்.

கஞ்சியென்னுந் திருவெண்பாமுதல் இந்தாலுக்கு திருவெண்பா
வானுமந்தமுதலிய தாலுக்கு பக்குவங்களையு முடையோரை ஞாஞசா
ரியர் பக்குவப்படுத்தி யவர்க்கு ஞானமேற்று முறைமை யிங்ஙனமெ
ன்றறிவித்தவா றகாண்க. (உம்)

இங்ஙனங்கூறும் பக்குவர்க்கேயன்றி மற்றையர்க்கு ஞானம்போ
திக்தா லேறுதோவெனின் மேற்கூறுகின்றார்.

புனிசேர் பழமானுப் போற்புறம்போ லுள்ளின்
மூனைதானும் வேறுய் மூனைபோய்த் - தூனைமாண்ட
ஞகிக்குப் பாச மொழிந்ததுபோ லொப்பாருக்
காசைக் கேடானந்த மாம்.

புனிசேர்பழமானுற்போலுப்புறம்போலுள்ளின்- மூனைதானும்வே
றுய்மூனைபோய் - எ - து - முன்னர்ப் பிஞ்சாயிருந்தபோ தோடுப்
பித்தும் பிரிபடா தொன்றுய்ச்சேர்ந்த புளியம்வோடும் விதையும்பிரி
படும் பழமானுற்போன் முன்ன ரறிவுமுதிராமையிற் பிரிபடாதிருந்
த மும்மலங்களு மிப்போ தவ்வறிவு முதிர்ந்தமையான் மாயை கன்ம
மாகிய புறம்போ யிருள்ளிருந்த முனையாகியவாணவமுந் தமக்கன்
னியமாய் நீங்கி யிவற்று னேறுவதாய வாகாமிய முனையும்போய்.

தூனைமாண்ட - ஞகிக்குப்பாச மொழிந்ததுபோ லொப்பாருக்-
காசைக்கேடானந்தமாம்-எ-து-காதற்றஞகிக்குச்சரதொழிந்ததுபோ
ற் றற்போதத்தோ டெல்லாப்பாசங்களையு மிங்ஙனமொழிந்தோர்க்
கப்போதத்தாற் றேற்றமாசை நாசமே சிவானந்தப்பேறும்-எ-று.

மாயையுங் கன்மமும் புறம்போய்க் காணப்படுதலிற் புறம்பென்
று மவை நீங்கியபோதுந் தானீங்கா துயிருள்ளிருத்தலி னணவத்தை
யுள்ளின் மூனையென்று மாகாமியம் பிறவிக்கேதுவாகலி னிதனையு
"மூனை"யென்றுங்கூறினார்.

காதரு மூற்றெடர்ந்த பாச மஃதற்ற போதொழிந்தாற்போற்
போதமரு மூற்றெடர்ந்த் பாச மஃதற்றபோ தொழிதலி "ஞகிக்
குப் பாசமொழிந்தாற்போ லொப்பாருக்"கென்றார்.

தேகபோகங்களாகிய துன்பத்தை யின்பம்போன் மாறுபாடா
யத் தோற்றுவித் துயிர்க்காசை யுண்டாக்குவதாணவ மதனதுவாசனை
பேர்ந்மொழியுமளவு மிருத்தலி னதன்காரியமாகிய வாசைகெடவே

காரணமாகிய வவ்வாணவ வாசனையு மவ்வாசனையாலெழும் போதமு ங்கெடுமாகலி "ஞசைக்கேடானந்தமா,, மென்றார்.

இத்திருவெண்பாவாற் பக்குவமுடையோர்க்கே ஞானம்போதி த்தாற் பாசநீங்கி யாநந்தப்பேறுளவாமன்றி மற்றையர்க் கப்படா மண்டாகாதென் றறிவித்தவாறு காண்க. (2க)

அருண னுதயம்போற் றும்மீழ்வா ராசை
பெருகுவபோற் கப்பற் பிழைத்துக் - கரைகாணு
மாபோற் சிறையு மரும்பிணியு நீங்கியிடு
மாபோ லதிசயம்போ லாம்.

அருணனுதயம்போற்றும்மீழ்வாராசை - பெருகுவபோற்கப் பற்பிழைத்துக்-கரைகாணு-மாபோல்-எ-து-முழையிருளினெறி தெரி யாதழல்லோர்க்குச்சூரிய னுதயமான தீபோலுந் தம்மால்விரும்பப் பட்டமாதர் மேலாசையுள்ளமுமறையமேன்மேல் வளர்தல்போலுந் திசைதவறிய கப்பல் தப்பித்துறைசேர்க் காணுமாபோலுஞ்.

சிறையுமரும்பிணியுநீங்கியிடு- மாபோலதிசயம்போலாம்-எ-து- விடாச்சிறை யிருந்தோர்க்கச்சிறைநீங்கியவாறுபோலுமாரோயர்க் கந்நோய்நீங்கிய வாறுபோலு மோர்காலமூங்காணுத வதிசயங்கண்ட தபோலுந் திருவருண் ஞானம் பேற்றோர்க்குத் தோற்றும்-எ-று.

முன்னராணவவிருளாற் பொய்யிது மெய்யிதுவென்றுணர்ந் தோன்று திருந்தோர்க்கிப்போ தருளொளியா லெல்லாஞ் சிவமாய்த் தோற்றலி "னருணனுதயம்போ,, லென்று மவ்வருண் ஞானத்தாற் றோன்று மாநந்தத்திற் றுமேன்மேல் மற்றதனிற் "றும்மீழ்வாராசை பெருகுவபோ,,லென்று மிந்தஞானநந்தத்தை யென்றைக்கடைவோ மென் றிருந்த தமக்கிப்போது கிட்டித்தலிற் கப்பல் "கரைகாணுமா போ, லென்றுமுன்னுடலா யிருத்தலாமிப்போ ததற்குட்புறனுய்விள ங்குஞ்சிவமாயிருத்தலிற் சிறைநீங்குமாபோலென்று முன்னிருத்தபிற வித்துன்பமிப்போ துநீங்கலிற்பிணிநீங்குமாபோலென்றுமேர்காலங் களினுங்கண்டறியாதகாட்சியாகலி 'னதிசயம்போ, லென்றுங்கூறினார்

இத்திருவெண்பாவாற்பக்குவர்க்குப் பாசநீங்கினாலன்றி தயமான போதுதோற்றுமதிசயகுண மிலையென்றறிவித்தவாறுகாண்க. (உ)

பாசநீங்கி ஞானந்தோன்றினாலன்றிக் குணங்கடோற்றுவ தில்லையெனின் மேற் கூறுகின்றார்.

உடல்பொறிக ளுட்கரணத் தோடிருணம் வாயு
விடவிடவே நாதாந்தவீடி - நடுநிலையாய்த்
தன்னெழிலும் பேரின்ப சாகரமுஞ் சத்தழிவா
லென்னபடார் கண்டறியாரே.

உடல்பொறிக ளுட்கரணத் தோடிருணம் வாயு - விடவிடவேநா நாந்தவீடிம் - எ-து-உடலமும்பொறி கரணங்களு மத்தக் காரணங்களு மவற்றுடனே ருணங்களுப் பிராண வாயுவுமாகிய விவ் வைத்தையு மொன்றென்றுயறித் துநீங்கநீங்கவேவருநாதாந்தத்துவத்தின்முடிவாகிய விடுதலையையும்.

நடுநிலையாய்த்- தன்னெழிலும்பேரின்பசாகரமுஞ்சத்தழிவா-லென்னபடார்கண்டறியாரோ-எ-து-அவ்விடுதலைக்குஞ்சுகாதீதத்திற்குநடு நிலையாய்த்தோன்றுந்தற்றெரிசனந் திருவருட்டெரிசனம் பராதெரிசனம் பராயோகம் பராயோக நீக்கத்தையு மவற்றின்மேற்றற்போ தவொழிவையு மதன்மேலாநந்தசாகரத்தையு மநுபவமாகக்கண் டதன்மேற் சிவதீதோடிரண்டற் றிருக்கின்றுரென்ன வாச்சரியப்படார் முன்னோர் காலங்களினு மவற்றைக்கண் டறியாதார்-எ-று.

உடலத்தையுள்ளபடி யறிந்துநீங்கவே யஞ்சபூதகாரியமாகியபு றக்கருவிகளிருபத்தைந்து மீடணைத்தியங்களுந் தசநாடிகளுநீங்கு ம்ஞானேந்திரியங்களே யுள்ளபடியறிந்துநீங்கவே யவற்றுனபகரிக்கப் பட்டசத்தாதிகளைந்து மவ்விந்திரியங்களவ்விடயங்களே யபகரித்தபோ து தொழிற்படுங்கன்மேந்திரியங்களைந்தும் விடயிகரிக்கப்பட்ட வச னாதிகளைந்து மிவ்விருவகை யிந்திரியங்கட்கு மிடமாய்நின்ற பூதங்களை ந்து நீங்கு மந்தக்காரணங்களே யுள்ளபடியறிந்து நீங்கவே சூக்குமை யாதிவாக்குநான்குநீங்குமுக்குணங்களேயுள்ளபடியறிந்துநீங்கவேயிம் முக்குணகாரமான மூலப்பிரகிருதி நீங்குமூலப்பிரகிருதி நீங்கவே யி தாதிதத்களாய்வருங் கன்மஞ்சீவனமின்றி நிற்குமாகலின் துக்கன்மத் தைக்கூட்டாநின்றகாலமுமதனைவரைந்துநிற்கின்ற நியதிநீங்குமிவை நீங்கவே யான்மாவிற்குப்புசிப்பின்மையா னிச்சா ஞானக்கிரியை கி வியாதாகவிற் கிரியையை யெழுப்புங்கிரியை மறிவையெழுப்பும் வித் தையு மாசையை யெழுப்புமிராகமு மாசைப்பட்ட பதார்த்தத்தில் மயக்கும் புருடனும் நீங்குமிங்ஙனங் கலாதிகணீங்கவே காலத்தையு நியதியையுங் கலையையும் பிரேரித்த சக்தி தத்துவமும் வித்தையைப் பிரேரித்த சுத்தவித்தையு மிராகத்தைப் பிரேரித்த வித்சுரதத்துவமும் புருடனைப் பிரேரித்த சிவதத்துவமு மூலப்பிரகிருதியைப் பிரேரித்த சாதாக்கிய தத்துவமுநீங்கு மிங்ஙனஞ் சுத்ததத்துவங்கணீங்கவே பிரா ணவியுவ மாத்திரமியங்கு மிப்பிராணவாயுவையுள்ளபடியறிந்துநீங்

மேவ தசவாயுக்களு மசபை நாதமு நீங்குமிம்முறையே நத்துவந்தொ ண்ணூற்றாறு நீங்குமாகலின் "விடவிடவே நாதாந்தவீடும்,, என்றார்.

நடுநிலையாயென்றதனாலும் பேரின்பசாகரமு மென்றதனாலுந் தற்றெரிசனமுதலிய வருவிக்கப்பட்டது.

கண்டத்தானத்திலத்தக்கரணங்களோடுங் கூடி மத்திமைவாக்கை நன்று பரியப்படுதலின் மத்திமை வாகனுக்காரணமாகிய சூக்குமை பைசந்தியு மத்திமையாற் சாரியப்பட்ட வைகரியு மந்தக்காரணங்களை நீக்கவே நீங்குமாகலி னந்தக்கரணங்களை நீங்கவே சூக்குமையாதி வாக்குகளுங்குமென்று சொல்லப்பட்டது, பிராணவாயு வியக்கதித்தை யடக்கத்தொடங்கினதுகாறு மேன்மே லியங்குமாகவதினின் றவ்வியக்கத்தைத் தன்னுலறியப்படுதலானுந் தன்னை, யஃதறியாமம்பானு மதனைச் சடமென்று மதனையறித்த வறிவு தானென்றுந் தனக்கறிவித்த துதிருவருளென்று மறிந்து தான்றிருவருளுட்டத்தினிற்கவே யதுநீங்குமெனகொள்க. கண்டமியாரே யென்றதனாலிப்போது கண்டென்பது வருவிக்கப்பட்டது.

உடல்பொறிகரணமுதலிய கருவிகளை உள்ளபடி யறிந்து நீக்குதலை "ஐம்புலநாலா மத்தக்கரணமுக்குண மிருவுளியொருங்கிய வானோர்த்த நின்றனையென்னுந், திருவெழுகூற் றிருக்கையாற் காண்க.

இத்திருவெண்பாவாலமூன்றுநாற்காலங்களினுங் கண்டமியாராகலினிப்போ தக்குணங்களவர்க்குத் தோற்றுமென்றறிவித்தவாறுகாண்க.

நிகழ்வனப் ஞானத்தாற் பாசத்தை நீங்கிப் பதியையடைந்தோ ரை மீட்டும் பாசமயக்காகவெனில் மெற்படுகின்றார்:


அறிவு மறிவாலு மறியா மலிவு
மறியிற் றடையே தவாக்குப் - பிறிவோ
வாகாயஞ் சூடறகொளி லஞ்சி யடக்களைக்குபீ
போகாது போலாம் பொருள்.

அறிவுமறிவாலுமறியாமலிவு-மறியிற்றடையே தவாக்குப் பிறிவோ - எ - று - உயிர்க்குயிரா யுள் ளும் புறம்பு மேலுங்கீழுமேவுங் விட்டுநீங்கா நிருந் தறிவிக்கு மறிவாகிய பதியையுந் தற்சத்தாதரமாயொன்றினையுமறியா தப்பதி யறிவிக்க வறிவதாகிய பாசவையு மிங்ஙனமறியும் பசுவிற்குந் தன்னையுந் தனக்கறிவிக்கும் பதியையு மறியவொட்டாது மறைத்திருந்த வறியாமையாகிய பாசத்தையு மப்பதியாலுள்ளபடி யறியினவர்க்கு மூன்றாவதாகிய தடையா தற்சன்றியப்பதியை

யோர்ணமேனும் பிரிவரோ வானு லப்பதியை யவர்பிரியாது நாடி க்கொண்டு நிற்பரோவெனின்.

ஆகாயஞ்ருறைகொளிலஞ்சியபூக்களைக்குட் - போகாதுபோலா ம்பொருள் - எ - து - எல்லாப்பொருள்கட்கு மிடங்கொடுத்திருந்த வாகாயத்தானே யப்பொருள்களைக் கொள்ளைகொளுமெனி னதற்க ஞ்சி யபூக்களை விட்டிற்புருந் தொளிக்கக்கூடாதது போ லவ்வாகாய மூதலிய வெப்பொருள்கட்கு மாதாரமாகி யிருந்துள்ள மெய்ப்பொ ருடன்னை யறிந்தோர்க்கிடம் வேறின்மையா னவனை விழுங்கிக்கொ ள்வதாம்-எ-று.

பாசத்தையறியும்போது மூப்பத்தாறுகருவிகளையு மிஃதென்ன றறிந்துசென் றவற்றின் மூடினின்ற தன்னு லவையறியப்படலாலுந் தன்னை யவையறியாமை யானுந் தனக்கன்னியமென்றுஞ் சடமென் று மறியப்படுந் தன்னையறியும்போ தக்கருவிகளை யெல்லாமறித் தவ ற்றை நீங்கி நின்ற வறிவு தானென்றுந் திருவருளாலன்றித் தற்சுதந்தர மா யறிவதிவனென்றுந் தான் கருவிகளோடு கூடியபோ தவை மய மாயு மவற்றைநீங்கித் திருவருளோடு கூடியபோ தெதன்மயமாயு மிரு த்தலிற் றன்பாசவறிவுமன்று பதியறிவு மன்றென்றறியப்படும் பதி ல்லயறியும்போது பெத்தமுத்தி காலத்தினுந் தன்னைவிட்டு நீங்கா தி ருப்பதென்றுந் தனக்கறிவீப்பதென்றும் பாசத்தைப் பிரேரகம் பண் ணுவதென்றும் ஞானனந்தச் சொரூபமென்று மறியப்படு மிங்ஙனந வுதலின் றறிந்த பசுபாசத்தை நீங்கிப் பரிபூரணமாகிய பதியையடைந் தப்பூரணமெல்லாந் தானுயிருத்தலி "னறிவிற்றடைபேதவர்க்,, கென் றும்பிரிதற்கேதுவாய போதமிறத்தலிற் "பிரிவரோ, வென்று மிங்ங ண்ம் பிரியாதிருந்தோரை மெய்ப்பொரு டன்மயமாய்க்கோடலி,,னா டுக்களைக்குட்போகாதுபோலாம்பொரு,, ளென்றுங்கூறினர். (உசு)



பொய்போல மெய்யு மறியப் பெறுப்போக
சையோகர்க் கொன்றேடுஞ் சார்பில்லை - துய்ய
விழிக்கு ஞதித்த விரிகதிர்போற் றம்மை
யழித்தறிவேயாச்சரியமாம்.

பொய்போலமெய்யு மறியப்பெறுப்போக - சையோகர்க்கொ ன்றேடுஞ்சார்பில்லை -எ - து - மூன்னர்ப்பொய்யாகிய வுடலத்தோ டுங் கூடியபோ தவ்வுடலென்றுந் தானென்றும் பிரித்தறியாத தன் மயமா யிருந்ததுபோலிப்போது மெய்ப்பொருளைத் தம்மையும்

மிரிக்கப்பெறு திம்மெய்ப்பொரு ளாதநத்தத்தோமெங் கூடிக் கல்ந்திரு த்தோர்க் கோர்பொருளோடுஞ் சார்பில்லை யஃதெங்ங்னமெனின்.

அப்ய - விழிக்குளுறித்தவிரிகதிர்போற்றம்மை - யழித்ததுவே யாச்சார்யமாம் - எ - து - எல்லாவற்றையு மெதிரிட்டறியு மாசற்ற வி ழிக்குள்ளே முன்போலெதிரிடவொட்டா தறித்த சூரியனேப்போன் ஞாதுருஞான ஜ்ஞயமென்றுந் திரிபொருளையு மெதிரிட்டறித்த வா ன்மபோதத்தை யங்ஙன மெதிரிடவொட்டாதிதனுட் சிவசூரியனுதித் தப்போதத்தையழித்துத் தானுயிருத்தலே மிகவுமதிசயமாம்-எ-று.

கதிர்புறம் புதித்தபோது கண்ட கட்குள் ளுதித்தபோது காண் டற்கிட மின்மைபோற் போதத்தாற் புறம்புபோற் றோற்றிய ஞான் சூரிய னிப்போதவொளியைத் தன்னொளியான் மறைத்துயிர்க்குளு தித்தலையா னிதற்குமெதிரித்தற்கிடமின்றென்பதறிக. (உரி)

தன்னை யிழப்பார்க்கென்ன சார்வுழி சங்கார
மென்னிலொளித் தெங்கே யிருக்கலா - முன்னே
புலிபார்க்கப் போனகதை போலிமையா நாட்டஞ்
சலியாமன் மூடித் தனை.

தன்னையிழப் பார்க்கென்ன சார்வுழிசங்கார - மென்னிலொளித் தெங்கேயிருக்கலாம் - எ - து - தற்போத மொழிப்பார்க்கு மற்றைச் சார்புக ளென்னுள்ளன. மூப்பத்தாறு தத்துவமென்பது மிதனைக் கடந்த வானந்தமென்பது மின்னியானந்தாதிதாயிருத்தலி னவர்க் கிதுவே சர்வசங்கார காலமென்று மெய்ஞ்ஞானிகள் சொல்லுவாரொ னினவர்க்கெவ்விடத் தொளித்திருக்கலாகும் ஆனுற் சிவத்தை யரு ளாலறிந் தடையவேண்டுமென்ப தென்னையெனின்.

முன்னே-புலிபார்க்கப்போனகதைபோலிமையாநாட்டஞ்-சலி யாமன்மூடித்தனை-எ-து-முன்னே புலியினைப்பார்த் தறியச்சென்றே ர்புருட னஃதிருந்த முழைக் கெதிர்ப்படுமீ தறுவாயிலவன் றேகப்ப தைப்பற வதுயிடித்துக்கொண்டதென்று கூறுங்கதைபோற்சிவத்தை யறியவேண்டுமென்று மூப்பத்தாறுகருவிகளையுங் கடந்துசென்ற ரு ணேர்திற்குத்தானுவாயி னிவன்றன்னை யிமையா நாட்டமாகியவச்சிவந் தானேயிவனதுபோதப் பதைப்பறும்படி மூடிக்கொள்ளும்-எ-று.

இமைத்தல் விழித்தலின்றிய விமையா நாட்டம்போன் மறப்பு நினைப்பின்றிய பேரறிவாகலிற் சிவத்தை "யிமையாநாட்ட,, மென் ரூர், புலிமுழையாய் நின்றுரை யதுமூடிக்கொளல்போ லருணேர் நின்றுரைச் சிவமூடிக்கோடலா னங்ஙன முவமைகூறினர்.

அறிவு மறிவானு மென்னுந் திருவெண்பா முதலிவை மூன்று திருவெண்பாவானுந் தற்போதமிழந்த ஞானிகள் சிவமயமாயிருப்பாரேயன்றி யவரைமீட்டும் பாசபசுயக்காதென் றறிவித்தவாறு காண்க. ()

அறிந்ததுவாய் நின்ற வறியாமை கண்டு
மறந்தறியார் வாழ்ந்து வாழ்ந்த - வெறும்பாழ்
விளைந்தசுகஞ் சொல்லில் வெளியைப்படியா
ளளந்தறியு மாபோல வாம்.

அறிந்ததுவாய்நின்றவறியாமைகண்டு - மறந்தறியார்வாழ்ந்துவாழ்ந்த-எ-து-முப்பத்தாறு கருவிகளையுநீங்கி யவத்தின்முடிவினின்ற தம்மையருளாலறிந் தவ் வருட்டெரிசனம் பரைதெரிசன மானந்தப்பே, ரூகிய விவற்றையுங் கடந்து சிவமயமாய் மூன்னீங்கிநின்ற கருவிகளை மீட்டுங்கண் டச்சிவத்தை மறந்தும் பின்னு மிக்கருவிகளை நீக்கி யச்சிவத்தையறியாதா ரிப்பிரபஞ்சஞ் சிறிதுந்கொள்ளா தச்சிவத்தோடும் வாழ்வறவாழ்ந்த.

வெறும்பாழ்-விளைந்தசுகஞ்சொல்லில்வெளியைப்படியா-ளளந்தறியுமாபோலவாம் - எ - து - ஓர்பொருளோடுந் தொடர்வின்றிய வெற்றவெறுஞ் சூனியத்திலுண்டாகிய போரானந்தத்தைச் சொல்லோ மெனி ஞாகாயத்தை நாழியா ளளந் தளவிடு மாறுபோலுமாம்-எ-று.

"அறியாமைகண்டுமறந்தறியா,, என்றமையாற் கருவிகளின் மீளாது சிவமயமா யெக்காலமு மிருப்பாரென்பதாயிற்று வெளியை யளக்கும்படிக்கு எவ்வெவி நிறைந்திருத்தலி னதனையளக்கக் கூடாத தபோற் கருதிக்கூறு மனவாக்கெல்லா மவ்வானந்த நிறைந்திருத்தலி னதனைக்கூறக்கூடாதென்பதறிக.

இத்திருவெண்பாவா னங்ஙனமிருந்த ஞானிகள்பெற்ற வின்பத்தை யிங்ஙனமிருக்குமென் றவரோற் கூறக்கூடாதென் றறிவித்தவாறு காண்க. (உன)

அறிவுக்கறிவென்னு மாகமங்கள்சுத்த
வறிவென்னுமவேதந்தி னந்தம் - பிறியா
நிலைக்குச்சரியாகு நீயென்றுனென்
றலைக்குமறிவரமா.

அறிவுக்கறிவென்னுமாகமங்கள்சுத்த - வறிவென்னும் வேதத்தினந்தம் - பிறியா - நிலைக்குச்சரியாகும் - எ - து - சச்சிதானந்தசிவத்தையியைந்திய வறிவுக்கு அறிவிக்கும் அறிவென்றுகூறுமாக மாந்தங்கள்

வேதாந்தங்கள் அறியுமறிவு மறிவிக்குமறிவுஞ் சுத்தவறிவுதானே யென்றுகூறுந் தற்போதம்போய்ச் சிவத்தைப்பிறியாத நிலைக்குஞ் சீவத்துவம்போய்ப் பிரமத்தைப்பிறியாதநிலைக்கு மவ்வாகம வேதங்களுங்கூறியவாக்கியஞ் சரியேயாகும்.

நீயெயிருளுனென்-றலைக்குமரிபிரமரா - எ - து - அந்நில நில்லாது வாசகஞானமாக (நீயதுவென்ரு லதுநானென்) றிங்ஙனம் விண்டு பிரமாதிகளோடு மலைக்கும்ள-று.

நீ யதுவெம்பதாகம, மதுநானெம்பது வேதம்.

இத்திருவெண்பாவாற் பரஞானத்தாற் சிவத்தைக்கூடப் பிறியாதிருந்தோர்க்கு வேதாகமங்கள்கூறு ஞானமிரண்டுஞ் சரியெம்பதும் அபரஞானிகட்குச் சரியின்மென்பது மறிவித்தவாறுகாண்க.

இரண்டாவது
சத்திநிபாதத்துத்தமொழிவு
முற்றிற்று.

ஆ திருவெண்-சுக.

திருச்சிற்றம்பலம்.

ஓ

சிவமயம்.

மூன்றாவது

நியோகக்கழற்றி.

வேண்டாம்பிறப்பென்றவார்த்தையினில் - எ - து - பிரபஞ்சம் பொய்யென்றும் பிறவியாகாதென்றும் மெய்ஞ்ஞானிகளுஞ் பொய் ஞ்ஞானிகளுங் கூறிவரார்த்தையிருவகையினாட்டிற்குக் காணக்கூடா தாயினும்.

உடம்புமிகையொன்றி லாமைதீநோன்பென் - றடங்கவடங்கி ணுமா-மெய்விடயத் - தீண்டாததிலேதெரியாதோ-காண்டீர்-எ - து- உடம்பைச் சத்தருவென்று மோர்விடயக்கரணப் பற்றிலாமையே தோன்பென்றுமதிற்றத் தேகபோகங்களை யானெனதென்று கருதும் புறத்தறிவின்றபோத மடங்கவுள்ளிற போதமடங்கிய மெய்ஞ்ஞா னிகளை யவரதுடம்புவிடயங்களைப்பற்றுதலுற் றெரியுமாகலினிகழ் திப்பாற் கண்டுகொள்வீர்-எ-று.

மெய்யாற்காண்டி மெய்தமையால் வார்த்தையிலேகாணக்கூடா தாயினுமென்பது வருவிக்கப்பட்டது.

மெய்யோடிந்தியங்க ளொற்றுமையாயிருத்தலின் மெய்விடய மீண்டாதென்று முருபெயராகக்கூறினர்.

என்றுளன்பதனை-யுடம்புமிகை-யென்றதனோடிணைக்கூட்டுக. (ஙஈ)

இத்திருவெண்பாவால் வாசகஞானிகளையும் அநுபவஞானிகளையு மறிதற்கேது கூறியவாறுகாண்க.

ஆறாவது விரத்திவிளக்கம் முற்றிற்று.

ஆத்திருவெண்பா-ஈஎச.

திருச்சிற்றம்பலம்.

எழாவது - துறவு.

எந்தினையுட்பிறவுடையாராயினும் புறப்பற்றோடுருப்பினிப்
பற்றுரோர் காலையதிவை மயக்குமாகலிற்
புறத்துறவும் வேண்டுமெல்லிதனுட் புறத்துறவிலக்கணங்
கூறினராகலி னிவ்வதிகாரத்திற்குத்
துறவென்றுபெயராயிற்று.

தேடப்படும்பொருளோச் சிக்கனவாகப்புதைத்துக்
கோடிக்கொருநிமிடங்கொள்ளுதலும் - கூடாத
வாரூனாவின்கழிக்கு மானிடரைப்போன்மயக்கப்
பூரூர்பொய்கண்டு துறப்போர்.

தேடப்படும்பொருளோச் சிக்கனவாகப்புதைத்துக் - கோடிக்கொ
ருநிமிடங்கொள்ளுதலும்-கூடாத - வாரூனாவின்கழிக்கும் - எ - து -
நம்மாற்றேடப்பட்ட திரவியங்களெல்லாஞ் சிலவழியாது பத்திர
மாகச் செலவுஞ்சிக்கனத்தைக்கொண்டு தாமுடலிலிட்டுப்போங்கா
லே நிமிடகால மவ்வுடலிருக்கக் கோடிதிரவியத்துக்குப் பிறர்கையி
லாயுர்வாங்கிக் கொள்ளுவோமெனினுங் கூடாத விவ்வுடலோ டியிர்
வாழ்நாளோத் தவத்திற்செழியா தவத்திற்கழிக்கும்.

மானிடரைப்போன்மயக்கும் - பூரூர்பொய்கண்டுதுறப்போர்
- எ - து - பேரூரைமானிடரைப்போற் றேகாதிரிபஞ்சங்களே மெய்
யாகக்கண்டு டிவற்றிலீ மயக்கம்பூரூர்க ளிவற்றைப் பொய்யாகக்கண்டு
துறப்போர்-எ-று.

கடவுளராயினு மங்ஙனமா யுட்கொள்ளவுங் கொள்ளவுங் கூடா
தாகலிற் கூடாதவென்றார். (க)

இத்திருவெண்பாவா லிளமைக்கண்ணே வனிதாதிபோகங்களைத்
துறந்து ஞானாசாரியனையடைந்து விடையவேண்டுமென்று கூறி
யவாறுகாண்க.

ஊர்க்குருவியும்வளர்த்த குஞ்சுமொருமனையிற்
பாக்கினையும்பார்த்திதநம் பற்றென்னை - மூர்க்க
நரிபிரமரிந்திரர்கள் வாழ்வுநிலைத்தம்வாழ்
வொருபொருளோவென் றெழுதிவாரோ.

ஊர்க்குருவியும்வளர்த்த குஞ்சுமொருமனையிற் - பாக்கனையும் பார்த்திதுதம் பற்றென்னே - மூர்க்கர் - எ - து - ஓர்மனையில்வாழா நின்ற ஊர்க்குருவியு மதுவளர்த்த குஞ்சுகளு மம்மனையிற் பூனையு மப்பூனையினது குட்டிகளு மிளமையி னல்வினைக்கீடாய்த் தம்மூரு றவாய்க் கூடியிருந்ததையு முதிர்ந்தபோது நீவினைக்கீடா யுறவாயிருந் த தாமே தம்மூட்பகையாய்ப் பிரிந்துபோனதையு மம்மனையுளிருந் து நாம்பார்த்திருந்து மங்ஙனம் வினைக்கீடாய்வரு மனைவிமக்கண்மு தலிய விப்பிரபஞ்சத்தினைத் துறவாதிதன்மேன் மனதுபற்றியிருத்த வி தென்னைகொலோ ஆயினவற்றைப்பார்த்திருந்து மெல்லோருமி ல்வாழ்க்கையோடி மிருக்கவில்லையோ நீ நிங்ஙனங்கூறிய தெல்லையி னின் அம்மனைவிமக்கண்முதலிய விப்பிரபஞ்சம் வினைக்கீடாய்வந்த தென்றறியா தப்பிரபஞ்சத்தோடுங்கூடி வாழ்பவர் மூர்க்கர்.

அரிபிரமரித்திரர்கள் வாழ்வனித்தநம்வாழ் - வொருபொருளோ வென் றெழிவாரோ - எ - து - அப்பிரபஞ்ச மிருவினைக்கீடாய் வந் ததென்றறித்த உத்தமராயினு நியாவர்க்குமேலாய வரிபிரமரித்திரர் முதலிய தேவர்கள்வாழ்வு மனித்தியமென்று வேதாகமங்கள்கூறுத லானமதற்பவாழ் விதோர்பொருளோவென்று கருதியப்பிரபஞ்சத் தைத் துறவாதொழிவாரோ-எ-து.

ஒருவனல்வினையநுபவிக்குங் காலத்துத் தாய்தந்தை மனைவி மக்கள் சுற்றம் நட்பிவர்முதலியோ ருறவாயிருந் திதஞ்செய்வ ரவன் தீவினையநுபவிக்குங்காலத் தங்ஙன முறவாயிருந்தவர்தாமே பகை யாயிதஞ்செய்வராகலி னிவ ரிருவினைக்கீடாய் வந்தவரென்றறிந் துதுறக்கும்படிக் கவைகளையுவமைகூறினர். (உ)

இத்திருவெண்பாவான் மனைவியாதிகுடும்பம் வினைக்கீடாய்வந் ததன்றித் தமக்குறவன்றென்பது மனித்தியமென்பது மறித்தவாறு காண்க.

இங்ஙன மெல்லாவற்றையுந் துறந்தவரிபாவரெனின் மேற்கூறு கின்றார்.

பட்டினத்துப்பிள்ளையினைப் பத்திரகிரியைப்பரவி
விட்டுவிடமாட்டார் வெறுவிடார் - வெட்ட
வெறுவெளும்பைதாய்தலண்ட வேந்தர்வரதாய்பார்த்
துறுமுவதைக்காட்டுவோ மோ.

பட்டினத்துப்பிள்ளையினைப் பத்திரகிரியைப்பரவி - விட்டுவிட மாட்டார் வெறுவிடார் - எ - து - அளவற்ற செல்வராயிருந்து மச்செல்வங்களெல்லாந் துரிசறத்துறந்த பட்டினத்துப்பிள்ளை நாயனாரையும் பத்திரகிரிநாயனாரைப்பத் தோத்திரம்பண்ணி மனைவியாதிய பற்றுக்களைவிட்டுத் துறக்கமாட்டார்கண் மிகுந்தமிடியராயிருந்தாராயினும் மனைவி மக்கண் முதலாயினோரை யாம்விசித்துத் துறத்தோமே லவரை யயலார் கைக்கொண்டு போகாரோவெனின்.

வெட்ட - வெறுவெனும்பைநாய்கறண்ட வேத்தர்வரநாய்பார்த் துறமுவதைக்காட்டுவோமோ - எ - து - ஊன்சிறிதுமின்றிய வெள் ளெலும்பை யோர்நாய் தனது பற்கொடு கறண்ட லந்நாய் முன்ன ரனைய சொற்கவர வந்தா லவ்வெலும்பை யவர்கவர்ந்து கொள்வரென் றுகருதி யவராப்பார்த் துறமுவதைப்போ லியாமுங்காட்டுவோ மோ-எ-று.

அளகேசனைப்போன்ற செல்வத்தினையு மருந்ததிபோன்ற கற்பினையுடைய மனைவியையுங் காமனைப்போலும் கட்டழகினையுந் துறந்தோர் பட்டினத்துப்பிள்ளை நாயனரும் பத்திரகிரிநாயனருமாகலினவரைத்துறந்தோரென் றெடுத்துக்காட்டி யம்மூவகையுளொன்றே னுமில்லாரு மவரைப்போற் றுறக்கமாட்டாமையால் "விட்டுவிடமாட்டார்வெறுவிடார்,, என்றார்.

எலும்புகறண்டி நாய்க்குத் தனதெயிற்றிலது தைத்துன்பந் தெரியா தின்பமாத்தோற்றல்போலவனிதாதிபோகங்களாகிய துன் பத்தை யாணவமின்பம்போன் மாறுபடத்திக்காட்ட வின்பமாகக்கரு தலான் "வெறுவெலும்பைநாய்கறண்ட,, வென்றார், தான்பற்றிடவெலும்பை யையர்கவர்வதெனக்கருதி யவராப்பார்த்துறமுவதுபோற் றும்பற்றியகும்பத்தைப் பிறர்கவர்வதெனக்கருதிக் கூறலான் "முறமுவதைக்காட்டுவோமோ,, வென்றார். (சு).

இத்திருவெண்பாவாற் செல்வமிளமை யழகுமுதலானவற்றுட் சிறந்திருந்து மவற்றிற்பற்றே ரணுவளவுமின்றி யவற்றையெல்லாந் துன்பமென்று துரிசறக்கைவிட்ட பட்டினத்துப்பிள்ளை நாயனரும் பத்திரகிரி நாயனரும்போன்று துறந்தோரே யெல்லாவற்றையுந் துறந் தோராவதென்பதும் அச்செல்வமுதலியவற்றுளொன்றேனு மின்றுவந் தின்பந்தருதற்கிடமாகிய மனைவியாதிகும்பத்தை யின்பமென க்கருதிக் கைவிடற்கஞ்சுவாரே ஆணவத்தான் மறைப்புண்டவராவரென்பது மதிவித்தவாறாண்க.

நீரிங்ஙனங்கூறியவாறே துறந்தோர் பிறப்புநீக்குவரோவெனின் மேற்கூறுகின்றார்.

நாடுநகர்வீடுடையாடாய் தந்தைதட்புமக்கண்
மாடுருலம்பொன்னுடம்பியல் வாதனைகள் - கூடத்
தொடுத்தவலிக்கண்ணித் துடக்கினையிப்போ
விடப்பெறுவாரேன்பிறப்பார் மேல்.

நாடுநகர்வீடுடையாடாய் தந்தைதட்புமக்கண் மாடுருலம்பொன்னுடம்பியல் வாதனைகள் - எ - து - நாடுநகரும் வீடு மனைவியுந் தாயுந்தந்தையும் சுட்பு மக்களுமாடுஞ் சாதியுந்திரவியமும் பிறவுமுதலிய வுடம்பு வாதனைகளும்.

கூடத் - தொடுத்தவலிக்கண்ணித் துடக்கினையிப்போ - விடப் பெறுவாரேன்பிறப்பார்மேல் - எ - து - தாடகப்பட்டப் பிணித்தவலியுங் கண்ணியுமுடையதொத்தனையென்றதித் திதொத்தனை யிப்போ தவிடப்பெறுவாரிவரிலேலென்பிறப்பார்-எ-று.

உடம்பின்வாதனைக ளென்றமையா லாடையாபரண மியானைருதிரை கவிகை சிவிகைசாய்மனை முதலியவுங்கொள்க.

இங்ஙனங்கூறிய வினதென்னும் போகப்பற்றைநீத்துத் தவஞ் செய்வோர்க் கியானென்றுந் தேகப்பற்றுமறு மித்தேகப்பற்றறவே யிவற்றை யானெனதென்று புறத்தறிகின்ற போதமறு மிப்போதமற வே உண்ணின்றபோத மசுத்தவாசனா பலனுறு சுத்தவாசனபன்னு மிவ்வாசனையான் ஞானசுவிடைக்கு மிடுஞானத்தால் விடுவாமாகவி ன் "ஏன்பிறப்பரிமே" லென்றார். (சு)

இத்திருவெண்பாவாற் போகவாதனைகளெல்லாம் பற்றறத்துறந் தோர் தேகவாதனையாதிகளுந்து ஞானத்தால்விடவது மெய்ப்மை யாகலினவர்க்கினியென்னும் பிறப்பிலரென்பதறிவித்தவாறுகாண்க.

நீர்கூறிய மனையாதிய பற்றுக்களை யெல்லாந்துறந்து பொன்னே மாத்திரம் பிடித்துக்கொண்டு தவஞ்செய்யலாகாதோவெனின் மேற் கூறுகின்றார்.

நின்னித்திமிரில் விடம்பிடித்துத்திரித்துவிடும்
பொன்னேநீனைக்கப் பொருதுகாண்-பின்னை
மருந்தாமந்திரத்தினுஞ்சுவிராப்
பெருமீபாவம்பெண்ணிற் பெரிது.

தின்னிற்றிமிரில் விடம்பிடித்தீர்த்தவிடம் - பொன்னேநிகர்க்
கப்பொருதுகாண் - பின்னை - மருத்தாலுமந்திரத்தி னுயிர்த்தவிராப்
பெரும்பாவம் - எ - து - கோபாதிகளாகிய தீமிரிஞல் விடமுண்டா
லவ்விடஞ் சிறிதுபோது தாழ்த்ததலை மீக்கொண்டி பின்னர்மணிம
ந்திர வுவிடதங்களாற் றீர்த்துபோம் பொன்னேக ரகத்தை யும்பற்றுது
வாக்காலுங்கூறுது மனத்தாலினைகவே யப்பொன்னுசையாகியவிட
மதைக் கணமேனுந்தாழா தற்றினவினும் வினாத்ததலை மீக்கொண்டி
பின்னர் மணியாலு மருந்தாலு மந்திரத்தாலுந் தீராதவெரும்பாவ
மாகலின்.

பெண்ணிற்பெரிது - எ - து - நீவிடிக்கிற்றெனென்ற பெண்ணு
சையிடத்தைப்பற்ற விப்பொன்னுசையிட மிகவும்பெரி நிதனமான
தாலும் நினையாதவிடவேண்டும்-எ-று.

துறந்தோர் பொன்பிழைத்தா லதனைப்பாதுகாத்தற் கிடும்பிழக்
கவேண்டி மந்தன்றியப்பொன்னை வளர்த்தற் கவாத்தோன்றி யுபசரி
வர்க்கு ஞானசாத்திரங்களைக்கூறிப் பொன்கொடித்தார்மேல் விழைவு
ங்கொடாதார்மேல் வெகுளியுற்றோன்று மிவைதோன்றலே துறவாள்
வருந்தவப்பயனுமிழ்தி முன்பேன்னேநிங்கூடிச் செய்த வில்லறப்
பயனுமின்றிக் கேடில்ருமாலிற் 'பெருப்பாவம் பெயணிற்பெரி,
தென்றார். (ஞ)

இத்திருவெண்பாவாற் பொன் மனத்தாலினைப்பிழை மாறுமயக்
கந் தருதலாலும் கூட்டலாதியான் விழைவு வெகுளியாதிகளித்தக்
கவப்பயனன்றி யில்லறப்பயனு மறிவிலாலுந் தென்னுசையினும்
பெருப் பந் தருவதாகலி னதனைப்பற்றலாகாதென்ப தறிவித்தவ
காண்க.

இங்ஙனந் தேகாதிப்பிரபஞ்சமெல்லாம் பொய்யென்று நீர்சொ
வில்லக்கேட்டதேயன்றி மற்றியாவருஞ் சொல்லக்கேட்டிலனென்றமா
ணக்கனை நோக்கியேற்கூன்றார்.

செல்வமிளமையுடம்புபேய்த்தேரென்று
சொல்லுவதென்காணுரோசுட்டதுபோ-யெல்லா
விடுவோர்பிறப்பிறப்பின் மீளார்கண்மீண்டாம்
நெடுமோகிவனைத்தொடா.

செல்வமிளமை யுடம்புபேய்த்தேரென்று - சொல்லுவதென்கா
ணுரோ - எ - து -செல்வமுமிளமையு முடம்புமிவைமுதலிய பிரபஞ்
சங்களுங் கானற்சலம்போலப் பொய்யென்றி யாங்கூறவேண்டிவதை

லீனை யவைமெய்போற்றோன்றி யழிவனவற்றைத் தாங் காட்சிப்பிர மாணமாகக்காணுர்கொல்லோ ஆயினெல்லோரும்ஞானத்தாற்பிறப்ப தமென்றுகூறநீர் துறவாற்பிறப்பதுமென்று கூறியதென்னையெனின்.

சுட்டதுபோ - யொல்லை - விடவோர்பிறப்பிறப்பில்பீளார்கண் மீண்டாற் - றெறுமோசிவனேத்தொடர - எ - து - தேகாதிப் பிரபஞ் சங்களே யெனதியானென்றசுட்டி யறியுமிச்சுட்டுப்போதம்போ யப் பிரபஞ்சத்தைச் சீக்கிரத்தில்விட்டுத் துறப்போர் பிறப்பிறப்பில்மீ ண்டிவரார்கண் ஞானக்குறைவினுல் மீண்டார்களேனு முற்றுறந்து தவம்பண்ணிய வாசனையா லப்பற்றுக்களைக்கடந்து நிற்பரேயன்றிய வராப்பற்றுத் தீண்டுமோ தீண்டாதாயினும் பிறப்பின்மீண்டோரை த்தீண்டாதோவெனி னவர்சிவனேப்போலு மொன்றேனும் பற்றற்று டையாராகலிற் றீண்டாது-எ-று.

அனித்தியவிவேகத்தோன்றிய வக்கணமே தாழ்த்திராதெல்லாவ ற்றையும் விடவேண்டுமாகலி "லெஞ்ஞிவிடுவோ,, ரென்றார்.

முற்பிறப்பி லவாவுடையார்க் கிப்பிறப்பினு மதுதொடர்தல் போல முற்பிறப்பி லவாவறுதியுடையார்க் கிப்பிறப்பினு மவ்வவாவ றுதியே தோற்றுமாகலிற் "சிவனேத்தொட,, வென்றார்.

இத்திருவெண்பாவா லுடம்புமுதலிய பிரபஞ்சத் தோன்றியழி வது பிரத்தியக்கமாக விருத்தலிற் கானற்சலம்போன் றழிவதென்று ஒருவர்கூறக் கேட்கவேண்டிவ தின்றென்பதுஞ் இங்ஙனம் பிரத்தியக்க மாயிருப்பினு மதியா ரஞ்ஞானிகளென்பதுஞ் சுட்டறிவுபோய்ப் பி ரபஞ்சத்தை யறித்தியமென்றறிந்து விளைந்துவிட்டுத் துறப்பதே ஞானமென்பது மித்துறவுடையோ ரீண்டுமீண்டும் பிறவாரென்பது த் தவக்குறைவால் மீண்டாராயினு மொன்றினும் பற்றுதலற்றிருப் ப்பரென்பது மறிவித்தவாறுகாண்க.

(கூ)

இத்தவவாவறுதியினுல் வரப்பட்டவின்ப மெல்லையென்ற மா ணுக்கனேநோக்கி மேற்கூறுகின்றார்.

ஆசையினுலற்பசுக மாயழிந்தாற்பேரின்ப
மாசையின்போக்கென்றறிய லாகாதோ - வாசை
நளிசைக்கழுக்குவந்த நாசமெனநாடித்
தெளியப்போமற்றிவை யைந்தும்.

ஆசையினுலற்பசுக மாயழிந்தாற்பேரின்ப - மாசையின்போக் கென்றறிய லாகாதோ - எ - து - ஆசையினுலே போதஞ் சகமுகமா ய்ச்சென்று விடயங்களிலழுந்தித் தப்பக்கவற்று லற்பமாய சுகத்தோ

ற்றி யழியுமானு லிவ்வாசை நாசமே சிவத்திற்றேன்றும் பேரின்பம் பெறுதற்கேதுவென் றறியலாகாதோவாயி னவ்வாசைபோமா றென்ன மனமெனினீ.

. ஆசை- நளிகைக்கழுக்குவந்த நாசமென நாடித் - தெளியப்போ கற்றிவ்வுயிர்த்தும் - எ - து - அவ்வாசை போதத்தின்கண் ணேறுவது நெய்யாதிவார்த்தடைக்கு மூங்கிற்குழாய்க் கழுக்குவந்த நாசம்போ, ஈத்தமக்குநாசமாமென விசாரித்தறியு வவ்வாசையின் போதமாய வி டயங்களிற்பிரிந்துசெல்லு மிவ்வைத்தவாவுநீங்கும்-எ-று.

ஆன்மாவாசையினுல் விடயத்திலழுந்திச் சிற்றின்பம்பெறுதல் போ லவ்வாசைநாசத்தாற் சிவத்திலழுந்திப் பேரின்பம்பெறுமாகலி ற் "பேரின்பமாசையின் போக்கென் றறியலாகாதோ,, வென்றார்.

தேனெய்யெண்ணெயாதிவார்க்கு மூங்கிற்குழாய்ச் சிறுதுவா த்தின்கண் மரவட்டைமுதலியா றுழைந்தா லதிற்சுழல்வதேயன்றி யழு க்கினுள் மீளமாட்டாதாகலின் முற்போற்றே ஞதிவார்த் தங்கிகரியாத தனைப்புறம்பாய் விடப்படி மதுபோ லாசைட்போதத்தி னேறியிரு ந்தபோ தெவ்விதத்தாலுமீளா தநலைப்போதத்தில் விட்டின்பத்திற் கேதுவாய குறவு மெய்யுணர்வுமுதலிய நற்குணங்களேரு நிக்குணங் களேருமையின் மூன்போற் பிறவித்துன்பத்தையே பெறுமாகலி னங்ஙனமுவமைகூறினார்.

நளிகையின் மரவட்டையாதி றுழையும்போ தின்பம்போலெளி திறுழைந்துமீளமாட்டாததுபோற் போதத்தின்கணுசையேறும்போ தின்பம்போற்றேன்றி யெளிதிலேறி மீளாமைக்குங்கொள்க. நளிகை யென்பது மூங்கிற்குழாயது நிசைச்சொல். (எ)

இத்திருவெண்பாவா லவாவினு லற்பவின்பம் பெறுதல்போ லவாவறுதியாற் பேரின்பம்வருழென்பதும் அவாவினுற் றமக்குநேரிடு மநர்த்தத்தை யுண்மையாய்விசாரித்தறியி னவ்வவாவறுதி வருமென் பது மறிவித்தவாறுகாண்க.

இனித்துறவினதுமுடிவுத்துறந்துசெய்யுத்தவத்தினதுமுடிவ்ம டியேற்கருளிச்செய்ய வேண்டுமென்ற மாணுக்கனேநோக்கி மேற்கூ றுகின்றார்.

உதயத்தொழப்போவார்க் குள்ளும்புறம்பும்
புதையவொளிவீசுமா போலே-பதிமோகி
நீக்காட்டிலெய்தெரிக்கச் சென்றவாகண்டக்காற்
றூக்காதகண்ணேறுதவம்.

உதயந்தொழப்போவார்க் குள்ளும்புறம்பும் - புதையவொளி வீசுமாபோலே-எ-து - சூரியவுதயந்தொழச்செல்வோர்க் குள்ளும் புறம்பு மிருண்மறையவொளி வீசுமாறுபோலே மனை சுதர்முதலிய பற்றுக்க ளெல்லாவற்றையும்விட் டெழுந்திருமே னுளத்தெழு மவாவி னையுமறுத்துக் கண்டவிடயங்கண் மேற்சென்றுபற்று மிந்திரியங்களை யடக்கி யுள்ளும்புறம்பு மசையாகிய விருளற நிராசையாகிய வொ னிவீச நிற்றலே துறவினதுமுடிவு.

பதிமோகி - தீக்காட்டிலேகொடுக்கச் சென்றவாகண்டக்காற் - ரூக்காததன்மேறவம் - எ - து - தனதுபுருடன்மே லதிமோயையிரு ந்தனா ளவன்மரித்தகாலே யவனுக்குத் தன்னைக்கொடுக்கச் சுடுகாட்டி ற்சென்றவாறு கண்டவனைப்போலும் தற்போதத்தைச் சிவனுக்கூரு க்கொடுத்துந்தாமொன்மேறிற் றாக்கற்றிருத்தலன்மே தவத்தினது முடிவு-எ-று.

உதயந்தொழுவாக்குக் கண்விழித்தபோது மிமைத்தபோது மொளிவீசுதல்போலுந் துறந்தோர்க்குப் பொறிகளால் விடயங்களை க்கண்டபோதுங் காணுதிருந்தபோது "மூள்ளும்புறம்பு நிராசையோ டிருக்கவேண்டுமாகவினங்ஙனமுவமைசொன்னீர்,, "தவமென்றமையா ற்றுறவுவருவிக்கப்பட்டது,,

இத்திருவெண்பாவா ளுள்ளும்புறம்பு நிராசையோடிருப்பது துறவினது முடிபென்பதும் போதமொழிந்தொன்மேறிற்றாக்கற்றி ருப்பது தவமுடிபென்பது மறிவித்தவாறுகாண்க. (அ)

இங்ஙன நிராசையோடிருந்தோர்க்குத் தற்போதமறுமோவென் ற மாணாக்கனேநோக்கி மேற்கூறுகின்றார்.

ஊமைமணியாட்டுகினு மோசையழிந்தாற்போல
வாமதுபோனிற்க வரிதுகா - ணுமாய்
வளர்த்தவசத்தையெலா மாளமரக்காலா
லளத்தெறிந்துபோட்டதுபோ லாம்.

ஊமைமணியாட்டுகினு மோசையழிந்தாற்போல - வாம்-எ-து- நாவிழந்தமணியைப் பிடித்தசைப்பினு மோசையொழிந்து நின்றுந் போலப் பஞ்சவிடயங்களும் வலியவந்தடுப்பினு மதிதிவிரபக்குவர் க்குப் போதங்கலங்காது நிராசையேயுண்டாம்.

அதுபோனிற்கவரிதுகா - ணுமாய் - வளர்த்தவசத்தையெலாமா ளமரக்காலா - லளத்தெறிந்துபோட்டதுபோலாம் - எ - து - அவரங் ஙனநிற்கு மதுபோனிற்க மற்றையடக்குவர்க்கு மிகவுமரிதுகா ணுதா

வுபாயத்தானு மங்ஙனநிற்கவருமாயி ரூசையான் முன்னரிப்போத மேலிட்டு வேன்மேல்வளர்ந்த வதனதுசேட்டையெல்லா மிறந்து போம்படி யறிவாகிய மரக்காலா லிவ்வளவென்றளந்து புறம்பாயெ றிந்து போட்டதுபோலாம்-எ-று.

நிராசையோ டிருப்போரைக் கருவிகள் சேட்டியாதநீங்கு மக்கருவிகணீங்கவே திருவருடோன்று மந்திருவருளாற் போதத்தையி தென்றளவிட்டறிந் தொழிக்கலாமாகலி னிங்ஙன முவ்மைகூறினார்.

இத்திருவெண்பாவா· னிராசையுடையோரை வலித்துவிடயங்க ளடிக்கினும் போதமசையாதாகலி னிராசைவரிற் போதவொழிவு தா னேவருமென்பது மிங்ஙன மிருத்தல் பக்குவர்க்கரிதென்பது மங்ங னமாயினு மவர்க்கு மூபாயத்தா னவாவறிவருமாயி னப்போதச் சேட்டை யளவிட்டெறியுப்படி மென்பது மறிவித்தவாறுகாண்க.

தநுகரண புவனபோகங்களிற் சிறிதேனும் பற்றின்றி நிற்றற் குபாய மெங்ஙனமென்ற மாணாக்கனோக்கி மேற்கூறுகின்றார்.

தநுவாதிநான்கினுக்குஞ் சார்வழிந்துசற்று
நினையாதினோப்பாறி நின்றான் - மனையாமோ
காந்தக்கடத்தூசி காற்றற்றதீபமென
வாந்தத்துவங்களையலாம்.

தநுவாதிநான்கினுக்குஞ் சார்வழிந்துசற்று - நினையாதினோப்பாறி நின்றான் - மனையாமோ - எ - று - போகமுநானல்ல புவனமுநானல் ல தநுவுநானல்ல கரணமுநானல்லவென் றுள்ளபடியறிந்து நியதிக ளாந் தத்தநுவாதி நான்கினிடத்து மியானெனதென்று சார்ந்துநின்ற போதச்சார்வுகெட் டவற்றைமீட்டுச் சற்றும்பற்றுதருளி னினோப்பாறி யனைவறநின்றான் மனையாகிய புவனத்தினிடத்து மம்மனையைப்பற்றி யிருந்த வனிதாதிபோகத்திடத்து முன்போற் பற்றுண்டாமோ ஆயி ற் புவனபோகங்களிற் பற்றின்றிநிற்பினுந் தநுகரணங்களிற்பற்றின்றி நிற்ப தெங்ஙனமெனின்.

காந்தக்கடத்தூசி காற்றற்றதீபமென - வாந்தத்துவங்களையலாம்- எ - று-காந்தக்கடத்திற் கெதிர்முகமாயபோது பற்றியுமதனுட்கிடந்த தபோது பற்றுதுமிருந்த காந்தக்கடத்தூசிபோலுங் காற்றிலிருந்த போதசைந்து காற்றின்றியபோ தசையாதுமிருந்த காற்றற்றதீபம் போலு மத்தநுகரணங்களைத் தனக்கன்னியமாய்க்கண்டு நீங்கிநிற்பி ல வற்றேறுந் தாக்கற்றுநிற்பதுண்டா மவற்றேறுந் தாக்கற்றுநிற்கவே மற்றையத்தத்துவங்களு மயலாய்நீங்கும்-எ-று.

தருவாதிகளிற் கறங்குபோற் கழன்றதன்மை திருவருட்கணின்ற போ தின்மையா "னினைப்பாதி,, யென்னூர்.

காந்தக்கடத்திற் கெதிர்முகமாயபோது பற்றியழுகி யுதணுட்கி டந்தபோது பற்றுதிருந்ததுபோற் சகமுகமாய்நின்று தேகத்தையா னென்றுபற்றிய போதமகமுகமாய்நின்று திருவருளே யடைந்தபோ தத்தேகத்தை யானென்றுபற்றுதற்கலிற் "காந்தக்கடத்தூசி,, யென்று மப்புவனபோகத் தருகரணங்களைப் போதம்பற்றுது நின்றபோது கரணந் தற்சேட்டையற்றடங்கு மப்போது போதந்திருவருளோடுங் கூடிக்காற்றற்றதீபம்போலாகி மீட்டுங்கரணத்தோடுங் கூடாதாகலிற் "காற்றற்றதீப,, மென்றுங்கரணங்களறவே யக்கரணங்களினது சேட் டைக்கேதுவாய கலாதிகளு மக்கலாதிகளைப் பிரேரகம்பண்ணுஞ் சுத் தாதித்துவங்களு நீங்குமாகலிற் "தத்துவங்களயலா,, மென்றுங்கூறினர்

இத்திரு வெண்பாவாற் புவனபேர்களைத் தானன்றென்றுள்ள படியறிந்தகனைந்து அவற்றின்கட் சார்ந்துநின்ற போதச்சார்வுகெட் டருட்சார்பினின்றுற் புவனபோகப் பற்றறுமென்பதுந் தருகரணங் களைத் தனக்கன்னியமென் றறிந்தவற்றேறுதற் தாக்கற்றுத் தனக்கன னியமான வருளாய்நிற்பினத்தருகரணப் பற்றறுமென்பதும்இங்ஙன மறவே மற்றைதத்துவங்கடாமேயறுமென்பது மறிவித்தவாறுகாண்க.

உத்தமராயினோர் கற்புடையமனைவியைத் துற்பாரோவென்ற மாணக்கனைநோக்கி மேற்கூறுகின்றார்.

நாயலகைநெய்விரும்பி நக்குவதுநஞ்சிட்ட
பாயசமுமெய்ப்பரிசம் பாவைமிகச் - சாயாதீர்
வேட்கையகுணமிபம் விட்டின்மீன்வண்டிவையின்
சாட்சியைக்கண்டார் துறவாதார்.

நாயலகைநெய்விரும்பி நக்குவதுநஞ்சிட்ட - பாயசமுமெய்ப் பரிசம் பாவைமிகச்சாயாதீர் - வேட்கை - எ - து - நாயானதுளிவா யிற்றடவியநெய்விரும்பி யவ்வாள்வாயை நக்குவதுபோலும் விடங் கலந்தபாயசத்தை யொருவன்சுவையென விரும்புவதுபோலு மாகு ம்பாவையரது மெய்ப்பரிசத்தை யின்பமாய் விரும்புதலாக்கினும் பொய்யாகிய வப்பாவையரது மெய்ப்பரிசத்தை மெய்யாகக்கண்ட னுபவிக்கவிழைதன் மிகவும்பொய்யாகிய கானலைமெய்யாகக்கண் டோடித்திற்குண்ண விரும்புதல்போலா மர்கலினும்.

அசுணமிபம்விட்டின் மீன்வண்டிவையின் - சாட்சியைக்கண்டா ர்துறவாதார்-எ - து - அசுணப்புட்சத்தத்தாலு மீயாணபரிசத்தாலு

ம்விட்டிற் பூச்சியுருவத்தானு மீனிரதத்தானும் வண்டுகேத்தத்தானுங் கெடுமென வினைகளைச் சாட்சியாக் கண்டுறலானு மிவ்வைந்துவிடய ங்களு முளவாகியவப்பாவையரைத் துறவாதாரிபாவர்-எ-று.

வாள்வாயினெய்யை நக்கினநாய்க்கு நஞ்சிட்டபாயசமுண்டோ னுக்கு மூன்னரனுவளவின்பம்போற் றோன்றிப் பின்னரதனுன்மகிய ளவுதன்பம் வருவதுபோ லநுபவிக்கும்போது சிறிதின்பம்போற் றோன்றிப் பின்னைத்துன்பம்வருமென்பதும் பொய்யாய்த் தோன்று ங்கானனீரை மெய்யாய்க்கருதி யுண்ணத்தொடங்கி ஞேனப்போற் பொய்யாத்தோன்றும் பாவையரை மெய்யாய்க்கருதி யநுபவிக்கத் தொடங்குவ தென்பதுமோ சோர்விடயத்தைவிழைந் தொவ்வொன் றுகெடுமெனுமிந்திரவிடயங்களுமுளவாகிய பாவையரைவிழைந்தால வாலவருங் கேட்டிற்களவின்றென்பது மிதனுற்காண்க.

இத்திருவெண்பாவாற் பெண்களின்ப மிகச்சிறிதென்பது மதனு லவருந்துன்ப மிகப்பெரிதென்பது மவர்கூட்டரவு, மாயையென்ப து மவர்கட்செய்யு மைம்புலநுகர்ச்சி பெருங்கேட்டைத் தருமென்ப து மிங்ஙனமறிந்தோர் தம்மனைவி யருந்ததிக் கற்பினளாயினுந் துற ப்பரென்பது மறிவித்தவாறுகாண்க. (எக)

எல்லோரு மனைவியாகிய குடும்பத்தோடிருந் நின்பங்களே யநு பவித்துக்கொண்டு பூரிப்போடுமிருக்க வக்குடும்பத்தை நீர் துன்ப மென்றீ ரிதென்னையெனின் மேற்கூறுகின்றார்.

இடும்பைக்கேகொள் கலமாயேழ்நரகுக்கோடாங்
குடும்பத்தைக்குற்ற மறைக்கி - னடுங்காரோ
வைவர்க்கொருவ னறுதொழிலிச்செப்தலான்
மெய்யைப்பொய்யாக்கிவிடும்.

இடும்பைக்கேகொள்கலமா யேழ்நரகுக்கோடாங் - குடும்பத்தைக் குற்றமறைக்கி - னடுங்காரோ - எ - று - அஞ்ஞானிகள் இம்மைக்கண் ணே துன்பங்களேயெல்லாந் தாமநுபவித்தற் கேற்றுக்கொள்வதாய கப்பலாய் மறுமைக்கண்ணே யெழுவகைப் பிறவியாகிய வெழுவகை நரகத்தையுமுண்டாக்குங் கனதையினேயுடையமனைதர்முதலிய குடி ம்பத்தை இங்ஙனு மிக்பாபங்களினுந் துக்கத்தைத்தருவதென்றறியார் இங்ஙனமறியவொட்டா தானவமாகிய குற்றமவறைமறைத்தலா லிவ் வாணவக் குற்றம்நீங்கினேர் குடும்பக் குழாத்தைக்கண்டாலு முளம் வெருவி நடுக்கமுறுர்கொலோ. ஆயினீர் மெய்யென்றுகூறிய சிவபெரு மாற்குத் தொண்டுநிருப்பாரை னென்னில்:

ஐவர்க்கொருவ னறுதொழில்செய்தலான் - மெய்யைப்பொ
ய்யாக்கிவிடும் - எ - று - ஐந்திந்தியங்கட்கு மோர் முதல்வனுகியவா
ன்மா வவ்விந்தியங்களா லறிந்தநுபவிக்கும் விடயசுகத்தின் பொருட்
டுழவுமுதலிய வறுவகைத்தொழிலின் முயற்சிப்படலா னிம்முயற்சி
யசிவத்தைத் தெரியவொட்டாது பொய்யாக்கிவிடு மிதனீயறிந்
என்றவாறு.

குடும்பத்தா லிம்மைக்கட் டேகதுக்க மனேதுக்கங்க ளிடையரு
துவருதலினிம்பைக்கே கொள்கலமாயென்று மிகுமும்பவாசனை
யான் மறுமைக்கட் பிறவிக டொன்றுதொட்டிவருமாகலி "னேழ்நர
குக்டோ,, மென்றுங்கூறினர்.

அறுதொழில்செய்தலான் மெய்யைப்பொய்யாக்கிவிடுமென
வே குடும்பத்தின்பொருட்டுச்செய்யு மறுவகைத்தொழில்களின் முய
ற்சியைவிட்டுச் சிவயோகமுயற்சியிற்றெடங்கின் மெய்ப்பொருடோ
ற்று'மென்பதாயிற்று.

'அறுவகைத்தொழில்களாவன, உழவு - தொழில் - வாணிகம் - எ
ழுத்து - சிற்பம் - பரதம் - இவை யாறுமெனக்கொள்க. (௩௨)

உத்தமபக்குவராயினோர் குடும்பத்தோடுங்கூடியிராரென் றின்
னுங்கூறுகின்றார்.

குரங்கிற்றுனிச்சி குடும்பக்குழாமும்
பெருங்குப்பையிற்கரடிப் பெண்டும் - பொருந்துவரோ
காலனுந்தீயுங் கடலுமிருங்கல்லுமாய்
மேலுநரகாய் விடும்.

குரங்கிற்றுனிச்சி குடும்பக்குழாமும் - பெருங்குப்பையிற்கரடி
ப்பெண்டும் - பொருந்துவரோ - எ - று - ஓர்குரங்குப் பலகுரங்கு
வந்து சேட்டித்தல்போலத் தாய்தந்தை சுதர் சுற்றமுதலியோர் தம்
மைவந்து வாழ்க்குங் குடும்பக்கூட்டத்தையு மக்குடும்பக்கூட்டமாகி
ய பெரியமலக்குப்பைக்கட் கரடிபோலும் பற்றப்பட்ட பெண்டிர
கூட்டவினையும் பொருந்தியிருப்பாரோ உத்தமராயினு மெல்லோ
ரு மவரோடுங்கூடி யிருக்கவில்லையோ விவனென்னை யங்ஙனமிர்தா
போவதெனின்.

காலனுந்தீயுங் கடலுமிருங்கல்லுமாய் - மேலுநரகாய்விடும் -
எ - று - அக்குடும்பக்கூட்டங் காலனைப்போலுந் தீயைப்போலுங்
கடலைப்போலும் பெரியமலையைப்போலு மிம்மைக்கண்ணே துன்
பத்தருவதாயு மறுமைக்கண்ணு மதனெடுங்கூடியிருந்த வரசனையாற்

பிறப்பாகிய நரகத்தையுந் தருவதாய் விடுமெனவறிந் ததனைநீங்கூடி.
யிரார்-எ-று.

சோறுகூறை முதலியன கொடுக்கும்போதுங் கொடாதபோ
தும் வரும்பினக்காணு மவற்றிற்கேதுவாகிய திரவியந்தேடுதலானு
மதனைப்பாதுகாத்தலானு மவர்க்கு வியாதியாதிதுன்ப மபிமானபங்
கம் வந்தகாலையினு மரையர்களகம் அற்பகாலம் வந்தகாலையினு மவ
ரிறந்தகாலையினு மிவைமுதலியவற்று லக்ஞுபம்பத்தாற் றேகதுக்க மா
னேதுக்கங்களிடையறுதலுவருதலிற் "சுரங்கிற்றுனிச்சிகுபிப்பக்குழா,,
மென்றார்.

இத்துன்பக்குழுவிற் சுழலுங் குணத்தானுஞ் செய்கையா
னு மிழிவாகிய பெண்டீரைக்கூடுவரோவென்பதனைப் பெருங்குப்பை
யிற் சுழற்பெண்டும் பொருந்துவரோவென்னுங் குறிப்பாற்கூறினார்.

காலனுயிர்களைப் பாசத்தாற்பிணித்துக்கொடுசெல்லு நிரையத்
துள்வீழ்த்தி வருத்துதல்போற் றுறந்துசெல்கின்றேனென் றிரண்ட
டிச்சென்றுழை மனைகுதர்முதலியோர் சரசரணஞ்சுளைப்பற்றிக்கொ
ண்டோலிட் டழுதவனுள மிவைகூப்பண்ணி மீட்டுக்கொடுவந்து குடும்
பமாகிய துன்பத்துள்ளப்படுத்தி வருத்துதலிற் காலனுமென்று மொ
ருவனைத் தீச்சூழ்ந்துகொண்டதுபோற் சூழ்ந்துகோடலிற் றீயென்று
நடுக்கடலில் வீழ்ந்தோனுக்குக் கரைகண்டேறக் கூடாதுபோ லக்
குடும்பசாகரத்தில் வீழ்ந்தோனுக் கிதரைகண்டேறக் கூடாதாகலிற்
கடலென்று மலையிருத்திக்கொண்டதுபோற் குடும்பபாரந் தற்றலிற்
சுமையாயிருத்தலி லிருங்கல்லென்று பிறக்கும்போ துயிர்க்கெந்தவா
னை யிருந்த தந்தவானையோடுஞ் சென்றுபிறத்தலின் மேலுநரக
மென்றுங்கூறினார். (ஙசு)

இவையிரண்டுதிருவெண்பாவானு மனைவியாதிய குடும்பந் துன்
பங்கட்கும் பிறவிவாதனைகட்கு மூலைவிடமென்பதும் இதனை யிங்ங
னமென் றுணவமறைப்பானஞ்ஞானிக ளறிந்திலனென்பதும் ஞானிக
ளிதனைக்காணினுங் கேட்டினு நடுங்குவரென்பது மிக்குடும்பமுயற்சி
சிவத்தையறியவொட்டாது மறைக்குமென்பதும் உத்தமபக்குவர் வி
டாதுசூழ்ந்தவாதிக்கு மிக்குடும்ப வாதனையான்வரு நட்டங்களைமுற்
றுமறிந் ததனை யக்கணத்தே விடுவரென்பது மறிவித்தவாறு காண்க.

இங்ஙனந் துன்பமென்றறிந்து துறந்துசெல்வோர் தம்மைநம்
பியிருந்த குடும்பத்தைப் பரிதாபத்திற்குச் சுதோதார்முதலியோரு

லொருவனைத் துணையாகவைத்துப் பின்றுறந்து சேறலாகாதோவெனின் மேற்கூறுகின்றார்.

கன்னனேப்பேரற்றன்னே யறிவனேகாக்கையுடன்
மன்னுகுயில்போன வாறுபோ-லன்னியமாய்ப்
பேசாதுபோன துறவிபிறப்பறுப்பார்க்
காசானுமென்றேயறி.

கன்னனேப்போற்றன்னே யறிவனேகாக்கையுடன்- மன்னுகுயில் போன வாறுபோ - லன்னியமாய்ப்-பேசாதுபோன்துறவி - எ - து- இயானின்னசாதி யின்னூர்குலத் தாய்தந்தை யின்னுமொன்று தனதுகு லக்குறும்பங்களே யறியாதகன்னனேப்போலு முத்தமபக்குவ னியா னின்னசாதி யின்னூர்குல மின்னூர் தாய்தந்தையென்று தனது குலக் குறும்பங்களைப் பகுத்தறிவனே யிங்ஙன மொன்றையும் பகுத்தறியா தகாக்கையுடன் பருவம்வருமளவுந் தனதினம்போற் கூடிச்சென்று பருவம் வந்தகாலே யதற்கன்னியமாய் பேசாது சென்ற நிலைபெற்ற குயில்போலு மனிதீயவிவேகம் வருமளவு மவரினம்போற் கூடியிருந் தந்தவிவேகம்வந்தகாலே யவர்க்கன்னியமாய்ப் பிரிந்தவரோடுஞ் சொல்லாது சென்றதுறவியே மெய்த்துறவி.

பிறப்பறுப்பார்க்- காசானுமென்றேயறி - எ - து - அத்துறவி பிறப்பறுக்கும்பொருட்டுத்-துறந்தார்க்காசாரியனு மாவன்-எ-று.

தருமன்முதலிய துணைவரையுங் குந்தியாகிய தாயையுங் கண்டிருந்துங் கன்னனறியாததுபோ லிவன்குறும்பதீதாகைக் கண்டிருந்து மனிதீய விவேகத்தாற் பொய்யாக்கண்டானுகலிற் கன்னனேப்போற்றன்னேயறிவனே வென்றுங் - குயில்காக்கையோடு கூடியிருந்தபோதுந் தன்குரலைக்காட்டினுற் கொத்துமென் றடங்கியிருந்து செல்லும் போதுங் கூவாது சென்றதுபோற் குறும்பத்தோடு கூடியிருந்தபோதுந் தான்றுறந்துசேறலே யவரோடுஞ்சொன்னுற் பற்றுமென்பதறிந்து சொல்லாதடங்கியிருந்து செல்லும்போதுஞ் சொல்லாதுசென்றமையாற் குயில்போன்வாறுபோற் பேசாதுபோனதுறவியென்றுங்கூறினுர்.

அறிவுந்துறவுமுள்ள ஞானி சிறப்புளுகலி னிவனே யாசானுமென்றுர். (உச)

இத்திருவெண்பாவால் குலமுதலியவற்றினபிமானமின்றிய நிதீயவிவேகம்வருமளவு மவற்றேடுயிர் ஜைக்குதலுற்றுக் கூடிநின்றந்தவிவேகம்வரி னொருவரோடும் விடைபெறாது சென்றவனே துறவிகளுட் சிறந்தவனென் றறிவித்தவாறாகண்க.

இங்ஙனந் துறத்துசெல்வாரை மாதாபிதாக்கள்வந்து தடுத்தா லெங்ஙனஞ் செல்வாரென்னின் மேற்கூறுகின்றார்.

நித்திரைசெய்விட்டி னெருப்பும்படையு
மூற்றிப்புறப்பட்டார் மூற்றத்தே - பித்தனைப்போ
னில்லென்றுசொன்னாலு நிற்பரோவப்படிகா
னில்லறத்தைநீத்தா ரியல்பு.

நித்திரைசெய்விட்டி னெருப்பும்பெரும்படையு - மூற்றிப்புற ப்பட்டார் மூற்றத்தே - பித்தனைப்போ - னில்லென்றுசொன்னாலு நிற்பரோ - எ - று - தாநித்திரைபண்ணுநின்ற விட்டினுள்ளே நெரு ப்பும்பெரும்படையுஞ் செறித்துவாவிழித் தவற்றைக்கண்டுவெருண் டவ்விட்டின் வாயில்கடந்து முன்றிலிற்புறப்பட்டார் தமக்கனுகூல ராயினு முவற்றினுநிற்பீரென் றறியாதுகூறினுப் பித்தனைப்போலு மவர்மொழியை யுட்கொண்டி கணப்போதாயினு நிற்பரோ.

அப்படிகா-னில்லறத்தைநீத்தாரியல்பு - எ - று - அவ்வொப்படி நில்லாதோடிச் செல்வரோ வப்படிகாண் மீதாபிதாக்கள்வந்து தடு ப்பினு நில்லா தில்வாழ்க்கையைத் துக்கமாகக்கண்டு துறந்துசெல்வா ரது முறைமையும்-எ-று.

குடும்பந் துக்கமென் றறியாதபோ ததனேடுங்கூடி யிருப்பா ரென்பதுந் துக்கமென்றறிந்தபோ ததனைத்துறந்து செல்வரென்ப துந் துறந்துசெல்லும்போ தியாவர்தடுப்பினு நில்லாரென்பது மிவ் வுவமைக்குறிப்புளளாற் காண்க. (அ)

இங்ஙனந் துறந்துசெல்வா ரியல்பின்னுங் கூறுகின்றார்.

கட்டுநெகிழ்ந்துவிட்ட கள்ளைப்போற்கங்குலிற்பேய்
வெட்டுளத்தின் வெருவினீர்போன் - மூட்டத்
தொடர்ந்தபடைபிழைத்துத் தோன்றப்போவாரைபோ
லடங்கத்துறந் தேகுவார்.

கட்டுநெகிழ்ந்துவிட்ட கள்ளைப்போற்கங்குலிற்பேய் - வெட் டுளத்தின் வெருவினீர்போன் - மூட்டத் - தொடர்ந்தபடைபிழைத் துத் தோன்றப்போவாரைப்போல் - எ - று - பொருள்திருடியகள்ளைச் சிலர்வந்து பற்றிப்பிணித்துவருத்த வவருளருளுள்ளத் தொருவன்வந் தப்பிணியை யவிழ்த்துவிட்டகாலை விரைத்துசெல்லு மக்கள்வனைப் போலு மாயிரவிற் பெரும்பேயைக்கண்டு வெருவினர் விரைந்து சேறல்போலும் யுத்தளத்தில் வெருவினர் விரைந்துசேறல்போ

இந் தம்மைப்பிடிக்கப் பின்றொடர்ந்த படைக்குத்தப்பி மிகவுங்கை கடந்து செல்வார்போலும்.

அடங்கத்துறந்தேகுவார் - எ - து-- தாய்தந்தை மனைசுற்றமுதலிய குடும்பக்கூட்டங்களையெல்லா மொருங்கேதுறந்து செல்வாரன்றி யவர்க்கோர்தடையுமின்று-எ-று.

மலபரிபாகம்வாராமுன் ருஞ்செய்த விருவினைக்கீடாய்க் குடும்பபாசத்தாற் பிணிப்புண்டிவருந்துவதென்பது மப்பரிபாகம்வந்தகாலத் தோன்றினின்ற வருட்சத்தி யக்குடும்பபாசந் தொக்கமென்றறிவிக்கவறிந்துதுறந்து செல்வாரென்பது மப்போ திரவிற்றோன்றும்போலும் புத்தகளம்போலுங் குடும்ப மவர்க்குத்தோற்றுமென்பது மக்குடும்பக்குழாங்கள் பின்றொடர்வதென்றறிந்து தூரதேசத்திற் செல்வாரென்பது மிவ்வுவமைக் குறிப்புகளாற் காண்க.

இவை யிரண்டுதிருவெண்பாவாற் குடும்பபாரம் பொறுத்தற்காற்றாது வருந்தி யிழித்துவிட்டு விரைந்துசெல்வோர் தாய்தந்தையரா தியர் தமித்தற்குச் சிறிதுமுட்படாரென் றறிவித்தவாறுகாண்க. (எசு)

தாந்துறந்தபோதற்குக் குடும்பத்தார் சம்மதித்தாலப்பதியிலிருந்து தவம்பண்ணலாகாதோவெனின் மேற்சூறுகின்றார்.

உடுக்கைமறந்தவருக் கூர்காடென்றுண்டோ
வடுத்தயலாருண்டோ பேயானற் - சுடப்போட்
டெதிரிட்டதெல்லா மிழந்தார்க்கிருந்த
பதியைக்கொண்டிண்டோ பயன்.

உடுக்கைமறந்தவருக் கூர்காடென்றுண்டோ - வடுத்தயலாருண்டோ பேயானல் - எ - து - குடும்பக்கூட்டங்களையெல்லாந் துரிசறத்துறந்து தேகத்தையுஞ் சத்திருவாக்கண் டத்தேகத்தினுன் குமுழஞ்சுற்று முடுக்கையு மறந்துதிரிவோர்க் தோரென்று மிதுகாடென்றும் பகுத்துக்காணு நீணப்பு முண்டுகொல்லோ வஃதன்றிப் பூரணப்பேய் வயமாகையிஞ் லவர்க்கடுத்தாரு மயலாரு மூண்டுகொல்லோ விங்ஙன முடுக்கை மறந்தடுத்தா ரயலாரென்பதுந் தோன்றுதிருப்பதுமன்றி.

சுடப்போட் - டெதிரிட்டதெல்லா மிழந்தார்க்கிருந்த-பதியைக் கொண்டிண்டோபயன் - எ - து - காத்திலெடுத்தபொருண் மிகவுஞ் சுட வினைந்துபோட்டு நின்றுபோற் றமதறிவிற்கெதிரிட்ட கருவிகளையெல்லாந் தன்பமாகக்கண்டு ஞானக்கினியினு லெரித்திவற்றையு

மிழந்தார்க்குத் தாமுன்னிருந்தபதியி லிப்போதிருந்தது கொண்டே யனென்னேயுண்டுகொல்-எ-று. (ஏ)

இத்திருவெண்பாவால் தேகாபிமானம்விடித் ததனேப்பகையாகவு மெதிரீட்டவைகளேத் துன்பமாகவுங்கண்டனேத்தையுமிழந்து பூரண மருள்கொண்டோரிதரா டிதுகாடென்று மிவரபித்தா சிவரூபலாகொ ன்றும் பருத்தறித லின்றுகலின் முன்னிருந்தபதியி லிப்போதிருப்ப தனு லவர்க்குவரும் பயனுன்றுமின்றென் றறிவித்தவாறுகாண்க.

முன்னிருந்த பதியைவிட்டு மற்றேர் சிவதலத்தி லோரிடம் பற்றியிருந்தொருவர்முன்னிலேயா யுதாரக்கினிக் கன்னமாதிரம் வாங்கியுண்டு தவத்தைப்பண்ணலாகாதோவெனின் மேற்கூறுகின்றார்.

தூக்கஞ்சுகமான சுட்டறிவுகெட்டவர்க்குத்
திக்குண்டோவெங்குஞ் சிவாலயமா - மக்கினிக்குப்
பிச்சைபொதுநிழனீர் பேரிதுவேபேசார்தம்
மிச்சையிருப்பே காந்தத்தே.

தூக்கஞ்சுகமான சுட்டறிவுகெட்டவர்க்குத் - திக்குண்டோவெங் குஞ் சிவாலயமாம்-எ-று - மூன்கண்ட பிரபஞ்சதூக்கமெல்லா மிப் போ தாநந்தமாகக்கண் டச்சுட்டுப்போதங் கெட்டோர்க்கின்ன திசை யென்று மின்னவிடமென்றும் பகுப்புண்டாமோ வவர்க்கெத்திசையு மெவ்விடமுஞ் சிவாலயமேயாகு மஃதன்றி.

அக்கினிக்குப் - பிச்சைபொதுநிழனீர் பேரிதுவேபேசார்தம் மிச்சையிருப்பேகாந்தத்தே - எ-று - உதாரக்கினி யவித்தற்கூரின் கட் பிரசையு மிருத்தற்கிடம் பொதுச்சாவடி மாநிழலுந் தாகந்தணி த்தற் கேரியாதிநீர்களு மூளவாகலி னன்னவிடநீரென்று மிவற்றினது பெயராயே சொல்லாராயி னுவர்க்கிச்சைதானே தெனி லொருவரோ டுங் கூடியிராதுபேசா தேகாந்தத்திருப்பதே யிச்சையாம்-எ-று.

சிவத்தையுணர்ந் தோர்க் கெங்கும் பரிபூரணமாய்த்தோற்றுமா கலின் "எங்குஞ்சிவாலயமாகு,, மென்றார். (ஏ)

இத்திருவெண்பாவால் பிரபஞ்சங்களேயெல்லா மாநந்தமயமாக க்கண்ட துறவினர்க்குத் தீசையாதி யெவ்விடத்துஞ் சிவாலயமாகு மென்பதும் பிச்சையாதியுளவாகலி னன்னபானாதி போகிடத்திற்குறி யாரென்பதும் ஒருவரோடுங்கூடா தேகாந்தமெனத் திருப்பதே யர்க்கிச்சையென்பது மறிவித்தவாறுகாண்க.

ஒருவரோடுகூடி யிருந்துபேசுதலு மாகாதோவெனின் மேற் கூறுகின்றார்.

அங்கக்காரன்றுதிப்பு நாவிசுவையான துவுஞ்
சிங்கிருளிர்த்தது வும்போற் செகத்தோர் - சங்கத்தைத்
தீண்டுமனமேபகையாய்ச் சேராதுடலோடே
மாண்டுதிரிவார் துறவாவார்.

அங்கக்காரன்றுதிப்பு நாவிசுவையான துவுஞ் - சிங்கிருளிர்த்தது வும்போற் செகத்தோர் - எ - து - நாணுவேடங்கொண்டுநடிக்கும் வேடதாரியவ்வேடங்கட் கேற்றபாடை பேசுதல்போலவுங் கொல்லாநின்ற வற்சனபியொருவர்க்குச் சுவையான துபோலவுந் தன்காலிற்பூண்டவிலங் கொருவர்க்கிதமான துபோலவுந் தத்தஞ்சாதிகட்குந்தொழில்கட்குமேற்றசொற்களைச்சொல்லியுந் தன்பமாயுள்ளவிடயங்களேயின்பமாக்கருதிக்கொண்டு மனைவிமுதலிய பாசவிலங்கை யிதமாக்கைக்கொண்டு மயங்கிச்சுழலாநிற்ப ரிச்செகத்தோர்.

சங்கத்தைத்- தீண்டுமனமேபகையாய்ச் சேராதுடலோடேமாண்டுதிரிவார் துறவாவார் - எ - து - இங்ஙனஞ் சுழலாநின்றார் கூட்டத்தைக் கூடவேண்டுமென்றுகருது மனநினைவே தம்பகையாகி யத்தினைவோடுங்கூடா துடலோடுங்கூடியிருந்துங்கூடா தவ்வுடல்வாதனை மாண்டு திரிவாரே துறவினையுடையா ராவரென்றறிந்து-எ-று.

உடலோடேமாண்டு திரிவாரெனவே போகவாதனைதேகவாதனை போதவாதனையாகிய விம்மூன்றவாதனையுந் தீர்ந்தாரென்பதாயிற்று.

இத்திருவெண்பாவால் பிரபஞ்சங்கள் ஒருவரோடொருவர் கூடினும் நாநாவிதமாய் வார்த்தையாடலுமேயின்பமாய்க்கருதி மயங்குவரென்பதுந் துறவோர் அங்ஙனஞ்செய்வது துன்பமென்று விடுப்பதுமன்றித் தம்முடலோடுங்கூடியுங் கூடாதிருப்பரென்பது மறிவித்தவாறுகாண்க. (ஙஉ)

பொன்மலைமேலாகாயம் போவார்க்குப்பூமியுள்ளோ
சொன்னவேதாதாந்த மெய்ஞ்ஞானர் - பெண்ணருகே
வாவென்றுபாற்கடலில் வாழரியைமண்டுகெங்
கூவுந்தகைமைய தொக்கும்.

பொன்மலைமேலாகாயம் போவார்க்குப்பூமியுள்ளோ - சொன்னவே - எ - து - பொன்மலை முடிமேலாகாசகமனம் பண்ணுவோர்க்கு நிலத்தின்கண்ணுள்ளார்மிகவுந்தாழ்ச்சியான துபோன்ஞானிகட்குஞ் பிரபஞ்சிகட்கு முயர்ச்சிதாழ்ச்சியிருப்பவும்.

நாதாந்தமெய்தினனை - யென்னருகே-வாவென்றுபாற்கடலில் வாழரியைமண்டுகெங் - கூவுற்றகைமையதொக்கும் - எ - று - நாதாந்தத்துவத்தின் மூடிவாயிருந்த திருவருளையடைந்த ஞானிகளைப் பஞ்சபூதகாரியந் தானுகிய தேகத்தானுகியிந்தியவழி நுழைந்து செல்லும் பிரபஞ்சி யொருவ னென்மஹாக்கு நீர்வருகவென்றழைத்தால் பாற்கடனுப் பணரவணையிற்பள்ளிகொள்வாரநின்றபெருமாளைப்பார்த்தோர்தவளைநீரு மிக்கடன்மிசைமிதந்து துயில்கின்றியானு மிக்கடன்மிசை மிதந்துதுயிற்கின்றேனு மக்குமரியென்று பெயராகவி னெனதருகே நீர்வருகவென் றழைக்குமுறைமைய தொக்கும்-எ-று.

பொல்லாலேமுடியை நாதாந்தத்திற்கு மம்மகுழுடிமேற் ரேன்றுமாகாயத்தை யிந்நாதாந்தத்திற் ரேன்றுந்திருவருளுக்கு மவ்வாகாயத்திற் கமனம்பண்ணுவோனை யிந்திருவருளையங் கடந்துசெல்லும் ஞானிகளறிவிற்கு முவமித்துக் கூறியவாறுகாண்க.

ஞானிகடந்துவங்கட்கெல்லா மூடிவாய்நின்ற பரிபூரணத்தையடைந்தவர் பிரபஞ்சிகடந்துவங்கட்கெல்லா மடியாயுள்ள பஞ்சபூதகாரியந் தானுயுள்ள தேகத்தையடைந்தவர்களின்,, பொன்மலைமேலாகாயம்போவார்க்குப் பூமியுள்ளோ,, சொன்னவேயென் றங்ஙன மூவமைகூறினுர்.

ஞானிகளது மகிமையையறியாததா லவ்வருமூலகத்தின்கண்ணிருக்கின்ரு ரியானு மூலகத்தின்கண் ணிருக்கின்றேனவருமனிதரியானுமனிதனென்று கருதி யழைத்தானுகலிற் "பாற்கடலின் வாழரியை மண்டுகெங் கூவுற்றகைமையதொக்கு மென்றிங்ஙன முவமைகூறினுர்.

இத்திருவெண்பாவான் ஞானிகட்கு மஞ்ஞானிகட்குந் தாரதம்மியமுமவரை யிவரொண்ணுமை யழைப்பது மிங்ஙனமென் றறிவித்தவாறுகாண்க. (உ-ம்)

ஆயிற்பத்தியோடு மனமொழி மெய்களா லவனைவணங்கி யென்மனைக்குத் தேவரீரெழுந்தருளுக்வென் ரேருவனழைத்தாற் செல்வரோவெனின் மேற்கூறுகின்றுர்.

கும்பிட்டுங்கீர்த்தித்துங் கோடியுபசாரம்
வம்பிட்டபத்திவலிவழியை - நம்புவரோ
ஞாலிவாதனைக ளொன்ரு தவப்பெருமை
ஸ்ரீலனைவினைக்கு மென்னின்.

கும்பிட்டுங்கீர்த்தித்துங் கோடியுபசாரம் - வம்பிட்டபத்திவலிவு ழியை-நம்புவரோ -எ - று- ஒருவன்வந்துஅஷ்டாங்கபஞ்சாங்கத்தோடுவணங்கியு மனைகதோத்திரங்களோப் பண்ணியுஞ் சுவாமிக ளடியே

ன்மனைக் கொழுந்தருளுகவென்று கோடிபேதங்களாயுபசாரங்களைச் செய்து மிங்ஙனமழைக்கும் புதுமைபொருந்திய பத்தியுருகியவலிநெ நியை ஞானிகளாயினோர்பொருளாகக் கருதிச்செல்வரோடியினன் போலிவணங்கியன்னங்கொடுக்கிறே னென்றழைத்தாலவ்வன்னமாத் திரஞ் சென்று வாங்கிக்கொள்ளலாகாதோ வெனின்.

ஊணுதிவாதனைக ளொன்றுதவப்பெருமை- வீணைவிளைக்குமெ னின் - எ - து - ஊணுடுக்கைமுதலிய வாதனைகளையும் விரும்பாதவர்த வவா வறுதியாகியபெருமையவரிருக்குமிடத்தவர்வேண்டாவென்றுத ள்ளவும்வீணு பவ்வூணுதிகளைக் கொடுப்பிக்குமாயின்-றே.

உபசாரமிருதியைக் கோடியென்று மொருவருமங்ஙனஞ்செய் யக்கண்டதின்மையால் "வம்பிட்ட,, வென்றுகூறினர்.

"ஊணுதிவாதனைக,, ளெனவேதோற்குளிர்கட்குமருத்துமுறை யுளும் வேண்டாவென்பதாயிற்று. (உக)

தாமூணுதிகளைவிரும்பி யொருவனைப் பின்சேறலாகாதன்றியொ ருவன்போயிம்மனத்தி யூணுதிகொடுத்தற்குத் தம்மனைக்கழைத்தாலு ஞ்செல்லாதிருப்ப தேதுகாரணமெனின் மேற்கூறுகின்றார்.

கருமந்திரிவிதத்திற் கட்டவிழுங்கால
மரவுந்தவளையும்போலாகி - யிருதலையிற்
கொள்ளியெறும்பாயுடம்பே கூற்றுகித்தோற்றுமெனி
லுள்ளினருமூருமென் ஞகும்.

கருமந்திரிவிதத்திற் கட்டவிழுங்கால - மரவுந்தவளையும்போலா கி - யிருதலையிற் - கொள்ளியெறும் பாயுடம்பே கூற்றுகித்தோற்று மெனின் - எ - து - ஞானுசாரியர் திருபாதோதக்கத்தானுங் காசர்ண பரிசத்தானுந் திருவாக்கானு மவரதாணவமாயை கருமங்களாகியகட் டவிழ்தலி யாகாதென்ற காலமாகலிற் றம்முடம்பே பாம்புந்தாமோர் தவளையும்போலாகி யவ்வுடம்பே யிருதலையு மெரிகுழித்த கொள்ளி யாகித் தாமக்கொள்ளிக் குழியுட்சுழலு மெறும்பாகி யவ்வுடம்பேத ம்மைப்பதித்துச் செல்லுங்கூற்றுண்டு தோற்றுமெனின்.

உள்ளினருமூரு மென்னுகும் - எ - து - இங்ஙனம் பகையாய்த் தோற்றுமுடம்பிற் குபசாரஞ்செய்யக் கருதினேரு மவரழைத்துச் செல்லுமூரு மென்னபயனைத்தரு மவர்க்கு-எ-று.

பாம்பு தவளையைப்பற்றி நிற்றல்போலுடம்பவரைப் பற்றிநிற் றலாலு நெருப்பவியு முளவுங் குழற்கண்வருந்திச் சுழலுமெறும்பு போ லுழ்வினையுமனவு முடம்புள்வருந்தியிருத்தலாலுங் கூற்றுயி

ரைப் பிணித்துச்சேறல்போ லவரைப்பற்றிநின்று பிச்சையாதிக்குச் செல்லப்பண்ணுதலானு மங்ஙன முவமைகூறினர்.

'ஒருவன் றனக்குப்பகையானுர்மேல் வெறுப்புண்டாவது மன்றி யப்பகைவர்க் கிதஞ்செய்வார்மேலும் வெறுப்புண்டாவதுபோ லவர்க்குப்பகையாகிய .வுடம்பின்மேல் வெறுப்புண்டாவதுமன்றி யவ்வுடம்பிற் கிதஞ்செய்வார்மேலும் வெறுப்புண்டாமாகலி ''னுவ்வினரு மூருமென்னுகு,,மென்றுர்.

திரிவிதத்திற் கட்டவிழுமென்றமையா லிரண்டுமலமும் வருவிக்கப்பட்டது. (உட)

ஞானுசாரியரை யடைந்தோரு மோரூர்ன்கண் ணிருவன்செய்யுமுபசாரத்தை யங்கீகரிக்கவில்லையோ 'விவரென்ன யங்ஙனமங்கீகரியா திருப்பதெனின் மேற்கூறுகின்றர்.

பிறவாதயோனி பிறந்துபிறந்தெல்லா
மறிவானுனென் றறியா - வறிவை
யறிந்துமீனண்டவழி பருந்திற்ருஞ்சாய்ப்
பிறந்தவர்களேன்பார்ப்பார்ப் பின்.

பிறவாதயோனி பிறந்துபிறந்தெல்லா- மறிவானுனென்றறியா- வறிவை- யறிந்து -எ - து - தேவமானிடப்பிறப்பின்றி மற்றப்பிறவாதயோனிபேதங்க ளெல்லாவற்றுள்ளுமளவில் காலஞ்சென்றுசென்று பிறந்தெய்த்துப் பின்னர்த் தெய்வகதியாய்ப் பிறவிகட்கெல்லாந்தப்பித் தன்னையறிதற்கேதுவாய விம்மானிடப்பிறவியிற் பிறந்து மித்தேகத்துளிருந் தெல்லாவற்றையு மறிவானுகிய யான்யாரென் றறிதற்காரணமாய வறிவை யிம்மானிடதேக மனேகத்தாற்செய்த சிவபுண்ணியமேலீட்டா லிப்போதறிந்து.

மீனண்டவழி பருந்திற்ருஞ்சாய்ப் பிறந்தவர்க ளேன்பார்ப்பார்ப்பின் - எ - து - நீரினுழைந்துசெல்லு மீன்முட்டை வழித்தோன்றுமூங்ருஞ்சாயத்திற்செல்லும் பருந்தின்முட்டை வழித்தோன்றுங் ருஞ்சாய்ப்பிறந்ததுபோற் பிறப்புக்கேதுவாய்ப்பிறந்த பிறப்புக்கண்ணீங்கி வீட்டிற்கேதுவாய்ப் பிறந்தோர்கண் மற்றையரைப்போலு மூருறவென்றேன் பார்ப்பாரிப்போது-எ-று.

முட்டைவழித்தோன்ற விரண்டிற்குமொத்ததாயினு முன்னீருட்சென்றதும் பின்னுகாயத்திற்செல்வது மொவ்வாததுபோன் முன்னெருழிப்போதும் பிறந்தமானிடப் பிறப்பொத்ததாயினு முன்பிறப்பிற்சென்றது மிப்போது வீட்டிற்செல்வது மொவ்வாதாகலி னிங்ஙன மூவமைகூறினர்.

மூத்பிறப்பிற் சிவபுண்ணிய மேலீட்டாலிப்பிறப்பி லெளிதிற்ற
ன்னேயறிந் தமையா லறிந்து பிறந்தவர்களென் றூர்.

தன்னேயறிந்தாற் றலேவனேயு மறியலாமாகலி "ஞனொன்றறிய
வறிவையறித்" தென்றூர். (உங)

இங்ஙன மூருறவாதி யொன்றுமில்வேண்டார்க்குப் பெருமைதானி
யாதெனின் மேற்கூறுகின்றூர்.

அரசர்க்குடைமை யளவற்றபேறே
பெருமையானூற்போலப்பெற்ற - வரிபிரமர்க்
கப்பாலாம்வாழ்வு மணுவாகியாதுமற
விப்போபெருமையிவர்க்கு.

அரசர்க்குடைமையளவற்றபேறே-பெருமையானூற்போல-எ-து
அளவற்றநிரவிய மாடை பூடணுதிகளைப் பெறும்பேறே யரசர்க்குப்
பெருமையரூற்போல

பெற்ற - வரிபிரமர்க் - கப்பாலாம்வாழ்வு மணுவாகியாதுமற-
விப்போபெருமையிவர்க்கு - எ - று - அவ்வரசர்முதலியோர் வாழ்வி
ற்குமேலாய வாழ்வினேப்பெற்ற வரியிரமர்வாழ்விற்கு மப்பாலாகிய
பதமுத்திவாழ்வுகளு மணுமாத்திர மின்பமாயழியுமெனக் கண்டிருந்
தவிகபரவாழ்வுகளி லியாதொன்றினும்பற்றற்றவிப்பற்றறுதியையிவர்
க்கிப்போது பெருமையாம்-எ-று.

"அரசர்க்குடைமை" யென்றுபொதுப்படக்கூறினமையா லுல்
வகைச்சேனை நால்வகையர ணுதேசங்கண் முதலியவுங்கொள்க.

அவர்க்கப்பேறு மேன்மேற்பெறுவது பெருமையானூற்போலி
வர்க்கப்பேறு மேன்மேல்விடுவது பெருமையென்பது மவர்க்கப்பே
றின்மை சிறுமையாவதுபோ லிவர்க்கப்பேறுபெறுவது சிறுமையே
யன்பதும் பேற்றிலேமேற் பற்றுப்பிறவிக்கேதுவதுஅப்பேற்றின்மேற்பற்ற
றறு வீட்டிற்கேதுவென்பதும் பிறப்பையடைதல் சிறுமைவீட்டை
யடைதல் பெருமையென்பது மிதனுற்காண்க. (உச)

இங்ஙனமிருந்தஞானிகள் வீட்டிற்கேதுவாகிய சரிதாதிகளேத்தா
ன்செய்யார்களேலாவெனி னவர்செய்யுஞ் சரிதாதிக ளிவையென்றுமே
ற்கூறுகின்றூர்.

சரிதையுடல்வெறுத்த றன்னேயறிதல்
திரியோகங்கூடாமைகளாத் - திருஞானம்
வேறின்மைபேரின்பம் விட்டுரியாமேலீடு
பேறின்மைதானே பெறல்.

சரீரத்தையுடல்வெறுத்த றன்னையறிதல் - கிரியோசங்கூடாமை - எ - து - அவர்க்குச் சரிதையாவது மலச்சுமை துக்கம்விளைக்குங் குரம்பை யனித்தியமிருதெனக்கண் டெண்டிசையருக்குதன் முதலியவற்றை னுடலத்தைவெறுத்தல் கிரியையாவது தத்துவமுப்பத்தாறையு நிய திகளைந் தவற்றின் முடிவினின்ற தம்மை யுள்ளபடியறிதல் யோகமாவ தங்ஙனந் தம்மையறித்தவிடத்துத் தமக்குயிர்க்குயிராயிருந்த திருவ ருளைக்கண் டவ்வருளேவடிவாகியிருந்து முன்னீக்கிநின்ற கருவிக ளோடுங்கூடாமை.

கேளாத் - திருஞானம் - வேறின்மைபெரின்பம் விட்டுநியாமே லீடு - பேறின்மைதானேபெறல் - எ - து - அம்மூவகையாலு முண் டாங் கேட்டறியலாகாத வ்வழகியஞானமாவ தவ்வருளேவடிவாயிருந் தா தாஞ்சிறிதுந்தோன்றாது பரையேயாகிய வேறின்மையினையு மத ன்மேற் பேரின்பம்விட்டுத் தோன்றுத மேலீட்டினையு மிவ்வின்பத் தைப் பெற்றேமென்னும் பேறின்மையும் பெறுதருனேயாம்-எ-று.

ஞானசாரியர் மவுனமொழியாலறிவிக்கவறிதலாற்"கேளாத்திரு ஞான,, மென்று மின்பமேலிடாமுன் விட்டுத்தோன்றலான் "விட்டுநி யாமேலீ,, டென்றுங்கூறினர் பேறின்மையின்பரிதிதம்.

கும்பிட்டென்னுந் திருவெண்பாமுதலிவை யைந்துதிருவெண் பாவானு ஞானிகளின தியற்கை நெறிகளினது முறைமையறிவித்தவா றுகாண்க. (உஅ)

ஏழாவது - துறவு - முற்றிற்று.

ஆ திருவெண்பா - ஈரகம.

உ

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது.

அருளவத்தைத்தன்மை.

இங்ஙனஞ் சரிதாதிகளோதித் துட்டுறவுபுறத்துற வுடையராயிப் பிருதிவிமுதலுததத்துவ மீறுகச்சொல்லப்பட்ட தத்துவமுப்பத்தாறையுங்கடந் தாணவவிருளையுங்கடந் தான்மதரிசனமுதலிய சுத்தாவத்தையினிற்போ துதன்மை கூறினமையாலிவ்விதாரத்திற் கருளவத்தைத்தன்மை யென்று பெயராயிற்று.

உண்டொழித்துத்தேடி மூடம்பராயொன்றுமுத
லண்டர்பதத்தப்பாதி மைம்புலத்து - முண்டி
மழுங்கினர்க்குப்போகம் வருத்தமாய்த்தோன்ற
வெழுந்தவருள்கெட்டே னிதென்.

உண்டொழித்துத்தேடி மூடம்பராயொன்றுமுத - லண்டர்பதத்
தப்பாதிமைம்புலத்து - முண்டி - மழுங்கினர்க்கு - எ - து - ஒருடம்
பிற் பிராரத்துவத்தைத் புண்டொழித் தவ்வுடம்பி லவ்வினையை யுண்
டொழித்தற்கிடையே யிதாகிதங்களாகிய தொடர்பாற்றேடி மாகாயி
யத்தாற் றொன்றுதொட்டி வருமூடம்புகளேயுடையரா யிப்பூலோக
மாகிய வொன்றுபதற் றேவர்பதவிக்கப்பாதி மாண்டாண்டிச்சென்
றிருந் தைம்பொறிகளானு மவ்வவ்வுடம்புக்கேற்ற விடயபோகங்க
ளே யின்பமாகக்கண்டிண்டளவில் காலந்தழும்பேறினுர்க்கு.

போகும்வருத்தமாய்த்தோன்ற - வெழுந்தவருள்கெட்டேனிதெ
ன்ன - து - அப்போ தின்பமாய்த்தோன்றியபோக மிப்போ துன்
பமாய்த்தோன்றுதலாகிய திருவருள்கெட்டேனிதென்கொல்-எ-று.

ஓர்பிரகாரமின்றிச் செய்தவினையின் பேதப்படியே தறுகரண
புவனபோகங்களும் பேதித்துத்தோன்றலாற் "றேடுமூடம்பராயண்
டர்பதத்தப்பாதி மைம்புலத்துமுண்டி மழுங்கினர்க்,, கென்றார்.

தறுவாதிகள் பேதிப்பதாவன - நல்லதேசத்து நல்லோர்களங்கி
கரித்த போகத்தைப்புசித்தலானு நல்லதினைவோடு நல்லசொல்லோடு
நற்றொழிலேச்செய்தலானும் பொல்லாததேசத்துப் புவனபோகங்க
ளைப்புசித்தலானும் பொல்லாததினைவோடும் பொல்லாதசொல்லோ
டும் புன்றொழிலேச்செய்தலானு மிவற்றுளொன்று தன்றுமெனறுதீ
மையாய் மாறிமாறிவருதலானு மிதைமுதலாயவற்றுற் பேதிப்பதென
க்கொள்க. (க)

இத்திருவெண்பாவாற் சுத்தாவத்தையினின் றருளீத்தரிசித்தோ
ர்க்கு விடயத்தின்பமாய்த்தோற்றுமென் றறிவித்தவாறுகாண்க.

வாசகத்துங்கோவையினு மாணிக்கமாகவழங்
காசைத்துறையநந்த மாமதிலே - யாசை
யிருதலைப்பாலேக மெனவிரண்டாயித்தி
லொருதலைக்காமந் துறவன்றே.


வாசகத்துங்கோவையினு மாணிக்கமாகவழங் - காசைத்துறைய
நந்தமரம் - எ - து - மாணிக்கமணிபோலாகப் புலவராலெடுத்தவழ
ங்காநின்ற சங்கத்தார்தூதலியோர் கூறியவாசிரியப்பாக்களினு மாணி

க்கவாசகசுவாமிகளருளிச்செய்த திருச்சிற்றம்பலக் கோவையார்முதலிய கோவைகளினுங் காமத்தின திலக்கணமாகக் கூறப்பட்ட இளவித்துறைக ளநந்தமாகும்.

அதிலே - யாசை-யிருதலைப்பாலேக மெனவிரண்டாமித்தி-லொருதலைக்காமத்துறவன்றே - எ - து - அக்களவித்துறைகளுட் காமத்தலைவனுந் தலைவியுமாகிய விருவர்பாலுஞ் சமனெஞ்சுக்கூடிவ தாகிய விருதலைக்காமமெனவு மொருவர்பான் மிருந்து மொருவர் பாற்ரூறைத்துங் காமமொவ்வாது கூடிவதாகிய வொருதலைக்காமமெனவு மிரண்டிளடன்ருவதா மிவற்றுட்டலைவன் விழையாதிருப்பத் தலைவிவிழைந்து பற்றுமொருதலைக்காமம்போல விடயாநந்தத்தைத்துறந்து சொரூபாநந்தத்தைப் பெறுமொருட்டிச் சுத்தாவத்தையினிற்போற்கிச்சொரூபாநந்தங் கிடைத்திலதாயினு மிவ்வாநந்தத்தையேபெற விரும்பித்தொடர்ந்து நிற்பதன்றேதுறவாவது-எ-று.

தலைவன்கூடியின்பங்கொடா திருப்பினுந் தலைவி தனதுகற்பாற்பிறனாவிழையா தத்தலைவனையே விழைந்துநிற்றல்போற் சொரூபாநந்தந் தனக்குக்கிடைத்திலதாயினுந் தனதுதவக்கற்பால் விடயாநந்தத்தை விழையாது சொரூபாநந்தத்தையேவிழைந்து நிற்கவேண்டுமென்பதுந் தலைவிகற்பினைக்கண்டு தலைவன் காருண்ணியத்தால் வட்கின்பங்கொடுத்தல்போ லிவன் றவக்கற்பினைக்கண்டு சிவங் காருண்ணியத்தாற் றனதானந்தத்தை யிவனுக்குக்கொடுக்குமென்பது மிவ்வுவமைக்குறிப்புளளாற் காண்க. "வாசகம்போலிருத்தலி ஞிரியப்பாவைவாசக" மென்றார். (உ)

இத்திருவெண்பாவாற் சொரூபாநந்தத்தை விரும்பிச் சுத்தாவத்தையினிற்போர்க் கிச்சொரூபாநந்தங் கிடைத்திலதாயினு மிவ்வானந்தத்தையே விரும்புவதன்றி யசுத்தாவத்தையிற்றிரும்பி யவ்விடயாநந்தத்தை விரும்பலாகாதென்று கூறியவாறுகாண்க.



சாத்துவிதமெட்டாய்த் தசவவத்தையாய்த்தன்னே
நீத்தவனுப்த்தானுப்பின் னேயமாய்க் - கூர்த்தசெல்லாஞ்
சுத்தவவத்தைத் துவட்சித்துகள்ற்ற
வத்துவிதர்க்கே துமுயா.

சாத்துவிதமெட்டாத் தசவவத்தையாய்த்தன்னே - நீத்தவனுப்த்தானுப்பின் னேயமாய்க் - கூர்த்தசெல்லாஞ் - சுத்தவவத்தைத்துவட்சி - எ - து - ராசததாமதகாரியங்களே யெல்லாநீக்கிச் சாத்துவிதகரியமாகிய நிராசைமுதலிய வெண்குணங்களோடு மூலபவமலமருவ

க்கியநோக்கமுதலிய பத்தவத்தைகளையுமுடையனுகி இத்தநற்குணங் களாற் றத்துவமுப்பத்தாறையும் கடந்து தன்னையறிந் தருளோத்தரிசித் தத் தற்போதமடங்கினவனுகிப் பின்னர்பாரையேதானுகிப் பின்னர் நேயத்தழுந்தினேனுகி யிங்ஙன மொருவனுண்ணிதா யறிந்துசென்ற தெல்லாஞ் சுத்தாவத்தை யதுபவங்களாகும்.

இதளற்ற -வத்துவிதர்க்கேதுமுதியா -எ-து- இந்தசுத்தாவத்தை களை யறிந்துசென்ற போதமற்றச் சிவத்தோடு பிரண்டறக்கலந்த வ த்துவிதீதையுடையோர்க்குமுற்கூறிய வநுபவங்களுள்யாதொன்றே னுந் தோன்றுதிவர் மவுனநிஷ்டையாயிருப்பர்-எ-று.

"சாத்துவிதமெட்டாவன,, நிராசை - தவம் - பொறுமை - கிரு பை - சந்தோடம் - வாய்மை - அறிவுடைமை - அடக்கமுடைமை- இவையென்வகையுமெனக்கொள்க. 'தசவவத்தையாவன, பிரபஞ்சத் தை மாயாவுடிவமாய்க்காணு தருவ்வடிவாய்க்காணு மருக்கியநோக்க முஞ்-கருவிகளை நியதிகளையுஞ்சிந்தனையு முற்பிறவியிற்பட்டதுன்பங் களைநினைத்து நெட்டுயிர்ப்பெறிதலுந் திருவருள்மேலீட்டா லுடம் பிலிளஞ்சூடெழுதலும் ஊணுதிகளைத்துறத்தலும் ஒருவரோடையா டற்கு மானமுறுதலும் மவுனமாயிருத்தலும் பித்தேறினாற்போலப் பி ரபஞ்சப்பசுப்புத் தோன்றுதிருத்தலும் - பிராணவாயுவிறத்து மூர்ச் சித்திருத்தலும் - போதமிறந்து நிற்றலுமாகிய விவைபத்துமெனக் கொள்க.

சுத்தாவத்தைகளோடுங்கூடி யவற்றிற்றோன்று மநுபவங்களைப் போதஞ் சுருங்கிநின்றறிதலானுமப்போதந் தேய்தல்வளர்தற்குத்தக் கதா யோர்காலுயர்ந்த வநுபவமாயு மோர்காற்றுழ்ந்த வநுபவமாயு மாறித் தோன்றலானுந் "துவட்கி,, யென்றார்.

கேவலாவத்தையோ டானவநீங்கிற்றுயினு மதனதுகாரணம்போ தமிறக்குமளவு மிருத்தலிற் 'போதத்தைத், துகளென்றார். (ரு)

இத்திருவெண்பாவான் ஞானசாதகனிலக்கணமுஞ் சாத்தியாதில க்கணமுங் கூறியவாறுகாண்க.

அவ்வநுபவங்களை யறித்துசொல்வது வாக்காகவி னிவ்வாக்கினை மவுனமாக்குவது முத்தியன்றுவெனின் மேற்கூறுகின்றார்.

உரையொடுங்கிற்போத முதிக்குமொழிவே
யருளாமதன்போக்கசையாப் - பரமோகம்
போலுஞ்சுகாதீதம் புண்ணியர்க்குப்பொய்யுறியா
தேலுர்க்குப்பல்லித மாகும்.

உரையொடுங்கிற்போத முதிக்குமொழிவே - யருளாமதல்போ
க்கசையாப் - பாயோகம் - போலுற்சுகாதீதம் - எ - து - வர்க்கினை
மவுனமாக்கி னுள்ளே போதத்தோன்றுமாகலி னவ்வாக்குமவுனமுத்
தியன்று. ஆயிற்போதமடங்கின் முத்தியோவெனிற் போதமடங்கின
ருட்டானசனம்மாகலி னப்போதமடங்கன் முத்தியன்று ஆயினருட்டரி
சனநீங்குதன் முத்தியோவெனி னவ்வருட்டானசனநீங்கிற் போதஞ்சி
றிதுமசையாத பாயோகமாகலி னவ்வருட்டானசன நீங்குதன்முத்தி
யன்று. ஆயிற்பாயோக நீங்குதன் முத்தியோவெனிற் பாயோகநீ
ங்கிற் சுகப்பேறுமாகலி னப்பாயோகநீங்குதன் முத்தியன்று. ஆயி
னச்சுகப்பேறு நீங்குதன்முத்தியோவெனி னச்சுகப்பேறு நீங்குதலே
சுகாதீத மிச்சுகாதீதமேமுத்திநிலை.

புண்ணியர்க்குப்பொய்யுதியா - தேனோர்க்குப் பல்விதமரகும்.
எ - து - இச்சுகாதீத முத்தியையடைந்த புண்ணியர்க்குமேற் கூறிய
சுத்தாவத்தையிற்றோன்றும் பொய்களியாவுந்தோன்று நிம்முத்தியை
ப்பெறு தச்சுத்தாவத்தையினிற்போர்க்கதுபவம் பலவிதமாய்த்தோற்
றும்-எ-று.

பாயோகங்கூறி மதநீக்கப்பாற் சுகாதீதங்கூறினமையா லிவற்றி
ற்கிடையிற்றோன்றுஞ் சுகப்பேறுவருவிக்கப்பட்டது.

பரிபூரணசிவத்திற்குத் தம்மைக்கொடுத்தலான் மெய்ஞ்ஞானிக
ளைப் "புண்ணிய,, ரென்றார்.

சுகாதீதத்திற்குச் சுத்தாவத்தைக்காட்சிப் பொய்யாகலிற் "பொ
ய்யுதியா,, தென்றார். (சு)

இதனிருவெண்பாவான் முத்திநிலையிதென் றறிவித்தவாறுகாண்க.

அச்சுகாதீதமுத்தியை யடைதற்கேதுவாகிய சுத்தாவத்தையினி
ற்போது ணங்களியாவையெனின் மேற்கூறுகின்றார்.

கருவிகழலவரைநோக்காஞ்சிந்தை
பெருமூச்சாம்போதம்பிறியி - லருளாய்
வெதும்பியுடல்வெறுக்கு மின்பாய்விகள
மூதிர்நீத்துறையுநாணு மொடுங்கும்.

கருவிகழல வரைநோக்காஞ்சிந்தை- பெருமூச்சாம்போதம்பிறி
யில் - எ - து - கருவிகணீங்கவே மலமேனின்று நோக்குவோர்க்குநி
லத்தின்கண்ணுள்ளபொருள்க ளருகித்தோன்றுமாப்போலப்புறபஞ்
சமெல்லாம் பொய்யாய்த்தோற்றுவதா மக்கருவிகளுளதோமுகமாய்
நின்ற போதமவற்றைப்பிறியி னோர்த்தமுகமாய்நின்று தன்னையறியும

ங்ஙனந் தன்னையறிந்தபோ திங்ஙனமிருக்கின்றயா னெறும்புகளா லு ங்கூழரிப்புண்டதுபோ லளவில்காலமக்கருவிகளா லரிப்புண்டேனே யென்னுஞ் சிந்தனையா னெட்டுயிர்ப்புளவாம்.

அருளாய் - வெறும்பியுடல்வெறுக்கு மின்பாய்விகள - முதிர்ந் துறையு நாணுமொடுங்கும் - எ - து - தன்னையறிந்தபின்ன ருருட்டரி சனமுண்டாய்ப் பின்ன ரவ்வருளே தனக்குவடிவாகி யிம்மாயாவுட லம்வெறும்பி யிதனைவெறுப்பன் பின்ன ராநந்தமுண்டா யிவ்வாநந் தமேலிடாகிய வுன்மத்தந் தலைமீக்கொண்டி மவுனமாயிருப்ப னஃதன்றிப் பிரபஞ்சத்தார்க்கு நாணுவதாய நாணமுநீங்கும்-எ-று.

"பேதம்பிறியி,, லென்றதனாற் றன்னையறிந்தென்பது வருவிக்க ப்பட்டது,, "அருளா,, யென்றதனா லருட்டரிசனம் வருவிக்கப்பட் டது நாணமொடுங்கலாவது நீராடல் பூசனையாதிசெய்திலனென் றல கத்தார்பழிப்பது குறித்துவரு நாணமெனக்கொள்க. (இ)

இத்திருவெண்பாவாற் கருவிகணீங்கியவிடத்து வருங்குணமுந் தன்னையறிந்தவிடத்து வருங்குணமுந் திருவருடோன்றியவிடத்து வ ருங்குணமு மாநந்தந்தோன்றியவிடத்து வருங்குணமுங் கூறியவாறு காண்க.

வேர்க்கும்விழிதுதும்பும் பொய்யதியின்மெய்வெதும்பி
யார்க்கும்விறைக்கு மருளுரிப்பின் - வாக்குமன
நின்றுபரிபூரணமா நேயத்தேகார்க்கதமாய்க்
கன்றிப்புளகிதமாங் காண்.

வேர்க்கும்விழிதுதும்பும் பொய்யதியின்மெய்வெதும்பி - யார்க் கும்விறைக்கும் - எ - து - பொய்யாகியகருவிகளே யுள்ளபடி பொய் யாயதியின் மெய்யில் வெய்ர்வையரும்பும் விழியினீர்துதும்பு மெல் லாம்பொய்யென் றறிந்துகொண்டேனென் றுடலத்திளஞ்சூடெழவா ரவ்வாரிப்பன் பின்னர்த் தன்னையுள்ளபடிகண் டொன்றினையு நாடாது டல மசைவறவிருப்பன்.

அருளுரிப்பின் - வாக்குமன - நின்றுபரிபூரணமா நேயத்தேகா ர்க்கதமாய்க் - கன்றிப்புளகிதமாங்காண் - எ - து - பின்ன ருருடோன் றுமிடத்து வாக்கு மனங்களினின் றவ்வருட் பரிபூரணமாய்த்தோன்ற விதற்குமுதலாய நேயத்தை யென்றைக்கண்டவேனென் றந்நேயத் தைநாடி மேகங்குமுறுவதுபோலர் புள்ளேருமுறி புளம்வெதும்பியு டலீருரோமாஞ்சலியா

வாக்குமனங்களினின் றருட்பூரணமாய்த்தோன்றுவதாவது மனத்தானினைத்தறினவு நினைந்ததில்லியாயும் வாக்காற்சொன்னசொற்கள் சொன்ன தில்லியாயுந் தனக்கநுபவமாய்த் தோற்றுவதா மெனக் கொள்க. (க)

இத்திருவெண்பாவாற் கருவிகளைப் பொய்யென்றறிந்தவிடத்து வருங்குணமுந் திருவருளுதித்தவிடத்து வருங்குணமு மறிவித்தவாறு காண்க.

பேயைப்பெண்ணென்றிருந்தும் பித்தனைக்குப்பொன்றேற்று
மாயத்தூணுண்மிமன மாண்மிமயல் - போயத்
திடிக்கமேபித்தாய்த் தெளிமயலானுற்போ
னடக்குமருண்மேலிட்ட தாள்.

பேயைப்பெண்ணெனிருந்தும் பித்தனைக்குப்பொன்றேற்று மாயத்தூணுண்மிமன மாண்மிமயல் - போய் - எ - து - பெண்களைப் பேய்களைப்போலும் பிடித்துவாதிப்பவனென்று கண்டிருப்பதாயும் பித்தனைக்குப் பொன்றேற்றுப்போவதாய்க் காண்பதாயு முதாரவெளி வாய்த்தோன்று மாயத்திற்குக் காடிகூம்மூதலிய ஓன்களியாதுகிடைப்பினும் வாங்கியுண் டவைகண்மேல்வைத்த மயலும்போ யவற்றை மெய்ப்பொருளாகக்காணு மனமுமிறந்து.

அத் - திடிக்கமேபித்தாய்த் தெளிமயலானுற்போ - னடக்குமருண்மேலிட்டதாள் - எ - து - அப்பொருந்த லருந்தல்களையு மவற்றிற் கேதுவாய பொன்னையும்விழைந்து நெடுநாட் பிறவித்துன்பத்தால்வருந்தினேமேயென்னு மந்தத்திடிக்கந்தானே விடாப்பிராந்தியா யறிவு பயித்தியங்கொண்டோனைப் போலவும்விளங்குந் திருவருண்மேலிட்டகாலத்து-எ-று.

பேய்பிடியுண்டு விடுபட்டோனுக் கோர்காலத் ததனைக்கண்ட போது பயந்தோற்றல்போன் முன்பெண்களால் வருந்தியவருத்தத் தைநோக்கி யவரைக்கண்டபோது பயந்தோற்றலானங்ஙனமுவமை கூறினார்.

"பித்தனைக்குப்பொன்றேற்று,, மென்றதனினு மிழிவாய்க்கூறினமையா லோட்டிச்சின்னங்களையுஞ் சிறுகற்களையும்போற் காண்பா ரென்பதாயிற்று.

எங்கும்பரிபூரணமாய வருள்வழிவாயிருத்தலானும் பொன்பெண் மண்ணு முடலென்னு மைவகையும்வெறுத் தலகத்தாரோடுமெதிரபட்டிருத்தலானும் "தெளிமயலானுற்போ,, லென்றார். (எ)

இத்திருவெண்பாவா லருள்மேலிட்டதா ணடக்குங்குணங்கூறிவி வாறுகாண்க.

மலட்டுமகனீங்கி வரக்கண்டதாய்தா
லலத்திமகிழு மதுபோ - லுலப்பிலாக்
காலங்கழித்ததையுங் காணுதைக்கண்டகளிப்
பாலுமழுது சிரிப்பார்.

மலட்டுமகனீங்கி வரக்கண்டதாய்தா - லலத்திமகிழுமதுபோல் - எ - று - நெடுதாண் மலடிருந்து பின்ன ரரிதாய்ப்பெற்ற புதல்வன் றன்மனைவிட்டுநீங்கி யயன்மனையிற்சென்று மீண்டுவா வெதிர்கண்ட தாய் சென்றெடுத்து மார்போடணைத்து முன்னரவனைப்பெறுத காலத்தையு மிப்போ தவ்னைப்பெற்றுக கண்டகாட்சியையு நினைத்ததாலா ட்டுதலோ ட்டழு தவ்வழுகையோடுஞ் சிரிக்கும்தபோல்.

உலப்பிலாக் - காலங்கழித்ததையுங் காணுத்தைக்கண்டகளிப் பா லுமழுதுசிரிப்பார் - எ - று - திருவருளைப்பெறு தலவிறந்தகாலம்மி றவியில் வீணளாய்க்கழித்ததைக்கருதியவதனா லுக்காலங்களுளோர் காலமாயினுங் காணுத வத்திருவருளை யிப்போதுகண்ட களிப்பா லு மவ்வருளைத் தோத்திரம்பண்ணலோடழு தவ்வழுகையோடுஞ்சிரிப் பார் திருவருண்மேலீட்டைப்பெற்றோர்.எ-று.

"தாலலத்தியென்,, றுவமைகூறினமையா லருளைத்தோத்திரம் பண்ணுதல் வருவிக்கப்பட்டது அருடம்மிடத்துத்தோற்றலானதனை மகவாவுவமித்துக்கூறினர் தால் - தாலாட்டுதல் அலத்தல்-அழுதல்.(அ)

இத்திருவெண்பாவாற் கழிந்தநாட்கிரங்குதல் கூறியவாறுகாண்க.

சுகாதீதமுத்தியைப்பெறு தற்ன்னந் திருவருண்மே லீட்டைப் பெற்றோர்க்குப் பிறப்புண்டாகாதோவெனின் மேற்கூறுகின்றார்.

நடைதளர்ந்துமெய்ம்மறந்து நாணமழிந்து
வுடைதளர்ந்துதீழ்க்குரலிட் டீண்போய் - மடலெட்டுப்பாய்ச்
சுத்தாதிகெட்டுமனத் தாக்கற்றுச்சந்தழிந்த
பித்தர்க்குமாகாப்பிணி.

நடைதளர்ந்துமெய்ம்மறந்து நாணமழிந்து - வுடைதளர்ந்துதீழ்க் குரலிட்டீண்போய் - எ - று - கருவிச்சேட்டைகளடங்குதலினடை தளர்ந்து தருவேவடிவாயிருத்தலி னுடம்புமறந்து தடம்புமறந்தவிற் பி ரபஞ்சிகன் பழிப்பாரென்பது குறித்துவருநாணமழிந்து தன்மேலு

விருப்பின்மையா னுடனளர்ந்து மனமவுனியாயிருத்தலிற் கீழ்க்குறித் பேச்சா யருளமுதம் புகித்தலிற் சிற்றுணுன்பதாய்.

மடலெடுப்பாய்ச் - சத்தாதிகெட்டுமனந்தாக்கற்றுச்சத்தழிந்த பித்தர்க்குமாகாப்பிணி - எ - து - அருளேயெயன்றி மற்றெண்ணறபு நாடாமையின் மடலெடுப்பான்போலா யைத்தவாவு மற்றமையாற் சத்தாதிவிடயங்களுமிறந் திச்சத்தாதிவிடயங்க ளிறந்தமையான் மன மொன்றேறித் தாக்கற்று மன மொன்றேறித்தாக்கற்றமையா லருளென்றுந் தானென்றுமின்றி யிரண்டற்றவிவ்வருடலீக்கொண்டபி த்தர்க்குஞ் சுகாதீதமுத்தியை யடைந்தோராப்போற் பிறவிநோயுண் டாகாது-எ-று. (கூ)

அருண்மேலீட்டையும் பிரபஞ்சப்பற் றெழிவையுமுடையோர் தேகாந்தியத்தறிவோடுஞ்சென்று சுகாதீதமுத்தியை யடைவாகலிற் "பித்தர்க்குமாகாப்பிணி,, யென்றார்.

இத்திருவெண்பாவா லருண்மேலீட்டை யுடையோர்க்கும் பிற ப்பின்றென் றறிவித்தவாறுகாண்க.

குறும்பாட்டும்புன்சிரிப்புங் கூர்த்திமையாநோக்கும்
வெறும்போகஞ்சாய்த்து விழினு - மறந்த
திகைப்பும்விதிர்ப்புந்திமிர்ப்பும்விறைப்பு
மூகைப்புந்தெளித் தறிதலும்.

ஏர்கொளயன்குரு விந்திரன்றென்முனி
கீரனருண் கிரியாமுதல்

இயலறிஞர் பலகலைக டெரிபுலவா தலைவவென
இசைமதுர மொழுகுதமி ழோதவே கந்தன். (ஈம)

ஓர்திருஞ்சித்தர் குளிகையிறைவைத்துப்
போகொளெல்லாம் வல்லசித்தனருள்
ஒருகுமர பரிசதரி சனகவன குளிகைகளில்
உயர்வதிது வெனவுரைசெய் தேத்தவே கந்தன், (ஈக)

பவனிசந்தகண்ணி - முற்றியது.—ஆ ஈக.

கொச்சகம்.

போதிலுறை வேதன்முதற் புங்கவரொல் லாஞ்சூழ
ஆதிபரை யீன்றமுரு கையன் பவனிவரக்
கோதில்புவி மாதரொடி கூடியர மாதர்களும்
வீதினின் மயங்கும் விந்தைதனைச் சொல்வோமே.

மகளிர மோகச்சந்தக்கண்ணி.

தானந்தன - ஆழ.

கட்டியணைத்தென்னைச சேரீரோ சாமி
கிட்டியொருமுதந் தாரீரோ
கரலந்தநி யேதிவருக்கு மிரென்றமு தோபொங்குது
காமஞ்சகி யேயென்றனள் ஓமாது (க)

இஷ்டங்கொண்டென்னைப் பாராயோ சாமி
கட்டுங்கடப்பந்தா தாராயோ
ஈரும்படி சோமன்றழல வாள்கிந்துதல் பாரிங்கிலி
ஏதென்செய லோதென்றனள் ஓர்மாது (உ)

வேறு.

தானதந்தன-ஆறு.

வேளென்றுமக்குப் டெயரிருக்கமத
வேளெனப்போவைத்துகொண்டொருவன்
விசைகொண்டடா மலாவெங்கனை சொரிகின்றன னவனிங்கெனை
விலகும்படி செயுமென்றனள் ஓமாது (ஈ)

காளாதகாதல்கொண் டேன்தேவரீமேலிங்
காளாவிடினும்பொன் மாலைதந்தாற
றளாபெண்பழி யதுவந்துமை யணுகுஞ்செய விலையிங்கிது
சரதந்தையை செயுமென்றனள ஓமாது (சு)

வேறு.

தானதனை-ஆறு.

சொர்க்கமபெறுந்தெய்வப் பெண்பிடிபோல்யானுஞ்
சொர்க்கம்பெறுந்தெய்வப் பெண்பிடிகாண

சூதன்றெழி லாருங்கும ராமங்கள நீப்ந்திகழ்
தோள்தந்தெனை யாளென்றனள் ஓமாது (ஙி)
பக்கத்துறுங்குறப் பெண்போலெனைவைத்தால்
விக்கிக்கொளத்தினை மாவைககொடேன்
பார்கும்பசி யாறும்படி வார்தங்கள நீருந்தெளி
பாலுந்தரு வேனென்றனள் ஓர்மாது (சு)

வே று.

தனதானதனதந்தன-ஆறு.

அக்கம்பக்கமென்னை யெச்சொல்லுஞ்சொல்லட்டும்
வெட்கமெல்லாம்விட்டு விட்டேனுன்
அதிமாமய லேகொண்டனென் அணையாவிடிலோபெண்பழி
யடையாதுவி டாதென்றனள் ஓமாது (எ)
மைக்குறத்திகண் வலைக்குளகப்பட்ட
மெயகருவாகின்னை யெப்படியும்
வளாமாழலை யாலிங்கன விதமோடினி நாணின்புற
மருவாது விடேனென்றனள் ஓர்மாது (அ)

வே று.

தனதத்தனதானதந்த-மூன்று.

அங்கைவேலேந்திய செட்டியாரே யுந்தஞ்
செங்கைநிறையத் தண்டருவேன்
அதனுகஙகிணையாகவென்றன் இதழுக்கமுதூறுமின்ப
அதரகனிதாருமென்பள் ஓமாது (கூ)
சங்கத்துதித்திடும் பாவலரே மணித்
தங்ககுடம்பணந் தந்திடுவேன்
தனிமைப்படவாருமென்றன் உளமெய்சசுகமாரவின்று
சரசக்கவி பாடுமென்பள் ஓமாது (ய)

வே று.

தானதந்தாதந்தன-மூன்று.

ஆகங்குளிர வெனைசசேரும் இல்லை
யாஇலென்கை வளையைத்தாரும்
ஆர்தடுப்பாரிங்கெனை நீதடுத்தேசென்றிடில்
ஆணைவைப்பேனென்றனள் ஓர்மாது (யக)
நாகரீகம்பெறுஞ் செவ்வேளே யுன்றன்
வாகுவிற்சூடிய மாலைதந்தால்
நாண்மலர்ப்பூவைங்கணை வேளினைப்பாரெங்குணும்
நாடவொட்டே னென்றனள் ஓர்மாது யஉ

கொச்சகம்.

இந்தவித மோதவெறி யேறிமட மாதர்குழாஞ்
சிந்தை மயங்கித் திகைத்துருகி நிற்கவிப்பால்
அந்த முறும்வே லாணிமறு கெலாம்பவனி
வந்துமுன்போற் றென்பழனி மாமலையின் மேவினரே

வாழிச் சந்தக்கண்ணி.

தானதன-ஆறு.

வாழியெமக்கருள் செய்முருகன்பதம்
வாழிதெய்வானை குறமாதும்
வாழியருள் வாழிதகர் வாழிகொடி வாழிமயில்
வாழியயில் வாழிபுயம் வாழியே, (க)

வாழிதிருமகள் வாழ்பழனிப்பதி
வாழிமெய்த்தொண்ட ரினங்களெல்லாம்
வாழிமறை வாழிபுகழ் வாழிதமிழ் வாழிமுகில்
வாழிபுவி வாழிமிக வாழியே, (உ)

வாழிசந்தக்கண்ணி-முற்றியது.—ஆ உ.

பின்முடுகுச்சந்தக்கொம்மிக்கண்ணி-முற்றியது,-ஆ கண்ணி, ஏஉ
கலித்துறை-உ வெண்பா-க, கொச்சகம்-நு, ஆ செய்யுள், அய.

கொம்மித்தரு.

இராகம் கன்னியாசி-ரூபகதாளம்.

பல்லவி.

கொம்மியடியுங்காள்-பெண்காள்-கொம்மியடியுங்காள்

அநுபல்லவி.

நம்மையாண்டருள் பழனிச்சண்முகன்
நளினப்பத மலரைப்பரி வொடுநித்தமு மனதிற்கொடு (கொ)

சரணங்கள்.

கும்பமுலைகளிரண்டுங்குலுங்கச்
செம்பொன்மணியுங்குழையு மிலங்க
பம்பரமெனச்சுழன்றுசுழன்று
பரமன்கனல் விழிவந்திடுமன்றுதி சொலியன்பொடு (கொ)

கொண்டைச்செருக்கின் மலர்கள்சரியத்
தண்டைப்பதத்தி னடைவுதெரிய
முண்டகக்கரவளை களொலிக்க
முருகன்புக ழெனும்வண்டமி ழிசைகொண்டபிரியவின்பொடு(கொ)

துட்டமறலியிடுக்கணறலாம்
இஷ்டசித்திகளெல்லாம்பெறலாம்
சிட்டாகள்துதி சுப்பிரமணியன்
திகழும்புய பலமங்கள குணமுஞ்சொலி அணிகொண்டெதிர் (கொ)



உ

திருப்பழனிமலைத்.

தெண்டாயுதக்கடவுள்பேரில்

தோத்திரமாலை.

எழுசீர்க்கழிநெடில் விருத்தம்.

மாமேவுகருணையெனு மதமொழுகுமாதங்க வத்திரர்களிக்கவுல
கைப், பூமேவுமயிலின்மிசை கொடியில்வலம்வருகுழக புலவருகரும
ரவெனவே, பர்மேவுகின்னும மோதுமடியேன்மனப் பருவரலொழி
த்தாளுவாய், தேமேவு சோலைசூழ் தென்பழனிமலையிலுறை தெண்
டாயுதக்கடவுளே. (க)

செங்கண்மாலுந்திவந் • தவனைப்புடைத்தருஞ் சிறையிலிட்டலை
யாழிசூழ, அங்கண்மாஞாலமுழு துய்ம்படைத்திட்டமூரு கையகிற்
போற்றுமடியார், தங்கண்மெல்லடியிறைஞ் சுந்தொண்டனேன்மன
ச் சஞ்சலமகற்றியருள்வாய், திங்கண்மும்மாரிபொழி • தென்பழனிம
லையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (உ)

மூழுமதிமுகச்சசி யிடறுமகலநாண் • மூண்கொடுநிலைப்ப
விண்ணோர், விழுமமழுஞ்சூருமலை யலையுநிலைகுலையவடி வேல்விட்ட
மயில்வீரனே, • தொழுமுனதுதொண்டனேன் பழவினையையும்மனத்
துயரையுமறக்கிலாகுவாய், செழுமணிகொழித்தருவி வருபழனிமலை
யிலுறை தெண்டாயுதக்கடவுளே. (ஊ)

மூத்தநகைமேவுகட வுட்பிடியுமழகெலா மொய்த்தகுறமாணுமகி
முவாய், நித்தமகலாதுவினை யாடுமிருமூன்றுமுடி நிலவுமாணிக்கமலை
யே, சுத்தமுறுகின்னடியாதொண்டுபுரியேழையேன்றுரிசகலவருள்பு
ரிகுவாய், சித்தாகணமாறுது நிறைபழனிமலையிலுறைதெண்டாயுதக்
கடவுளே. (எ)

கந்தாகுகாவோல மோலமின்றெருதமிழ்க் கவிவலனழைக்க
வன்ஞென், சிந்தாகுலங்கெடச் சிலைமுழைதிறந்தருஞ் சிறைவிட்டவ
டியர்வாழ்வே, கொந்தாருகின்றுனே நம்புமடியேன்மனக் குறையொ
டிடரறவினைகுவாய், செந்தாமரைத்தடஞ் சூழ்பழனிமலையிலுறை தெ
ண்டாயுதக்கடவுளே. (ஏ)

அந்தமுறுமொருதையன் முருகாவெனக்கூவ மவ்வுரைதனகி
ரங்கி, வந்தவளிடுக்கம தொழித்துளமகிழ்ச்சியுற மன்னருள்புரிந்த
கோவே, கந்தமுறுகின்பாத வந்தனைசெய்நாயினேன் கம்பலைதொலைத்
தருளுவாய், செந்தமிழ்மணங்கமழ் திருப்பழனிமலையிலுறை தெண்
டாயுதக்கடவுளே. (ஐ)

நீங்கருமிருட்படிவ முற்றளவின்மாயையொடு நின்றகிரவுஞ்ச மலையைத், தூங்கன்முகனைக்கடிதி லண்டாகொண்டாடத் துணித்த வடிவேற்குமரனே, வாங்கரும்பிரைகடம் பணியுனடிதொழுவேனை மம்மரணுகாமலருள்வாய், நீங்கணிமதுக்கழனி சூழபழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (ஏ)

அகியறுகிளந்திங்க ளணிபரனுமம்பிகையு மலைமாதுமைங்கரனும்வான், முகிலுருவணிந்தகெடி யோனுமுளமகிழமயின் முதுகினடமிடுகுருந்தே, மகிமையுறுன்புகழ் வழுத்துமிதமியேன் மனக்கவலைநீகியருள்வாய், சிகிகணின்ருடுபொழில் சூழ்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (அ)

புங்கவாகடம்மைமு னலைத்தெதிரில்வம்புரை புகுன்றெதிர்ந்தமர்செயவருஞ் சிங்கனதும்பிளக் கக்குலிசவேல்விட்ட சேவற்கொடிக்கந்தனே, துங்கமுறுன்கழல் வணங்குமடியேன்மனத் துயரறக் கருணைபுரிவாய், செங்கமலமாதுவளர் தென்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (கூ)

மாழறைதுதிகதமிம யக்கொடியவாவொடு மலாக்கரந்தன்னிலேந்திக, காமர்நிகர்தன்னிணையினேன்கோத்தின்புறுகனகதண்டைக்காலனே, பூமருவுன்சரண முன்னுமடியேன்மனப் புன்கணறவருளபுரிவாய், சேமநிதியெங்குமிகுபழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (ஙி)

சோத்திரமாலை - முற்றியது.-ஆ ம.

கீர்த்தனம்.

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

வேலுமயிலுந்துணை வேலுமயிலுந்துணை
வேலுமயிலுந்துணை — கதிர்வடி

அநுபல்லவி.

தாலந்துதிக்கும்பழ னபுரிவாழ்மலர்த்
தாளன்-வள்ளிமணாளன்.—கதிர்வடி — வேலும

சரணங்கள்.

பாலுங்கனிரசமும் போலுமொழிக்குஞ்சரி
பாகன்-பன்னிருவாகன்.—கதிர்வடி — வேலும (க)

ஆலம்பூகமக தேவருதவுகும
ரையன-எமையருள்மெயயன்.—கதிர்வடி — வேலும (உ)

பாடுஞ்சுருதிசொல் லிமாசலமாதருள்
பாலன்-தானவர்காலன்.—கதிர்வடி — வேலும (ங)

வாசங்கமழும்வன மாலியுளமகிழும்
மருகன்-சரவணமுருகன்.—கதிர்வடி வேலுமு (சு)
ஓதும்பிரணவமதி லாருமெய்ஞ்ஞானசொ
ரூபன்-பரிமளநீபன்.—கதிர்வடி வேலும (ரு)
பூமியதனிலுயர் தேவர்சிறைவிடுத்த
புண்ணியன்-சுப்பிரமண்ணியன்.—கதிர்வடி வேலும (சு)

இராகம்-தன்னியாசி ரூபகதாளம்.

பல்லவி

ஆடுதுபார்-ஒருமயில்-ஆடுதுபார்

அநுபல்லவி

வாடும்பயிர்க்குமழைபோலமராமுன்
வந்தின்பமில்லுழும்பழனிகருமரை
நீடும்பிடரியிற்றூங்கிகொண்டேயிவர்
நித்தியா நித்தியா நிதியர் சத்தியா சத்தியரென்றிங் (காடுது)

சரணங்கள்

அண்டரண்டபகிரண்டத்தடுக்குள்யாவுமேகிலே கலங்க ஸிரி
யகிலமுஞ்சகதிரவாளமுமமேருவீம்அஷ்டகிரிகளுங் சூலுங்க
பண்டைவினைகளுநுகோஞ்பட நினும
பன்னருந்துன்பங்களெல்லாந்துரினுஞ்
சண்டனெதிர்ப்பினுந் தொண்டாகுசசணமுகர்
சரணஞ்சரணஞ்சரணஞ்சரணஞ்சரணஞ்சரணமேனன். (ரூடுது)

பல்லமெனுநிருப் பாறகடற்பாற்றுப்பதைபதைத்துள்ளம்மிங்க இதப்
பாருலகைச்சுமைகுமோசேடன் பலமெல்லாங்குன்றியொடுங்க
இவ்வளவென்றுலக கிட்டொருவாவிளள
எலாவகிலாண்டகோடிகளிலுளள
எவ்வுயிர்களுஞ் இறை வேலவாதாமிச்சொல்
இரண்டன்றொன்றிரண்டன்றொன்றிரண்டனறொன்றிரண்டன்றென் (ரூடுது)
வெண்மைபோடியனிசாதார்ம்பணிகள் மின்சடைக்காட்டுச்சுளாளிக்க மிக
வீறியவஷ்டமாநாகங்களுந்தியிலி விழும்புழுவைப்போல் நெளிக்க
திண்மையதாம்பெரும் பிறவிப்பந்தத்தைத்
தீர்க்குஞ்சுப்பிரமண்ணியா பாதாரவிந்தத்தினை
உண்மையுடன்மனத் துன்னுவாக்கின்பவி
ண்டுண்டுண்ட டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டென் (ரூடுது)

காவடிச்சந்த விருத்தம்.

தத்ததத்தன-தானதத்தன-தானதத்தானன-இவ்வண்ணம் மூன்று.

ஈற்றில்-தனதானன.

அப்பமிட்டெளி தோசைநெற்பொரி பாகிற்சேரவ
ழுப்பழச்சுவை யாதிவாகமெ லாமிக்காய்நுகர்
அத்தாசித்தி விநாயகர்க்கிளை யோனெட்டாமனை துதிமூலன்.

அச்சமுற்றெருரு கோகற்றமி ழோதக்கூயில்
விட்டடிறஞ்சி தூளெழப்பணி மாழ்குற்றுர்சிறை
யைத்தவிரத்த விசாகனற்புத நீபத்தாரணி மணிமார்பன்.

செப்பிணக்கிய பூண்முலைக்குற மாணுக்காயட
விப்புனத்ததி கூனெழக்கிழ ரூபத்தோடடா
சித்திரப்பசு மாமயிற்சுவல் மீதுற்றுடிய அதிரூபன்

சிற்சபைச்சிவ காமிதற்பரை மோனச்சாமளை
மூத்தொழிற்கதி காரிபொற்றிரி கோணச்சார்புறு
கிற்பரத்தியி மாசலக்குயி லாதித்தாயருள் சிறுபாலன்.

இப்பிறப்பெனு மாழ்திரைக்கடல் மூழ்கிக்காதலெ
னச்சொலச்சுழ லாலலைப்புறு மூடப்பாவியை
எய்ப்பறக்கமழ் சேவடிக்கனை சேரப்பேரருள் புரிவேலன்.

எற்றிருட்கட லோலிடக்கிரி வீழக்காவு
ணக்குலத்தர சாய்முளைத்தவ கோரச்சூர்கெட
இச்சைவைத்திமை யோர்விணிற்குடி யேற்றத்தானயில் எறிவீரன்.

அப்பெருக்கர வாகடுக்கைகி லாதிகூவிளம்
வைத்தமைத்திடு வார்சடைச்சிவ லோகர்க்கோர்மொழி
அத்தமுற்றுமி தேயெனக்கனி வாய்விட்டோதிய குருநாதன்.

அஷ்டசித்திக ளாடுகித்தர்ப ராவிச்சூழ்பழ
னிப்பதிக்கிறை யேழைகட் கொரு தாயைப்போலருள்
அற்புதக்கும ரேசனுகபிஷேகக்காவடி இதுவாமே. (க)

காவடிச்சந்தவிருத்தம் முற்றியது.

காவடிக்கீர்த்தனம்-இராகம்-தோடி-சாப்புதாளம்.

பல்லவி.

அற்புதக்கும ரேசனுகபி ஷேகக்காவடி இதன்
அருமையாவ ரறிவாரியும் அய்யன்சேவடி

அநுபல்லவி.

தற்பரப்பொருளாகிப்பழனித் தலத்துள்கிலத்த சண்முகாவெனச்
சந்ததம்புக ழுன்பரிதயத்
தண்டாமரைமீதுமன்னும் தெண்டாயுதபாணியென்னும்—அற்புதக்

சரணங்கள்.

விதிக்குமரிக்குஞ் சுரர்க்குமிடுக்கண் விலக்கியலோலள் கறை
மிடற்றுப்பரற்குத் தனித்தப்பொருளை விரித்திடுமூலன்
மதிப்பறச்சமர்க் கெதிர்த்தஅசுரை வாட்டியவேலன் பரி
முலைப்சுங்கொடி களிக்கநடித்து வருஞ்சிறுபாலன்

கதிநீலதருபண்டைச்சீலன்-கசிதகனகதண்டைக்காலன்
துதிசெய்யடியருக் கனுகூலன்
துறவாலுயர்முனிவோர்புகழ்-குமரா துடனினிதாய்மகிழ் அற்புதக்(க)

நிலங்கோளுயிருக்குயிராயெங்கு நிறைந்திடுமேகன் ஒரு
நிமைப்பொழுதுமென் னெஞ்சைவிட்டகலா நித்தியவைபோகன்
கலங்கியவொரு நாவலன்றன்னைக் காத்தருள்தியாகன் இந்தக்
கலிக்குப்புதுமை யாகவிளங்குங் காருண்ணியதேகன்
நலம்பெறுந்தெய்வயானைப்பாகன் நறுங்கடம்பணிபன்னிருவாகன்
துலங்குமங்களாகரவிசாகன்
தொடர்நம்பவமறவேயரும்-நடனம்புரிமயின்மேல்வரும் அற்புதக்(உ)

பைந்தமிழ்ச்சுவை தனைத்தென்முனிக்குப் பகர்கனிவாயன் இந்தப்
பாவிமனதைத் திருத்தித்துதிக்கப் பணித்தவுபாயன்
மந்திரப்பொரு ளாகிய சுப்பிர மண்ணியனெனுந்தூயன் மோகூ
வழிக்கும்புவிக்குள் நடக்குந்தனித்த வழிக்குஞ்சகாயன்
இந்திரன்றுயாதீர்த்தநேயன் எங்குநின்றெளிர்கார்த்திகேயன்
கந்தமுலவுங்கங்கைதன்சேயன்
கதிசேர்வழிதனையேயறை சதுர்மாமறைமுடிமேலுறை அற்புதக் (ரு)

கீர்த்தனம் முற்றியது.

நேரிசைவெணபா.

திருவெய்துங் கல்வியெய்துஞ் சென்மநோய் தீர்க்குங்
குருவெய்து மோட்சமுங்கை கூடும்-உருவாம்
புவிமாலை விட்டோர் புகழ்பழனிச் சேய்மேற்
கவிமாலை சூட்டினர்க்குக் காண். (க)

கனிரசமே தேனேநற் கற்கண்டே பாகே
தனிமறையின் சாரமே தாயே - எனவுருகி
உன்னுமவ ருள்ளத்துறைபழனி மாமணியே
என்னு ளகலா திரு. (உ)

அன்னே யுமையளித்த வாரமிர்தைத் தேவகுல
மன்னைப் பழனிமலை வாழ்வாசை - என்னைமிகப்
போர்த்திருந்த வஞ்ஞானம் போக்கியவென் னேயனேயே
பார்த்திருந்தா லுப்போம் பசி. (ரு)

ஊர்பகைத்துங் கோள்பகைத்து மூரளி ராசர்ங்கத்
தார்பகைத்து முற்றுர்க டாம்பகைத்தும்- யார்பகைத்தும்
என்செயலா நம்மைநெஞ்சே யீறில் பழனியான்
மின்செயுந்தா ணம்பணிவ மேல். (சு)

வேதன் முதலாய விண்ணவர்கள் சூடுமலர்ப்
பாதன் பழனிப் பதியுறை - நாதன்
சரண நினையார் தமைக்குலல கில்லா
மரணபவ நோய்க்கினையா வார். (சி)

ஆராதித் துன்ற னடிவணங்காப் புல்லையான்
சேரா திருக்கவருள் செய்குவாய் - சீரார்
இருக்குந் துதிக்கு மெழிற்பழனி வெற்பில்
இருக்குங் குகாகின்னை யே. (சு)

கய்யி லயிலிருக்குங் கண்களீ ராறிருக்கும்
மெயயி லளிமூரலும் வெட்சிதொங்கும் - பொய்யிலர்க்கு
மெய்யன் பழனிமலை வேலனெமை யாண்ட
அய்யன் றனக்கடையா ளம். (எ)

கோவையென் ஞருயிரைக் கோல மறைதுதிக்குந்
தேவை யுயாபழனிச் செல்வத்தை - ஏவை
விழியாகுகொள் வள்ளிமகிழ் வேலரசைக் கண்டோர்
அழியாப் பதம்பெறுவ ரால். (அ)

பொறிகலங்கி நாவும் புலர்ந்தெயிறுங் கிட்டி
அறிவழிந்தை நெஞ்சளவு மாகிச் - செறிமூச்சுந்
தீவரமா காமுன்னங் தென்பழனி வெற்பிலுறை
மாவரனை நெஞ்சே வழுத்து. (கூ)

ஆரணனு மாலு மறியவொண் ணுதபரி
பூரணனுக் குண்மைப் பொருள்விரித்த - வாரணத்தின்
மாதுவசத் தத்த மலைப்பழனித் தேவகுற
மாதுவசத் தத்தவருள் வை. (கo)

வானுந் தொழும்பழனி வள்ளலடிக் கீழிமைப்போ
தேனுந் தனித்தசைவற் றேயிருக்கில் - ஆனந்த
வாரியா டித்திளைப்பை வாழிநெஞ்சே நாதாந்தப்
பாரிலா டிச்சுகிப்பைப் பார் (கக)

எங்குந் ததும்பி யிருக்குநின் பேரருட்குள்
இங்கிந்த நாய்க்கிடஞ்சற் றின்றுகொலோ-பொங்கும்
பழனிமலை யின்றெடுத்த பாலா புக்ழ்சேர்
பழனிமலை வாழ்குருப ரா. (கஉ)

குடும்பமெனுஞ் சேற்றுக் குழியின் முழுத்தி
இடும்பையெனும் பாரமியற்றி - விடுங்கொடிய
தற்போத மென்றகலுஞ் சாந்தருறை தென்பழனி
வெற்பாரு மன்பர்வாழ் வே. (கங)

ஒழியும் பவமயன்கை யோயுமுயர் வீட்டின்
வழியுந் திறக்குமிது வாய்மை - பழியகன்றோர்க்
கெண்ணியவெல் லாமளிக்கு மெங்கள்பழ னிக்குகனைக்
கண்ணிமைப்போ துண்ணினைந்தக் கால். (கச)

ஆதியைமெய்ப் போத மடைந்தோர்க்கு வாய்த்தவனு
பூதியை வையா புரியிலுறை - சோதியைக்
கண்டேன் விண்டேனிடைக் காண்பரிய ஞானவமு
துண்டேனண் டேன்கருப்ப வூர். (கரு)

ஏழைக் கிரங்குதெய்வ மென்றுன்பால் வந்தடைந்தேன்
ஏழைக் கிரங்க வினுதருணம் - ஊழைவென்ற
சீலமுனி வேடர்போற்றுந் தென்பழனி வெற்பிலுறை
நீல மயின்முருகா நீ. (கசூ)

நேரிசைவெண்பா-முற்றியது-ஆக-௰கூ.

வ

வேலுமயிலுந்துணை.

க ர் ப் பு:

கட்டளைக்கலித்துறை.

திங்களணிந்த ழிச்சடையாளர் திருமகனே
எங்களரசைப் பழனிப்பெம்மானே யிரும்புலவோர்
தங்களருங்குல தெய்வத்தைச சாற்றுந்தமிழ்விளங
மங்களவேழ முகவன்பொற்பாதத்தை வாழ்த்துதுமே

ம ா லை.

திருவாரிணமலாத் தாளையெப்போதுமென் சிந்தைவைத்து
மருவாருளன்பெனு மாமலரிட்டு வணங்குமந்தப்
பெருவாழ்வுந்தொண்ட ருறவுநினைப்புகழ் பேற்றையுமே
தருவாய்பழனி மலைமீதுறையுந் தண்டாயுதனே. (க)

முருகாகுகாகும ராகுழகாகன் முராரிதிரு
மருகாவெனகின் றிருநாமந்தன்னை மனத்திலுன்னி
உருகாதுருகிப் பரவவரமின் றுவந்தருளாய்
முருகாபொழிற் பழநிபுரிவாழ முழுமுதலே. (உ)

ஆட்டானைப்பாசத்தி லாட்டானையன்பூசை மீறுபடை
வீட்டானைஞன்முத்தி வீட்டானையின்பம் விளைபழனி
நாட்டாணைச்சூரனை நாட்டானைநம்மை நமனிடத்திற்
கூட்டானைநம்மனக் கூட்டானைநுங்காங் கூப்பிடுமே. (ங)

சூரனைவாட்டிமஞ் சூரனைக்காத்த துரையைவெட்சித்
தாரனையார்க்கு முதாரனைமோகந் தழைத்தவலங்
காரனைநீடதி காரனைவாசங் கமழ்பழனி
ஊரனைநீல மயூரனைப்போற்றுவர் யோகிகளே (சு)

புண்ணியன்வள்ளி தெய்வானைக்கினியவன் பூங்கடப்பங்
கண்ணியன்றேவர் சிறைமீட்ககங்கணங் கட்டியமா
திண்ணியன்றென்பழ னிக்குகன்செஞ்சரண் சிந்திப்பவர்க்
கெண்ணியவெண்ண முடனுடனேநிறை வேறிடுமே. (சூ)

நச்சைப்பொருமசு ராந்தகனைக்கந்த நாயகனைக்
கொசசைக்குறப்பெண் பதசேகரனைக் குருபரனைப்
பசசைத்தனிமயில் வாகனனைப்பழ னிப்பரனைச்
செசசைப்புயனைப் பணியார்மறலிக்கென் செய்குவரோ. (சூ)

அருமைக்கருணை நிதியைக்கதியையென் ஞருயிரைப்
பெருமைக்குரிய மலைமகள்செல்வத்தைப் பேணுமன்பர்
இருமைக்குநற்றுணை யாயபழனி யிலஞ்சியத்தை
ஒருமைப்படத்துதிப் பாகளன்றிரு வன் பொழிந்தவரோ. (எ)

அறவாழியையென்ற வுள்ளத்துறவை யருங்கனிவாய்
நிறவாதறிஞர் கீவித்திறஞ்செப்பிய தேயையருந்
துறவாலுயாந்தவ சேத்தும்பழனித் துரையையென்று
மறவாதவாகட்கு முண்டோமுற்சஞ்சித வாசனையே. (அ)

எடுத்தவன்சத்திப் படையாலமர ரிடுக்கணெல்லாந்
தடுத்தவன்சூரையிற் பஞ்சனச்சூரர் தமைப்பறக்க
விடுத்தவனன்பா னினைத்தவையாவும் விளைந்துவந்தே
கொடுத்தவன்காண்பழ னிப்பெருமானென் குலதெய்வமே. (கூ)

முன்னவன்யாவாக்கு முக்கனியொத்த மொழிக்குறமான்
றன்னவன்செந்தா மரைத்தடஞ்சூழ்ந் தமிழ்ப்பழனி
மன்னவன்மோனப் பொருளைப்பராசரன் மைந்தர்கட்குச்
சொன்னவன்காணவ னென்றுயரத்தைத் தொலைப்பவனே. (கூ)

வாமானையங்கியைச் செங்கையிலேற்றவர் வாழ்வைவங்கள்
கோமானையும்ப ரிடர்தவிர்த்தானைக் குறவரிடத்
தாமானைவேட்ட குருநாதனையெழி லார்பழனிச்
சீமானைப்போற்றிப் பணிவார்மெய்ஞ்ஞானச் செழுஞ்செல்வரோ. ()

வானந்தனையளித் தானைப்பொதிய மலைமுனிக்கு
மோனந்தனையுரைத் தானைச்சிவகிரி முன்னவனைப்
பானந்தனைய மிடற்றெயினக்கொடிப் பாகனைச்ச
நானந்தனைதொழும் புண்ணியரேமுத்தி சார்பவரே. (கூ)

மெய்யனடியவர் துன்பங்களையவை வேலெடுத்த
கையன்விசாகன் குகன்மயில்வாகனன் கங்கைமைந்தன்
செய்யன்குறிஞ்சிக் கிழவன்குமரன் சிவகிரிமுத்
தையன்சஉக்கர மன்றேகவசமென் ஞருயிர்க்கே. (கஙு)

தெரிந்திக்கயமுகத் தண்ணற்கிளவலைத் தூமறைசொல்
அந்திப்பிறைமுடி நாதன்மதலையை யன்பர்கடம்
புந்திக்குறவனைத் தென்பழனபுரிப் புண்ணியனைச்
சிந்திப்பவாகளுக் கெல்லாப்பொருள்களுஞ் சித்திக்குமே. (கசு)

கட்டிடுங்கூறைக்கு முண்டிடுஞ்சோற்றுக்குங் காசினியில்
முட்டியொருவர்த முன்றினில்லேம்வின் முகிலினைய
தட்டித்தினைகாய்வில் வேடருறையுந் தனிப்பழனிச்
செட்டிநமக்கிங் களிப்பான்குறைவற்ற செல்வத்தையே. (கஙு)

வாதவலிசுன்மங் குட்டமகோதர மண்டைவலி
சூதகவாயுபக் கச்சூலபீநசஞ் சோபைமதஞ்
சீதசுரமுதற் பன்னெய்தெறும்படி னிசிலம்பின்
மீதமர்வேலன் சடக்கரக்தன்னை விளம்பிடினே. (கசு)

பன்றியைமும்மத யானையைச்சிங்கத்தைப் பாய்புலியைக்
கொன்றவன்சேய் பழனிக்குகனம்முட் குடிபுகுந்தான்
பன்றிகரடி புலியானையேமுதற் பன்மிருகங்
துன்றிநம்பாலில் வராதுவந்தாலுந் தொழுதிடுமே. (கள)

ஆனியந்தோறுஞ் சிவகிரிவேலன்ற ஞறெழுத்தைத்
தானியம்பன்பாக்குச சம்பத்துமுத்தித் தலமுஞ்சாவ
மானியமாமன்றிப் பேய்பூதஞ்சத்துரு மாறுபில்லி
சூனியமென்பவை யெல்லாம்வெறுஞ்சுத்த சூனியமே. (கஅ)

முந்தவினையும் பிணிக்காடளிக்கு முலையெனச்சொன்
மந்திவினையும் வாதாதிவினையும் வருகிரகப்
பந்தவினையும் பூதாதிவினையுமிப் பாரினினி
எந்தவினையுந் தண்டாயுதன்டோர்சால வேகிடுமே. (கஙு)

வாடுஞ்சிலவினை நாமிருந்தாலிடர் வந்திடுமென்
றேடுஞ்சிலவினை யெவ்விடஞ்செல்வ மென்றேடவழி
தேடுஞ்சிலவினை நாளும்வரோமெனச் செப்பியங்கை
பேடுஞ்சிலவினை வையாபுரியன்வெண்பூதிகண்டே. (உ0)

ஆறிடுஞ்செஞ்சடி லர்க்குப்பிரணவத்தத்தமுனங்
கூறிடுஞ்செங்கனி வாயனசுரனைக் கூறிடக்கூ
றேறிடுஞ்சத்திப் படையான்பழனிக கிறைதருமவெண்
ணீறிடும்போதுவன் ஞயகுசொல்லாம்வெந்து நீறிடுமே. (உக)

கடிபடுமாங்கனி பாகற்கனிகத லிக்கனிகள்
வெடிபடுந்தோறும் பெருகியதேன்பெரும் வெள்ளமதாய்
முடிபடுஞாற்றை வளர்க்கும்பழனிநம் முத்தையன்வெண்
பொடிபடும்போது வினைக்கூட்டமியாவும் பொடிபடுமே. (உஉ)

வினைத்தமருந்தன்பர் க்ஙின்பைக்கிரவுஞ்ச வெற்புருவத்
துனைத்தமருந்திட ரின்றென்றமராைத் தொன்னகர்வாய்
வனைத்தமருந்தெழி லாரும்பழனி மலைமூகட்டில்
முனைத்தமருந்தகுதென்வினைகீக்கு முதன்மருந்தே. (உங)

அற்றுரைத்தாங்கும் பழனியப்பாவிவ் வடிமைதனக்
குற்றுருமற்றுள்ள பேருமுனையன்றி யுண்டுகொலோ
பொற்றுமரைப்பதந் தந்தாளவேண்டும் புனத்திலுறை
முற்றுமுகிழ்முலை வள்ளிக்குவாய்த்திடு முத்தையனே. (உச)

இறுக்குங்கயிறு கொடுமேதிமேல்வந் திடுஞ்சமனை
மறுக்குமுற்சஞ்சிதத் தாலுசல்போல வருமபவத்தை
அறுக்குமெய்ஞ்ஞான சுகத்தையளிக்குநல் லன்பாபிழை
பொறுகும்பழனி மலைத்தண்டபாணித் னிபூங்கழலே. (உரு)

கோளைப்புரிபு முசுரர்குலாந்தகன் குன்றெறிந்தோன்
வேளைப்பொடிததவாக குண்மைலியப்போதிதத மெய்க்குரவன்
பாளைக்குழல்வள்ளி மோகன்பழனிப் பதிமுருகன்
தாளைத்தினமுந் தொழுவார்தம்க்கொரு தாழ்வில்லையே. (உசு)

பார்வந்துறினு மிமையாவிழிபெற்ற பண்ணவர்தம்
ஊர்வந்துறினு மகிழேன்மகிழ்வதுனதருட்கே
ஏர்வந்துறுங்குற மாதர்தங்கூந்த லினமெனத்தண்
கார்வந்துறும்பொழில் சூழ்பழனிபுரிக் காவலனே. (உஎ)

அனத்துறுவானு மரியுமறியா தவன்கடம்ப
வனத்துறைவான்வைத்த சங்கத்தொருநா வலனவில்பா
வினத்துயாபாவின வித்துயர்தீர்த்த விறைவவென்றன்
மனத்துயாதீர்த்தருள் செய்வாய்பழனி மலைக்குகனே. (உஅ)

கோழையுருதிங் திரவாழ்கவென்றுமுன் கூறுதெய்வம்
பேழைவயிற்றைநு கான்றுனையாய பெரியதெய்வம்
மாழைவிழிக்குற மான்மகிழ்தெய்வம் வணங்குகின்ற
ஏழைகடெய்வ மதுபழனித்தெய்வ மென்றெய்வமே. (உகு)

சீராருநின்றிருப் பேரருள்ன்றிச் சிறியனுக்கிங்
கோராதரவு மிலையென்மனத்துன் பொழித்தருளாய்
வாராரிளமுலை வள்ளிக்கொடிபடா வான்றருவே
கூராரயிலவனே பழனிபுரிக கொற்றவனே. (கூ0)

எந்தாயுனையன்றி வேறுபுகலிட மில்லையென்றன்
சிந்தாகுலங்கெடக் கண்பார்த்தருள்சிவ காமியருண்
மைந்தாவமரர்க ணந்தாதுறவடி வேலெடுத்த
கந்தாபழனிப் பொருப்பிலுறையுமெங் கண்மணியே. (௬க)

ஏவ்வினைமக்கட் குறத்திமணுளனே யெங்கிருந்து
பாவினைசெய்யினு மங்குகிற்பானைப் பசுங்கடப்பம்
பூவினைப்பன்னிரு வாகனையும்பர் புகழ்பழனித்
தேவனைநாளும் பணிவார்தமக்கொரு தீங்கில்லையே. (௬உ)

அய்யநற்பூசா விதிப்படிநின்னை யருச்சனையான்
செய்யமெய்யன்பு சிறிதுமின்றுன்வசஞ் சிந்தையைவைத்
துய்யவென்றீற்கொடும் பாழுமனமொட் டுவதிலையிவ்
வெய்யபிறப்பென் றகல்வேன்சிவகிரி வேதியனே. (௬ங)

ஓரங்கிமிகவுந் தவிக்குந்தமியே னிடரகல
இரங்கியஞ்சேலெனத் தேற்றியுயரின்ப மீதனிற்கே
பரங்கிரிமாதுமை பாலாபழனிப் பருப்பதத்தும்
பரங்கிரிசெந்திற் பதியுளுநின்ற பரஞ்சுடரே. (௬ச)

காற்றுமத்தளை போனெஞ்சுடைந்தே கலங்குமெம்மைத்
தேறறுவரியாவ ருனையன்றியைய திருக்கண்வைத்தாள்
கூற்றுருளப்பதத் தாற்சுமைத்தார்தங் குமரவ்யா
மாற்றுறுபொன்னெயில் சூழும்பழனி மலைக்கொண்டலே. (௬ட

எளியேனுளமறிந் தும்மினஞ்சோதித் திடலழகோ
அளியேறிறைந்தொளி ரீராறுகாட்டத் தருமருந்தே
துளியேதுமபுமென் கண்ணீரைமாற்றிச் சுகமளித்தாள்
ஒளியேபழனி மலைமேன்முளைத்த வொருமுதலே. (௬சு)

அகலநின்றேகை விரித்திட்டிலைய வடியனுக்குப்
புகலிடம்வேறில்லை நின்னையல்லாது புரந்தருள்வாய்
இகலவுணக்குல வேர்முற்றுங்கல்லி யிமையவர்வாழ்
அகலிடங்காததெவென் வாழ்வேபழனி யயிலவனே. (௬எ)

எண்ணுதெல்லாமிக வெண்ணியெண்ணித்தளாந் தேங்கிநெஞ்சம்
புண்ணுகவாடிய நாயடியேனைப் புரப்பவரார்
தண்ணுரும்பேரரு ளாளாசதூமறை சாற்றரிய
அண்ணுபழனியப்பா வடியேனுன் னடைக்கலமே. (௬அ)

வலையுளகப்பட்ட மான்போலென்சிந்தை வருந்திமிக
உலைவுகொண்டல்லும் பகலுந்தளர்கின்ற துன்னையன்றி
நிலைபெறவைப்பவ ரில்லையதீத நிலையளித்தாள்
மலைமகளீன்ற குழந்தாய்பழனி மலையமிர்தே. (௬ஃ)

கீக்கமில்லாக்கொத் தடிமைகொண்டாயெம்மை கீடருளாற்
காக்கநிற்கேகட னன்றியிங்கார்க்குக் கடனேயனே
கோக்களெய்க்காதொரு குன்றெடுத்தான்றன் குலமருகா
மாக்கவிவாணர்க் கருளும்பழனி மலைக்கந்தனே. (சஅ)

பெரும்பிழையேசெய்த பாவியென்றென்னைப் பிரித்துவிட்டாற்
றிரும்பியெனைமுகம் பாராப்பவரில்லைத் திருக்கண்வைத்தாள்
கரும்பினுமின்மொழிக் குஞ்சரிக்கேற்றநற் கட்டழகா
சுரும்பிவர்சந்தனக் காவாபழனித் துரைச்சிங்கமே. (சக)

இங்கணங்கியாது கொலன்பரிடர்களைந் தின்பருளக்
கங்கணங்கட்டிய வையாபுரிக்கதி காரணும்பர்
தங்கணங்காத்த விசாகனடுவன் றனையுதைத்தோன்
அங்கணங்குப்பொறி யாய்வந்ததோன்ற லடியவாக்கே. (சஉ)

கருங்கடலிற்றிசை மாறிச்சுழலுங் கலமெனவே
பருங்கவலைகட லாழ்ந்தேசுழலுமிப் பாவிதனை
அருங்கமலப்பதத் தோணிதந்தஞ்சலென் றுதரிப்பாய்
நெருங்கலர்வான்பொழில் சூழ்பழஞ்புரி நின்மலனே. (சங)

உன்றனடிமையைக் காக்கப்பொறுப்புனக் கென்றுணாந்தும்
என்றனவல மதியாற்பிறழ்முறை யிட்டனன்மா
குன்றனதோளவிக குற்றம்பொறுத்தருள் கோகனகந்
துன்றனவாவி புடைசூழ்பழனிச் சுகமுகிலே. (சச)

காமவிகாரனை மூடனையுன்றன் கழல்பணிவார்
நாமநினையாக் கொடியனையாண்டிடு நாளுமுண்டோ
சேமநிதிக்குவை யேயுயர்தெய்வ சிகாமணியே
பூமலரோடை நெருங்கெழில்வையா புரிக்கரசே. (சஙி)

சிறந்திடுங்கற்பின டன்பதியைமறந் தேயுய்யினும்
பிறந்திறவாநெறி பேச்சற்றிடமெனப் போதைமயல்
துறந்திடவந்தருள் செய்தசிவகிரித் தூயவுனை
மறந்திமைப்போது முய்யாதென்றுள்ள மிவ்வையகத்தே. (சசு)

நீயேபராமுக மாயிருந்தாலிந்த நீணிலத்தில்
நாயேனையாவர் புரப்பர்கண்டாய்விண் ணகாளித்த
தாயேகருணைச் சமுத்திரமேசிவ சங்கரிதன்
சேயேபழனிக் கிறையேகுருபர தேசிகனே. (சஎ)

அன்றேயுடல்பொரு ளாவியிம்மூன்று மளித்துன்வயம்
நின்றேனையாவர் புரப்பரென்னைய நிகழ்த்துகபொற்
குன்றேயனைய முலைவள்ளிபங்கவிண் கோச்சுரருண்
டென்றேசொலவயி லேந்தும்பழனிக் கிறையவனே. (சஅ)

மெய்யாயநல்லடி யாருடன்கூடிநின் மென்பதத்தைக்
கையாரநன்மல ரிட்டிறைஞ்சாது கருத்தழிந்து
மையாவிழிச்சிய ராற்கெட்ட பாவிய வாழ்வித்தருள
ஐயாபழனி மலைக்கரசேயுன் னடைக்கலமே. (சக)

விண்கலக்கந்தவிராக் கக்கதிர்வேல்தொட்ட வீரவெற்றன்
கண்கலக்கந்தவிராத தாள்வதுன்பாரங் கழறலென்னே
மண்கலக்குங்கட லுண்டாரகத்து மணிவிளக்கே
பண்கலக்குந்தமி ழாளாபழனியெம பண்ணவனே. (ஙo)

நெய்வைத்தவேற்படைக கோவையெல்வாழ்வை நிராமயத்தைச
சைவஞ்சொருமுத லேபபாமானந்த சாகரத்தை
மைவைந்தசோலை மலைச்செங்கரும்பை மலைப்பழனிக
தெய்வதத்தைவாழ்த்துவ தேசிவபோகத்தி கிகழுவரே. (ஙக)

எழுந்திமைப்போதிலெங்குமபோயத்திரும்புமென்னெஞ்சமுன்பால்
அழுந்திக்கிடந்திடு நாளுமுண்டோவரி மாபியுறை
செழுந்திருவாவினன் பூமாதசலியுஞ் சித்தியுறத்
தொழுந்திருப்பாதாம் புயனேடபழனிச சுகமுகிலே. (ஙஉ)

தேவாதிதேவன் நிருப்பழனபுரிச செல்வனெற்றும்
மாவாயசூரைப் பிளந்தவைவேலன் மலாப்பதத்தைப்
பூவாலருசித்தி றைஞ்சியுளளனபொடு போற்றிலனல்
காவாதீரானினி யென்கொனமக்குக கவலெனெஞ்சே. (ஙங)

திருந்தியவேதச் சிரத்துறுதாளென்றன் சிந்தையுள்ளும்
பொருந்திசசுகாநந்த நித்திகொள்வதெப் போதையனே
வருந்தியசஙகப் புலவன்சிறைவிட்ட வான்பொருளே
அருந்திருமாதுறை வையாபுரியி லமாந்தவனே. (ஙச)

பாருகழகு நெறிவேந்தராளுகை பன்னுமறை
யோருகழகு மகத்தழலோம்ப லுயாபழனி
ஊருகழகு தண்டாயுதபாணி யுறைதலடி
யாருகழகு திருப்புகழபேசுத லாமென்பரே. (ஙஞ)

யாவன்முன்னெற்றியிற கண்படைததாக்கரு ளிந்துவந்தான்
யாவன்புலவர் சிறையொழித்தானையி லேதநின்றான்
யாவன்வனாயறற சீவனைமுத்தியி லேற்றினின்றான்
யாவன்சிவ்கிரி யுள்ளானவனெம் மிறையவனே. (ஙட)

மனமுமிவாவுங் குரோதமுங்காம மயக்கமுமவன்
சினமுமொழிந்தந்த வாசனையுமிவிடற் றேடரிய்
தனமுமிஃதெனச சாற்றுஞ்சிவகிரிச சண்முகன்றன்
வனமுமறைதுயா சறகுருவாய்வந்து வாழவிகுமே. (ஙன)

கானிடமாடி மகனேச்சிவகிரிக் காங்கெயனேத்
தானிடமாகவுஞ் சாரார்சடக்கரந் தன்னையுன்னூர்
வானிடர்நீக்கிய வேலைத்தொழாரிந்த வம்பரெல்லாம்
மானிடராகவந் தேன்பிறந்தாருயர் மாநிலத்தே. (நிஅ)

பொல்லாநமனுக்குந் தீர்க்குமியானே புலிகரடி
அல்லார்கொடுவிடங் கட்குஞ்சற்றேனுமஞ் சாதெனுளம்
எல்லாநலனேயு நல்கும்பழனியெம் மான்புகழைச்
சொல்லாதவகாகண் டான்மிகவஞ்சித் துடித்திடுமே. (நிக)

பங்கயவேதியன் பேச்சும்வெளுத்திடும் பன்னகப்பாய்
தங்கரிவாழ்வு முறக்கத்தில்வீழுந் தருநிழலோ
டங்கயிராவதன் செல்வமுழுவது மந்தமே
எங்கள்சிவகிரி நாதனயிலொன் றெடாவிடினே. (கூ0)

கொடியமனத்தர் புன்னெய்ந்தசையுணர் கொலைப்புலையர்
படியினரகுஞ் சகிகாகாகொடும்பா தகரெனினும்
வெடியலர்ச்சோலைச் சிவகிரிநாதன் பினைமலர்ச்சே
வடியிறைஞ்சித்துதிப் பாரேலவரொடுக் காரியரே. (கூக)

தந்தையெமப்பூரட் டன்றுயுகீலி தமயனுமோர்
மூந்தமதங்கொண்ட வன்சொந்தமாமஞ் முழுத்திருடன்
வந்தமனேவி குறத்திபென் றுலிவ்வை யாபுரியான்
எந்தவிதஞ்செட்டிற முன்முகலாளியென் றிங்குற்றதே. (கூஉ)

வையுண்டவேற்பழ னிப்பரன்றுளின் மலர்சொரியக்
கையுண்டிறைஞ்சிடச சென்னியுண்டுன்னக் கருத்துண்டுயர்
மெயயுண்டங்கப்பிர தக்கணஞ்செய்ய வினையுமுண்டோ
மையுண்டநெஞ்சினா போலென்கவலை மகிழ்நெஞ்சமே. (கூங)

வடித்தவழகு மிளமையுமாண்மையு மாறிப்பன்னெய்
தடித்தநகாதிரை மூப்புந்தொடர்வதைத் தானுணாந்துந்
துடித்தநெஞ்சோடும்வை யாபுரிநாதன் றிருமும்புசெய்யீர்
படித்ததனுலடை யும்பயனென்றொல் பகாமின்களே. (கூச)

கலைக்கலங்கார மொருநாற்பொருளைக் கழறுதல்பால்
அலைக்கலங்கார மமிதந்தருவ தரும்பழனி
மலைக்கலங்காரந்தண் டாயுதபாணிவதிதலென்றன்
தலைக்கலங்கார மவன்றிருத்தொண்டாபொற் றுட்டுகளே. (கூஞ)

குன்றனபன்னிரு தோளாபழனிக் குகாவுனன்பன்
என்றனேவோர்கருமன் றுயேனலனிழந் தேயிருந்தால்
என்றனேநோக்கிச் சிரிப்பாரொன்றுள்ளத்தி லெண்ணுகிலேன்
உன்றனேநோகஇ நகைப்பரொன்றேமன துட்குவனே. (கூசூ)

படுக்கையிலோநிற் கையிலோவருந்தலி லோபசும்பட்
டடுக்கையிலோமற்றெவ் வேளையிலோயம னேலைவந்தால்
திடுக்கிடவீழுமிப் பொய்க்கூட்டைநம்பித் திகைத்திடவோ
வடுக்கணெருதைய லக்காத்தவையா புரிவள்ளலே. (சுஎ)

சோலைக்கடம்ப வனக்கவிராயன் சுதனேநற்பா
மாலைக்கருளும் பழனிப்புலவனே வாழ்த்தல்செய்யா
தோலைக்குச்சேத முறப்புல்லர்மேற்கவி யோதுகின்றீர்
பாலைக்கமரி லுகுப்பருண்டோசொலும பாவலரே. (சுஅ)

அனித்தமெனச்செல்வ மெல்லாந்துறந்தகப் பற்றும்விட்டார்க்
கினித்தவுன்சீரரு ணுண்டிநிவந்தெய் திடும்பொருட்குஞ்
சனித்தவவாழ்வைப் பற்றுமுளேற்கது தானுமுண்டோ
தொனித்தமறைமுடி வாயபழனிச் சுடர்க்கொழுந்தே. (சுக)

துன்பமுழுதுமின் பாக்காட்டுமாயைத் தொழிலதனே
இன்பமென்றெண்ணற்க விட்டவிடமென்ப மென்றிசைத்தும
வன்புறுமென்ற னவலமதியான் மயங்குகின்றேன்
தென்பழனிபுரி யாளுஞ்சிவகுரு தேசிகனே. (எ0)

காலாவுனையெட்டிக் காலாலுதைத்த கடவுளர்க்கு
மேலாயவுண்மை நவிற்றும்பழனி விமலனன்பா
பாலாகவோடி வரோல்வரின்முன்பட்ட பாட்டோடன்றித்
தோலாவிறைமையுந் தோற்றுடன்பூண்பை துணைவிலங்கே. (எக)

மன்னையல்லாற்கதி யில்லைக்குடிக்கு வளாத்திடுமோர்
அன்னையல்லாற்கதி யில்லைநற்சேய்க்கரு ளாசிரியன்
தன்னையல்லாற்கதி யில்லைமெய்ச்சீடாகருச் சாருமெனக்
குன்னையல்லாற்கதி யில்லைச்சிவகிரி யுத்தமனே. (எஉ)

துலக்கம்பெருந்திருத் தொண்டாக்குற்றேவல்செய் தொண்டன்மனக்
கலக்கந்தெறவருள் செய்வாய்பொன்னுட்டுறை காவலன்றன்
குலக்கன்றிடங்கன விற்சென்றருண்மொழி கூறியன்னேன்
அலக்கண்டவிர்த்தவென் னேயாபழனிச் சுகானந்தனே. (எங)

உன்னேநினைப்பவர்க் கில்லையிடரென் றுறுதியுமுண்டு
என்னேவருத்துமித்துன்பாற்கலக்குண் டியம்புகின்றேன்
அன்னேயினும்பரிந் தாதரித்தாய்முற்று மாதரித்தாள்
பொன்னேயுரத்தில்வைத் தோன்றெழும்வையா புரித்துரையே.(எச)

பாழ்வேதனேயுந் தொலையுமக்கிந்தப் பாருளகில்
தாழ்வேதுமின்றிச் சுகானந்தவாழ்வையுஞ் சாந்துய்யலாம்
ஆழ்வேலையுண்டார்க் கியற்றமிழோது மரும்பழனி
வாழ்வேயுயிராக்குயி ரேயென்றுவேலனே வாழ்த்துவிரே. (எரு)

வய்யமும்வானமு மற்றுள்ளவண்டத்தின் வைப்புகளுஞ்
செய்யகீலபிறழ வித்துமுன்போலுறச் செய்யுமெனில்
அயனின்பேராருள் வல்லபமாமோ யறிவாருறத்
தய்யலுககேற்றம ணுளாபழனிச் சரவணனே. (எசு)

கள்ளத்திருகு மனத்தனசடன் கசடனுல
கெள்ளதிரியும புலியனென்றெண்ணி யெனைக்கைவிடேல்
வள்ளக்குவிமுலை கொச்சைக்குறத்தி மகிழ்கணவா
அள்ளற்பழனப் பழனியப்பாவுன் னடைகலமே. (எஎ)

ஆறறுநெடுந்துயா கொண்டேயழலிவ் வடிமையைகீ
தேற்றுவிடினுயவ தெங்ஙனமைய திருவாருள்கூ
ஊறற்ருனின்பக கடலேசெழிய னுடறபிணியை
நீற்றுலொழ்ந்த குருந்தேபழனியு ணின்றவனே. (எஅ)

தீதுறுமைவ ரிடத்தொப்பித்தென்னைச்சோ தித்ததெல்லாம்
போதுமெனைய வினியேனுமினபம பொருந்தவைதாள்
கோதுணராதண்டாக காவோதிருவருக கொண்டவனே
போதுறறதண்டலை சூழும்பழனிப் புரவலனே. (எக)

விருப்பாயவன்ப ருளத்தாந்தனனேகின்ப மேவினைப்பாய்
இருப்பாயவன்னெஞ்சத் தாங்தேதமக்கெவ்வண மின்பளிப்பாய்
மருபபாயகண்டங்கொண் டைந்தாமறையை வனாந்தமுக்கட்
பொருப்பாயதந்திக கினியோய்பழனிப் புராதனனே. (அ)

நாடிகைகூப்பு மெனைப்பவககாட்டி னலியவிட்டு
வேடிகைகப்பாரப்ப தழகோவென்னைய மெலிவொழித்தாள்
ஆடிக்கைகொண்டசைப் பான்போலகில மெலாமசைதது
வேடிகைகையாக நடிகருஞ்சிவகிரி விதகனே. (அக)

அலையுமென்றிட்ட மனதைநின்பொற்கழற் காகியின்ப
நிலையுந்தமியேன் பெறவைப்பையோமிக நீண்டெழுந்த
மலையுங்கடலு நிருகருந்தூளபட வானவாதங்
தலையுமபெறவயி லேநதும்பழனிச் சரவணனே. (அஉ)

தேனேயனைய மொழிவள்ளிபங்கன் திருப்பழனிக்
கோனேநமதண்ண லென்றவன்சீர்த்தியைக் கூறின்மக
வானேவடதிசை யோனேயென்றேற்றிடும்வாழ்வுனகருக்
தானேவலியவந் தெய்துமுகதாலுஞ் சரதமிதே. (அங)

துன்பப்புணரி தணந்துநின்ருளனுந் தோணிபற்றி
இன்பப்பெருங்கரை யேறிச்சுகிப்பது மென்றுகொலோ
முன்பகனித்தக ரோறியவ்வேள்வி முடிப்பித்தவா
அன்பாக்கிரங்குந் திருப்பழனுபுரி யாண்டவனே. (அச)

வாதுசெய்சூனை வாட்டியவேலுன் வசதகிருக்க
வேதுறுதிவினை யென்பாலிருகக விதியுமுண்டோ
போதுறைவான்முத லண்டரிடமைப் பொடித்தமலை
மாதுமைகொஞ்சிமுத் தாடும்பழனி மலைக்குருந்தே. (அடு)

வானமொந்தலை கின்றவென்னெஞ்சஞ்சன் மார்ககமுற
ஞானமுமில்லையிப் பாவிகெவ்வாறுன் னலன்கிடைக்கும்
கானமயின்முரு கோனேகுறத்திதன் காதலனே
தீனதயாபர னேபழனிபுரிச சேவகனே. (அசு)

பன்னருந்துன்பத் துழன்றேவருந்தும் படிறனேனீ
இன்னமுஞ்சோதித் திடுதனன்றேபரிந தேன்றுகொள்வாய்
அன்னமும்பீன்றியுங காண்டற்கரிய வமலனருள்
வன்னமயிற்பரி யானேபழனி மலைககந்தனே. (அள)

வியனுலுசஞ்சிவி வெற்பையுற்றாகசு வினையுமுண்டோ
நயனுலைகற்பகக காவலடந்தாகட்கு நல்குவேவா
பயனருடென்பழ லிகுமாகின் பதம்பணிவாக
கயனெழுததென்ப தொன்றுண்டோவிஃதென்ன வற்பதமே. (அஅ)

மனமேயனகுப தேசமொன்றுண்டி.வழுத்துவன்கேள்
கனமேதவழுஞ் சிவகிரியானைக் கருதுமன்பா யித்
இனமேஞ்சுறறமென் றிறண்ணெண்ணின்மெய்ப்பொருளென்பதை
தினமேயடைகுவை வித்தாகியசஞ்சிதமுமின்றே. (அக)

தூண்டருஞானச சுயஞ்சோதியைமெய்ச சுகக்கடலை
நீண்டபுகழப்பழனிபுரிவாழ்வை நிறையருளே
பூண்டசிவோக நிலையைநமமைததொடா புன்கணைழித்
தாண்டவடிகளோ வாழத்துநெஞ்சேமுத்தி யாவதறகே. (கூய)

தாங்காநெடுந்துயா நீங்கியென்னெஞசகின் முண்மலாகழி
நீங்காதுறவோ ருளவுசொல்வாய்முத்தா நின்றுதொழும
ஓங்காரபஞ்ச நிஞ்சுகமேவிண் ணுலகையணும
பூங்காவனஞ்செறி தென்பழனிப்புங்கவனே. (கூக)

பூவிலுயாகுன் றுகடோறுமெல்லப் பொருந்தமைக
காவிமலாப்பதம வைத்துப்பயிலல்வன் கலலியொத்த
பாவிமனத்தி லிருத்தறகன்றேதொழும் பத்தாகனக
கூவியுயரின் பருளுமபழனிக குனறையனே. (கூ௨)

அருவையெனன்பை யெனன்பிலெழுந்தவ் தீதவின்ப
உருவையுலகெங்கு நீக்கமறநின்ற வொன்றைமலா
மருவைவடவா லுறைநாதர்க்குண்மை வழிதெரித்த
குருவைவல்வயாபுரி பிற்கண்டபின்கண் குளிர்ந்ததுவே. (கூடு)

எவ்வளவென்றென் மனக்குறைதன்னை யெடுத்துரைப்பேன்
அவ்வளவும்மைய வுன்றனருளறி யாததன்றே
தெவ்வளவைக்குறி யாதடுத்தீர திருக்கண்வைத்தாள்
செவ்வளமுற்று நிறைபழனிபுரித் தேசிகனே. (கூச)

அடைக்கலம்புக்க வெமையும்வினைக ளடர்வனவோ
கடைக்கணருள்புரிந் தாதரிப்பாய்கடற் றானையொடும்
புடைக்கருஞ்சூரை விபுதர்கொண்டாடப் பொடித்தவைவேற்
படைக்கரனே கருணாகரனே பழனிப்பரனே. (கூரு)

நல்லாகுழற்கா வினிற்சிக்கிகொங்கை நகத்திடுக்குற்
றெல்லாமுழுகு நிதம்பமடுவுக் குளேசுழலும்
பொல்லாவென்றுட்ட மனப்பேய்க்கொருதனி பூட்டிவைத்தாள்
அல்லாபுழிற்பழ னிச்சித்தனே மந்திராதிபனே. (கூசு)

கய்யாந்திடுஞ்சென்னி மீதுவிழிநீர் கரைபுரளும்
மெய்யாவிதிராவிதிர்க்குங கருங்கன்னெஞ்சும் வெவ்வழல்வெண்
ணெய்யாயுருகுஞ்சொன் னுத்தமும்பேத நீகழ்த்துமெங்கள்
வய்யாபுரியண்ண கண்டமரத்தன்மை நோந்தர்க்குமே. (கூஎ)

கோழைக்குட்சிக்கிய வீப்போலநெஞ்சங் குழைந்துழலும்
ஏழைகிதுநெறி யென்றேருபாய மிம்பகண்டாய்
மாழைக்கண்ணுர்முஞ்ச ளாடியநீரின் மிணம்பெருகி
ஆழைகடன்மண மாற்றும்வையாபுரி யாள்பவனே. (கூஅ)

சீற்றச்சமனுடைக் குங்கருப்பாண்டத்தைத் தீயகும்பி
நாற்றசடத்தை யிடுகாட்டுக்காட்டத்தை நாய்நரியுண்
சோற்றுத்துருத்தியைக் கிட்டிதுடங்கிச சுமந்துசுமந்
தாற்றப்படுதிலைக் காப்பாய்பழனி மலையண்ணலே. (கூக)

பெருவானமும்புவி யாவுந்தனக்குட் பிறங்கிடவோ
உருவானவன்பழ னிக்குகனம்முளத் துன்னுமின்பந்
தருவானழற்கட் கொடுங்கால்வருமத் தகிமயின்மேல்
வருவானதற்கைய மில்லையவன்புகழ வாழ்த்துநெஞ்சே. (ஈ)

குருமணியேசுப் பிரமணியேயிரு கோதையர்க்காம்
ஒருமணியேயொப் பிலாமணியேயுமை யாளளித்த
அருமணியேயெளி யேற்கின்பருள வணிமயின்மேல்
வருமணியேசர ணம்பழனிபுரி மாமணியே. (ஈக)

மாலை - முற்றியது.

—(*)—

வேலுமயிலுந்துணை.

மலை மருந்து.

சீர்ார்பழனி மலைமேற்றழைத்தெழுஞ் செம்மருந்தால்
தீராப்பிணிதீர்ந் திடுமட்டசித்தியுஞ் சித்திக்கும்பின்
வாராப்பெருஞ்செல்வ மெய்துமதெவ்விதம் வாய்க்குமெனில்
ஆராதனைக்கு ளகப்படுங்கண்டோ ரறிவர்களே. (க)

காலையுதைத்த மருந்திற்கிளைத்த கனமருந்து
வாலையிடத்தினில் வந்தமருந்தென்றன் மம்மலைந்த
மூலையினுந்தங்க வொட்டாதகற்று மூதன்மருந்து
மாலையொழித்தவர்க் கெய்தும்பழனி மலைமருந்தே. (உ)

போற்றுமருந்திந்த வேழைமனத்துயா போக்கியினைப்
பாற்றுமருந்திளைப் பாற்றியபின்ன ரழகுறவே
தேற்றுமருந்தது தேற்றியபின்னர் சிவோகமிலை
ஏற்றுமருந்தது தென்பழனிப்பதி யின்மருந்தே. (ங)

விருப்புமருந்தன்பர்க் கின்புறத்தண்ணளி வீசுமதை
நெருப்புமருந்தசு ராகரும்வினைக்கு நெடும்படைவீட்
டிருப்புமருந்தென்பைப் பெண்ணுக்கியமருந் திப்பழனிப்
பொருப்புமருந்தெம்மை யாதரித்தாளும் புகழ்மருந்தே. (ச)

உருக்குமருந்தது தொண்டருள்ளத்தைவல் லுழ்வினையைக்
கருக்குமருந்துவள் ளிக்கொடிசுற்றுங் கணிமருந்தும்
பருக்குமருந்தவர்க் கும்மாமருந்திப் பழனிவெறபில்
இருக்குமருந்தது நாயேன்றுயர்நீக கிடுமருந்தே. (ஞ)

தேடுமருந்தஃ தாரணமின்னுந் தினமுமன்பர்
நாடுமருந்தஃ தண்டாசிந்தாகுல நாசமுறச்
சாடுமருந்தஃ தொண்பழனிகுட் டனிமயின்மீ
தாடுமருந்தஃ தென்னேப்புரந்த வருமருந்தே. (ட)

நித்தமருந்தகி லாண்டவடுக்கி னிலைகளைப்பே
தித்தமருந் தவை யாவுமுன்போலுறச் செய்தபரி
சுத்தமருந்தது தென்பழனிக்குன்றிற் றோற்றுவதெற்
கொத்தமருந்தது துன்பையொழித்த வொருமருந்தே. (ண)

ஆக்குமருந்த தளிக்குமருந்த தீவையிலதாய்ப்
போக்குமருந்தென்றும் போகாமருந்திப் புலவருண்டு
தேக்குமருந்திந்த நாயடியேனைத்திருவருளாற்
காக்குமருந்தது தென்பழனிப்புரிக் கண்மருந்தே. (அ)

வடிக்குமருந்தயிலால்வாணர்க்காகவன் மாமலையைப்
பொடிக்குமருந்தெழிற் குஞ்சரிகாண்குறப் பொன்மயின்மேல்
நடிக்குமருந்தடி யேனெண்ணமியாவையு நன்குறவே
முடிக்குமருந்திப் பழனியிற்றேன்று முதுமருந்தே. (கூ)

விதிக்குமருந்தன்ப ருன்னுந்திமயின் மீதுவந்தே
குதிக்குமருந்தத்தி யின்பின்செழித்துய ருங்குருந்தாய்
உதிக்குமருந்திப் பழனியிற்சித்தமெல் லோருன்னு
துதிக்குமருந்தது காணம்மைக்காகுஞ் சுயமருந்தே. (ஹ)

மலைமருந்து - முற்றியது

வேலுமயிலுந்துணை.

தேசிகக்கண்ணி

நீருலவுமண்டலநிலவடுக்கும்பலவாஞ்
சீருலகுந்தந்தளித்ததென்பழனிதேசிகனே. (க)

தானேசெழித்ததனிமுக்கட்செங்கரும்பின்
தேனேமண்ணப்பர்கேதென்பழனித்தேசிகனே. (உ)

கூடரியவின்பக்குணக்குன்றேயெவ்வுலகுந்
தேடரியசெல்வமே தென்பழனித்தேசிகனே. (ங)

பூவிலுனக்காளாப்புகுந்ததவவேழையையித்
தீவினைக்காளாகனன்றேதென்பழனித்தேசிகனே. (ச)

இத்தாயில்வன்மாயையேகமருந்தொன்றிலையோ
சித்தாகளெல்லாமபயந்தென்பழனித்தேசிகனே. (ஞ)

ஆற்றுநடுக்கோயைப்போலாகியவிப்பாவித்தனைத்
தேற்றுவரியாநின்னையன்றித்தென்பழனித்தேசிகனே. (சு)

தொகைக்குளடங்காத்துயராலெளியேன்
திகைப்பதுனக்கழகோதென்பழனித்தேசிகனே. (எ)

பாம்பின்வாய்த்தேரையைப்போற்பாழ்த்தவினையாலடிமைத்
தேம்பிவருந்தத்தகுமோதென்பழனித்தே (அ)

இம்மாநிலத்திலிந்தவேழைக்கிரங்குவரியா
செம்மான்மகண்மருவுந்தென்பழனித்தே (கூ)

பொல்லாவினைக்கிடமிப்பூவிலெனையன்றியின்றே
செல்லாரும்பூம்பொழில்சூழ்தென்பழனித்தேசிகனே. (ஐ)

இக்குவலயத்துன் னிணையடியை யன்றியொரு
இக்கென்னகுண்டோபுகலாய்த்தென்பழனித்தேசிகனே. (ஙக)

புவியிலிந்தவேழைபுலம்புவதெல்லாமுன்
செவியிலேறுததென்னேதென்பழனித்தேசிகனே. (கஉ)

உய்வதிந்தநாயேனுனதருளாலன்றியினிச
செயுவதொன்றுமியானறியேன்தென்பழனித்தேசிகனே (கங)

மெத்தமெலிந்துன்விரைத்தாள்சரண்புகுந்தேன்
சித்தமிரங்கியருள்தென்பழனிததேசிகனே. (கச)

காவாழிபதகர்கணம்வாழிநின்னருளின்
சோவாழிவேல்வாழிதென்பழனித்தேசிகனே. (கஞ)

தேசிகக்கண்ணி - முற்றியது.

வேலுமயிலுநதுணை

தாலாட்டு.

பங்களஞ்சோவேழமுக வள்ளறன்னிலைய
பெங்களாசோ வெழிறபழனி நாயகபோ. (க)

பசைசைக்கொடிதோய்பவளமலைக்குளக்கண்
ஓச்சைதரமுனைந்த வின்புசெழுங்கரும்போ. (உ)

நினைத்தமலையரையன் செய்தவத்தாலன்று
முனைத்தகொடியிற்பழுத்த மூதருண்ஞானகனியோ. (ங)

எவ்விடத்தினின்றுதொண்ட ரேத்துகினுந்தோகைமிசை
அவ்விடத்திற்றோற்று மரும்பழனியாரமிர்தோ. (ச)

அருமுலைப்பாலாததுரத்து மச்சுதனுர்தங்கைக்
கிருமுலைப்பாலேமணக்குஞ் செம்பவளவாயகருந்தோ. (ஞ)

சீரியபொற்றண்டைச சிலம்பொலிக்கவத்தர்மகிழ
நாரிமடிநீது நடைபழகும்பாலகனே. (ட)

வானேசாசரவணப்பூ மஞ்சமிசையண்டர்
தானையவிழமுன்னந் தவழ்ந்தவக்கன்றே. (ண)

தொந்திவயிற்றண்ணன் றுதிக்கைதனேயூசலென
அந்தமுறவேறிவிளை யாடுமருமணியோ. (அ)

மெய்ப்பார்குலகிரியு மேருவுஞகுலுங்முனஞ்
சப்பாணிகொட்டுந் தமிழ்ப்பழனிக் கோகையனே. (கூ)

ஓங்காரபஞ்சரத்தி னுள்ளுமன்பர்சிந்தையுள்ளும
பாங்காபுறையும் பழனிமலைப் பைங்கிளியோ. (ஙு)

வீசுதவக்கொத்தோ விளம்பருமெய்ஞ்ஞானவித்தோ
மாசிலாசச்சித்தோ வளாபழனியாண்டிமுததோ. (கக)

என்னத்துதிக்குமன்ப ரெல்லோருமீடேற
வன்னமயிலேறி வரும்பழனிச் சண்முகனே. (கஉ)

தரலாட்டு-முற்றியது.

வே லு ம யி லு ந் து ணை.

கிளிப்பத்து.

சிராமைங்கரன்மகிழ்சிலன் சிவசங்கரியாநுள் சிறுபாலன்
பேராகவுட்பிடிலோலன் பிரமசுகந்தந் தருண்மூலன்
காராரவுணாக்கொருகாலன் கழல்சேரடியா பரிபாலன்
வராரர்பழனிகதிவேலன் இசையைகிளியே யிசையாயே. (க)

முன்புறுதலைமையின்முன்னவனே முறையினிலிபமுகன் பின்னவனே
அன்புறுமானமகடன்னவனே யடியேற்கொருகாயன்னவனேகவனைத்
கொன்புனைவேற்கியென்னவனேக்குறுமுனிகோபொருளசொன்ன
தென்பழநிபுரிமன்னவனேச சிறையாகிளியேயறையாயே. (உ)

சபமுயல்சுறமகண்மகிழ்நேசன் சனக்காதியாதுதி யுபதேசன்
நிபமகல்சிவசங்கரதேசன் நிலையுணாடியவா பவநாசன்
இபமடருயாகிரிதொறும்வாசன் எளியவாமிசையதி விசுவாசன்
சுபமுறுபழனிக்குமதீசன் சொல்லைகிளியே சொல்லாயே. (ங)

அலைமகளாசைத்திருமகனே யருணிறையொருமூ விருமுகனே
நிலைபெறுமந்திரசொருபகனே நிறைபரிபூரண சிற்சுகனே
சிலைநுதன்மலர்மகண் மருகனைச் சிறியனையாண்டருள் பதயுகனைக்
கலைவலாதுதிபழனிக்குகனைக காதலுடன்கிளி யோதுவையே. (சு)

குவிமனவிருடியருணாபோதன் குறிகுணமகறுரி யாதிதன்
அவிர்குழையிலருபன்னிருகாதா அழகமாஙிசசொரு பவிஞைதன்
துவிதவல்வினைதெறவருணீ தன் சுராமுனிவராமுடி தொடுபாதன்
புவிபுகழ்பழனிப்பதிநாதன் புகழைக்கிளியே புகழாயே. (ஙு)

துதியுறுமறைகட்கரியானைத் தொழுமடியவர்கட் குரியானை
நதிபுனையிறைமகிழ்பெரியானை நடனமயூரப் பரியானைக
கதிதரு சுடிலப்புரியானைக கசடாவிழிகருத் தெரியானை
மதிதவழபழனிகிரியானை வுன்னகிளியே பன்னுதியே. (சு)

கொய்யீவனைபகுமாலலனை கொடியின்மஞ் ஞையில்வருபூவலனை
ஐயாகுறமகளாவலனை அடாமராவதிக் காவலனைப்
பொய்யாமொழியாசொன் னவலனைப் பூதாதிகெடிலுந் தாவலனை
வையாபுரியுறைசேவலனை வளையர்கிளியே புனையாயே. (எ)

உரமையுணனையடுதீரன் உவமையில்பரகதி யெனுமூரன்
தரமுமுமைந்தொழிற்கதிகாரன் சருவவல்லபமமை கெம்பீரன்
குரவொடுகுளிர்கடம்பிவாதாரன் குலமணியொளிவிடுகேயூரன்
சுரருறைசிவகிரிமயில்வீரன் துதியைக்கிளியேதுதியாயே. (அ)

உருவாயருவாயுற்றவனே யுன்னுவாபாற்சின மற்றவனைக
குருவாய்வந்தருணற்றவனைக் குடிலைக்குயாபொருள் கற்றவனே
மருவாகிலெறிசொறறவனே மறுவில்பெரும்புகழ் பெறறவனைத்
திருவாவினன்குடிக்கொற்றவனைத் தேசார்கிளியே பேசாயே. (கூ)

புனைதவிரறிஞராகளறிமெய்யன் பொய்ம்மையருககெல் லாம்பொய்ய
குனைகழலடியேற்கருள்துயயன் கொடியகிசாசரபால்வெய்யன் (ன்
பனைமகிழுமுற்டமிடுசெய்யன் பங்கயனைக்குட் டியகையன்
தனைதுதிசிவகிரி முருகையன் சரணந்துதிவரு ணைகிளியே. (ஙி)

கிளிப்பத்து-முற்றியது.

குயிற்பத்து-கண்ணி.

ஜராகம புலனுகீவராளி-தாளம் சாபு.

ஆனைமுகற்கிளையோ னும்பர் சேனைத்தலைவனெனுமுருகு [குயிலே
கோனிச்சிவகிரித் தேனைவருமபடிக-கூவாய்குயிலே-வாககூவாய நீ

தாரகத்துள்ளொளியைத் திருவோகமாமணியை யெம்மைக
கோரபவம்விட்டிடும்பானவப்பான்வாக-கூவாய்நீகுயிலே-வாக்கூவா

மாட்டுறுகந்தகிரி தனிறசிட்டித்தொழிலயனைக்-கையாற
குட்டிசிறையிட்ட நெட்டயில்வீரனைக-கூவாயநீகுயிலே வாக்கூவா

பூகமுதறபாருளா யவையாதினுகுப்புறம்பாய்-நின்ற
கோதில்லிவயாபுரி நாதனிங்கேவாக-கூவாயநீகுயிலே-வாக கூவாய நீ

நம்புவாகஞ்சபசுகம் நல்குந் தென்பழனித்தியாகர்-தமிழ்
கும்பமுனிக்கருள் நம்பெருமான்வாக-கூவாய்நீகுயிலே-வாக்கூவாய

சீலன்பாஙகிரிவா ழுமை பாலன்மெய்யன்பாற்செல்லா-வறு
கூலன்கதிவடி வேலனிங்கேவாக்-கூவாயநீகுயிலே-வாககூவாய்நீ

செச்சைப்புயத்தழகன் செந்தில் பச்சைமயில்வீர-னினாங
கொச்சைகுறப்பெண்ணை யிச்சித்தவன்வாக-கூவாய்நீகுயிலே-வாக

கள்ளவிழுசோலைக்குகன்எனதுள்ளமெனும்பெருனை-முறுகி
கொள்ளைகொண்டஅந்தக கள்வன்வரும்படிக்-கூவாய்நீகுயிலே-வாக

தஞ்சம்புகுமவரை எவ்று மஞ்சலென்பானவயலூரைழி
குஞ்சரிதேவினன்னெஞ்சுறைவாவாக-கூவாயநீ குயிலே வாகூ

என்றனுயிர்க்குயிரைச்செம்பொற்குன்றவில்லிக்கிறையை-செழுங்
குன்றுகடோறுமே கின்றவிசாகனைக்-கூவாயகீகுயிலே-வரக்கூவாய்
ஒப்பிலோர்பெண்முருகாவென்னச்செப்பருங்கைகொடுத்தோ-னீரே
குப்புகழுந்தில்லைச்சுப்பிரமண்யனைக்-கூவாய்கீகுயிலேவரக்கூவாய்.[ழ்

குயிற்பத்துக்கண்ணி-முற்றியது.

வேலுமயிலுந்துணை

இரங்கல்-விருத்தம்.

விரும்படியாரகத்திலுறைமுக்கணனுலெரிந்தமதவேள்கை முல்
லை,அரும்படியாடமுடிவதில்லையென்செயகேனெல்லா மறிந்தமாசி
த, சரும்படியாக்கலையுணர்ந்தவஞ்சியரே தென்பழனிச்சாமியிங்கே
வரும்படியாச்செய்யவொரு மையிலையோ மருந்திலையோவழுத்து
வீரே.

அரும்பாவினஞ்சொலுஞ்செந் தமிழ்வாணர்புகழ்பழனியண்ண
ல்பாறபோஞ், சரும்பாவிகொடுப்பதெங்கேபிழைப்பதெவ்வாறிவை
யரேசொல்வீரிந்தப், பெரும்பாவிதன்சமர்த்தையென்சொலுகேஞ
லுலும்பிடித்தவில்லும், இரும்பாவிகொடியாதா வொருகொடிக்கா
யிரங்குணையிங்கெய்கின்றனே. (உ)

இரும்பாலியென்றுனராசசூர்தடிந்தோன் பழனிவெற்பிலெஞ்
சூடாகச, சுரும்பாலைக்கொதிக்குதெனச சிணுங்குவளையோவொருவர்
சொலுஞ்சூதுங்க, வரும்பாலையரியாளெவடவையும்வெப்பஞ்சகிக
மாட்டாதோடுங, கொடும்பாலைவனந்தனிலெவ்விதநடக்கசகிப்பளி
னங் கோதைதானே. (ஊ)

அனங்கனியாரமுதும்வேம்பாய்வெறுத்துக கலைவளையுமணையுந்
தோற்றுள், முனங்கனியா யச்சிலைவேள் பொருகணையான்மூர்ச்சிக்
குமூர்சைதீர, இனங்கனியாவிகருனதுவரவுதனைத்தாரகம்வாரா திரு
ககுதையோ, மனங்கனியாதாவிமயவல்லியுதவியபழனிமலையுளானே.

அத்தனையோகணையில்வெகு மதப்பயலாரானவந்தாலஃதெ
னக்கோர், தத்தனையோகொடும்பாவிபாங்கியாதாமுதவியுண்டோத
யையிலாக்கஞ், சத்தனையோவெனைப்புவியி லிப்படியும்படைபா
னை தனித்தநாளில், எத்தனையோகரஞ்சொலினும் பழனிமலைவேல
ர்மன திரங்கிலாரே. (ரு)

மனங்கனம்பாலனமுனைக்கும் வாராதவேலர்முன்போய்மடமா
துக்குரை முனங்கனம்பால்கரைதூட்டக் கடைவாயால்வழிந்தகொள
மொழியநெஞ்சம், இனங்கனம்பாலுடையவாகட்கெவாசொல்வாரை
யோவீன்றெடுத்தநாளில், அனங்கனம்பாலுண்டொருதத்தென்றுரை
த்தாரிலைகணிதகு ஆய்ந்தோபாதாரே. (சு)

சுருமப்போதாலெறியுமிந்த மதப்பயலாலுயிரிழக்கத் தொல்
வேதத்தோன், அமைப்போதாதியரேகித்தென்பழனிப்பதியாளுமயி
ல்வேற்கந்தர், தமைப்போதாவுயிர்ப்பிச்சையென்றிரப்பதில்லையவா
தமைக்காணுதிங், கிமைப்போதாயிரங்கோடியுகமாகவிருக்குதிதற்கெ
ன்செய்கேனே. (எ)

வெல்லுவாளைக்காணேன் மதப்பயலைத்தென்மலைவீழ்ந்திடவே
வேரைக, கல்லுவாளைக்காணேனுலகுதனிற்குயிலினத்தைகதிகொ
ட்டாமற், கொல்லுவாளைக்காணேனலதென்மனக்குறையையெல்
லாங்கூர்ந்துரன்றுயச, சொல்லுவாளைக்காணேனமராதொழுமபழ
னிமலைத் துணைக்குத்தானே. (ஏ)

இரங்கல்-விருத்தம்-முற்றியது.

வேலுமயிலுந்துணை

இணையாசிரிய விருத்தம்.

பூமேவுமதிவதனமுங்கருணைநயனமும் புன்னகைப்பவளவாயு
ம்- பொருவேலிலங்குதோளுந்தண்டமுறுகாம்புயமுங்கவான்கொள
காமும்- தேமேவுநீபமுமுன்னூலுமணிமாலுஞ் சிறந்தகிளைபடருங்குஞ்- சீராமறைசிலம் பொலிபதமுழைழையேல் சிந்திக்கவருள
புரிகுவாய். காமேவுவள்ளிக்குவாய்த்தகேஷபமே கதிவிரிமணித்தே
பமே- கங்குல்பகலறறவுயரின்பநிலையேயும்பா கண்களிகொடங்கம
லையே- பாமேவுசெந்தமிழ்ப்புலவரேறெதொழும் பத்தாபெறுமுரிய
பேறே- பழனிதஞ்சொரியுமதுகழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமு
ருகனே. (சு)

பொங்குகிரவுஞ்சமொடுதாருகன்முதற்றகுவர் பூண்டற்றிடகக
ளைந்தேதழ்- புணரியையுமுண்டிடந்திரன்றனிதறித்தரும் புலவனுகக்காக
வெற்பை- அங்கிமைப்பேரிதிற்பிளந்தும்பாமுதலினை ரியாராகுமிட
ர்கெடியுலகில்- அரியபுகழ்கொண்டதின்வேலினுகெளியன்விளை யை
த்தடிந்திடலருமையோ- சங்கமுறுமதிஞ்ராதரமிங்கணவில்வாணனேத
ணவாதபிரமாணனே- சச்சிதானந்தபரிபூரணவிலாசனே சகலபண்
டிதராசனே- பங்கயனைவன்சிறைசெய்சாவாதிகாரனே பழமறைசொ
ல்காம்பீரனே- பழனிதஞ்சொரியுமதுகழனியெங்கணுமுலவு பழனிய
ங்கிரிமுருகனே. (உ)

பொல்லாவடற்சினப்புலியுமதகரியுமலை புலனைந்தலைப்பாந்த
ளும்- போராடுமேடணைப்பெய்களைமுலுத்தமுட் புதலுமகலாதுசெ
றியும்- அல்லாரென்மனமென்னும் வெங்காட்டினிடைமுன்ன மவு
னவெங்காடழித்த- அயிலேந்திவேடர்மானிபவண்குகிவாகஞ்சட னரி
யவனமயிலில்வருவாய்- எல்லாமுன்வல்லவொரு சிதம்பரனருள்சித்த

னே யென்றுமழியாநித்தனே - எவ்வுயிர்களுக்குமுயி ராயுறையுமே
கனே யிலீகுபன்னிருவாகனே- பல்லாயிரங்கோடி யண்டவாபரண
னே பரகதிதருஞ்சரணனே- பழநிதஞ்சொரியுமது கழனியெங்கணு
முலவு பழனியங்கிரிமுருகனே. (கூ)

இருப்புமுட்களைவிழிக ளிற்செருகியுட்முடலேயெரியுநெய்க்கொ
ப்பரையில்விட்- டெட்பொரியெனப்பொரித்த துங்கமுவிலேறறியுமெ
குகாணமிட்டனைத்துங்- திருப்புறங்கையத்துண் மூழ்த்தியும்மிவ்வி
தத் தீயதண்டங்களெல்லாஞ்- செய்வனமறலியவனெம்மையணுகா
துன் றிருதாளளித்தாளுவாய்- அருப்பமுறநடுவனையுதைத்தவர்கு
டோரனே யடலயில்கொண்மயில்வீரனே- ஆபசசகாயனே திகழ்கார்
திகேயனே யருண்மேவுகாங்கேயனே- பருப்பதந்தோறும்விளை
யாடல்புரிவேலனே பன்னுபிரணவமூலனே- பழநிதஞ்சொரியுமது
கழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (சு)

சொந்தமனைமைந்தர்தாய் தந்தையுறவினரிவாகள்சுடலைமட்டல
துயிர்க்குத்- துணையாகவருவதோ ஐயின்றோன்றித் துதிக்கினற்றுணை
யாமெனச்- சந்ததமுமைத்துமவ்வானையதுதித்திந்திர ஜாலவித்தை
கள்காட்டியென்- றண்டுயுந்தன்வசமாக்கு மிப்பாழுமனதையென்ற
ன்சொல்வழிநிற்கவருள்வாய்- முந்திவந்திலாண்டோ டிகளைப்பணை
த்திட்டமுதல்வனெனுறைசெல்வனே- முத்திக்குவித்தாயமுனைத்தொ
ளிரவிசாகனே மூடிவிலாசசிவபோகனே- பந்தமறவருணகிரியாக்க
ருளுநாதனே பரைமுத்தமிழ்பாதனே - பழநிதஞ்சொரியுமது கழ
னியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (எ)

உரமலிசிருட்டிதொட்டிதுகாறுமெண்ணில்பல வுருவமதெடுத்
தெடுத்தோ ஊசலேபபோலங்குமிங்குமையாவுற்றயாந்துழலுமிகடை
யனேனைத்- தாமருவுமானுடப்பிறவியில்விடுத்துச் சதாசந்நவாழ்வுத
ருகின்-சரணத்துதிகடப்பணித்த நின்றிருவருள் தழைத்தென்றும்வா
ழிவாழி- பிரமகிலகாட்டுமொளியேபூதமைந்தும்பிறப்பிடமானவெ
ளியே- பேதமுறுசமயங்களோறுநிறைசோதியேபேசசற்றசொற்கூதி
யே- பரமாமஞ்சுகவாரியேபவகோடையைப்பருகவரும்அருண்மா
ரியே- பழநிதஞ்சொரியுமது கழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமு
ருகனே. (கூ)

பூதமுதனுதநாதாந்தமாய்ப் போதமாய்ப் போதாந்தமாயெங்க
ணும்- பூத்தியாயிதுபொருளெனச்சொலினதற்குமேற்பொருளாய்
சகாணுபவமாய்- வேதமுதலியகலிக ளோதுதற்கரியபர வெளியுரு
யவ்வெளியிலொளியாய். மெய்யுன்பராதிமானந்தமாகுகடலாய் விள
ங்குகிணையறியவசமோ- ஏதமறவுன்தொழி னடாக்குமதிகாரனே யி
கலசுரசங்காரனே- இணையினவவீரர்குற்றேவல்புரிதாளனே யெழில்
வள்ளிமணவாளனே - பாதநிழலினேற் கருள்செயும்புண்யனே
பாலசுப்பிரமண்யனே - பழநிதஞ்சொரியுமது கழனியெங்கணுமு
லவு பழனியங்கிரிமுருகனே. (எ)

அறுசீர்க்கழிநெடிலடியிருந்தம்.

மதியிரவியொளிமுனுல இருளெதிர்கருமோகின்பேர் ' வழுத்து
மென்முன், கொதியனலாதியபிணிகளெதிர்ந்திடுவதென்னேயிக்கு
றைதீர்த்தாளாய், நதியணிவேணியாபாசத் துமையருளோங்காவ்முணை
யே நல்லோர்வாழ்வே, கதிமுனையைவீசுறுமெய்ஞ்ஞானவிதேத பழ
னிமலைகந்தவேளே. (க)

அண்டரியவடவையெனும் பேரனன்முன்கிடவின மண்டுமோ
முன், பண்டர்தமைக்காத்தவடி வேலிருகவென்முன்வினே யணுக
னஞ்றே, தொண்டாதமைகாப்பதற்கே கங்கணங்கட்டியதோகைத்
துரங்காகீல, கண்டமுறுமருட்கடற்கண் வருமமிர்தே பழனிமலைக்க
ந்தவேளே. (உ)

ஒருதுகளுமில்லாவச் சிரமதைச்செல் லரியாவெங்கோரான்தெங்
நாளு, மிருதுறுகின்றிருநீறே புனையுமெளியேனவினை வெருட்டலெ
ன்னே, விருதுறுசூராகுலமுழுது மறக்களங்தவேலாசேவிரும்புமவ்
பா, கருதுமுனம்வருசமயசஞ்சிவியே பழனிமலைக்கந்தவேளே. (ங)

பருத்திமிகுபொதிமலேபோ லாயினுந்திப்பொறிபடுமுன் பலி
யாமாபோல், விருத்தியுறுவினைகளுன்ற னடியர்முனம்பொடிபொ
டியாய் வீருதிடாதோ, வருத்தியடியேனேயட ரிடரொழியத் திருவுள
த்தில் வைப்பாயன்பர், கருத்தினிலெண் ணியவளிக்குங்கற்பகமே
பழனிமலைக்கந்தவேளே., (ச)

ஓதருக்கன்மீதிருந்தும் பனியடரிமோகின்ற ரூறுமென்சென்
னி, மீதலாந்துமேழைதனை வினையடாவதென்னேயோ விமலவேலா,
சீதமலர்க்குழற்கடவுட் பிடியும்வனமானுதந்த சிந்தையோவாக், சா
தலுறுமின்பசுக வாரிதியே பழனிமலைக்கந்தவேளே. (ஞ)

அடலுறுவாளரிமுழைமுன் வேழமெதிர்ந்திடுமோகின்னருளே
வைப்பாய், திடமுறநெஞ்சிருத்துமன்பர் பதத்தூளிமுடிக்கணியு
ஞ் சிறுநாயேன்முன், படமுறுவன்கோளும்பிட ழும்பிணியுமெதிர
ந்திடுமோ பகர்தியைய, கடமுனிவனகத்தொளிருங் குருமணியே ப
ழனிமலைக்கந்தவேளே. (ஸ)

திவலியெறிகடற்றுயின்மா லூர்தியிற்முக்கணவினஞ் சேருற்
ப்போல், முவலியறுத்துன்சரணம் போற்றுமன்பாமுன்வினைகண்
மொயத்துறுவே, குவலியமெலாநடுங்க வரசியற்றுஞ்சூர்க்குஞ்சிக் கு
டிபோமும்பர், கவலியறவெவெறிந்த சேவகனே பழனிமலைகந்த
வேளே: (எ)

மலிதிரைமோதுங்கடனீ ரினையுறும்புகலுக்குவதோ வர்த்தின்
மிக்கோர், மெலிவகற்றும்ஆறெழுத்தை யுன்னுமெனைவினைகலக்க வி
தியுமுண்டோ, வலிகொள்கிவஞ்சமலை நீறுபடவேலெறிந்த வா
னோவாழ்வே,, கலியுகத்திற்கண்கண்டதெய்வமே ' பழனிமலைக்கந்த
வேளே. (அ)

விலங்கலிலுண்டெறியுலவைக் கெதிர்மசகமுறுவதுண்டோ வி
புதர்க்கென்று, கலங்கிளரச்செயுமுனதா ளகத்திருத்துமென்னெவி
னை நண்ணலென்னே, நிலங்கதறமலைமுழைக்குட் சிக்குமொருதமி
ழ்ப்புலவ னிலைகெட்டுள்ளங், கலங்கியவேளையிற்காத்த சிவக்கொழு
ந்தே பழனிமலைகந்தவேளே. (கச)

வருணமுறும்வடவரையை யலைப்பவருண்டாமெனினும் வாழ்த்
திபுன்றன், அருணமலாடிகடிமை யாமவரைக்கோள்கொளைதிர்த
லைப்பதுண்டோ, தருணவளமாறுதொண்ட ரெனுமுயிர்ப்பயிர்க
ழைப்பநாளுங், கருணைமழைபொழிகடவுட் பெருமுகிலே பழனிம
லைக்கந்தவேளே. (ஙி)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம் முற்றியது.

டீதாரைப்பழித்தல்.

கட்டளைக்கலித்துறை.

கஞ்சமலரா வடிவைமறியைக் கனையைவண்டை
வெஞ்சமனேப்பணி கொள்விழிமிதர் விரகத்திலே
நெஞ்சமழுங்கிய நாயேற்குநின்பத நேரிடுமோ
தஞ்சமென்பாகருகும் பழநிபுரிச சண்முகனே. (க)

பச்சிலையிட் டி முகத்தைமினுக்கிய பாவையர்கம்
எச்சிலையுண்டிடு நீமூடனுகரு மிங்குவையோ
கைச்சிலைகொள் வேலாதூதனடர்கோக கணங்கண்முன்னுய்
யச்சிலையேந்து மரிமருகாபழனிக்கரசே. (உ)

வீரணபுண்ணைத் தசைகட்டியையல்குன் மெல்கொங்கையென்
ரூருமயக்கிற் புகழந்துமின்னுகட் கடிமைசெயயு
மாரனநெஞ்சுடை யேற்குநின்பேரருள் வாய்ப்பதுண்டோ
நீரகசூரைப் பொடிந்துப்பழனியி ணின்றவனே. (ங)

பருத்தகனத்தியர் செய்யுங்கலவிப் பழக்கத்திலே
கருத்தழிவேற்குநின் பொற்ருள்ளிடைத்திடுங்காலமுண்டோ
திருத்தமிகுமெயினக்கொடிக்காகத் தினைப்புனத்தில்
விருத்தவருக்கொண்ட தென்பழனுபுரிவேலவனே. (ச)

ஒருசனங்காட்டிப் பசப்பியினுனா யுள்ளிழுத்தே
வருதனங்கைப்பற்று மின்னுருவை மறப்பதென்றே
விருதனமுரு மபனெழுத்தைத்தட்டு மெய்படியா
கருதனம்பாலிக்குந் தென்பழனுபுரிக்காவலனே. (ஞி)

சரியுமலர்க்குழன் மின்னுர்மயக்கினிற் சார்ந்தலைந்தே
திரியுமிப்பாவினின் முட்டாமகைக்கன்பு செய்வதுண்டோ
அரியுமயனு மறியாவொருவாக் கரும்பொருளைத்
தெரியும்படிச்செய்த தென்பழனிபுரித்தேசிகனே. (கூ)

காணுவிடத்தொன்றுங் கண்டொன்றுஞ்சொல்லுங் கபடிகட்குன்
வாணுலையொப்பித் திடிவையென்றென்னை வருத்தனையே
பூணுகச்சேடனைச் சுற்றிடுமூலப்பொழிலுயாந்து
சேணுடருக்கயா வோட்டும்பழனியெஞ் சேவகனே. (கூ)

பத்தமில்லாக்கொடு நெஞ்சுடைவஞ்சியர் பாழ்ங்குழிக்கே
சித்தமுருகிய நாயேற்குநின்பத சேவையுண்டோ
சித்தரிருடியர் கின்னராபூசுரா தேவாசுரா
நித்தமிறைஞ்சும் பழனிபுரிவளர் நின்மலனே. (அ)

போழ்ந்திடும்வேற்கண் ணிரிவையர்மோகப் புணரியுளே
ஆழ்ந்திடும்போதுநின் பாதாம்புயத்தன் பினைமறவேன்
சூழ்ந்திடும்பூத கணங்கள்விருந்துணச் சூர்ப்படைகள
வீழ்ந்திடவேல்விட்ட தென்பழனிபுரி வேலவனே. (ஆ)

தாழுஞ்சுரிகுழல் வஞ்சியர்மோகச் சமுத்திரத்தில்
வீழும்படிகனென்னை முந்துறுநாளில் விதிதனையே
பாழுமவுணக் கலைபறித்தும்ப ரெனும்பயிரவிண்
சூழும்படிக்கயி லேந்தும்பழனிச் சுடர்க்கொழுந்தே. (ஈ)

மூல்லைநகைவைத்த் மின்னுமையுலகுண் மூழ்கல்விடுக
தொல்லைவனநின் சரணம்புயததி லுறுவதென்றே
கல்லையெறிந்தவர்க் கில்லையென்னுது கதியருளுக
தில்லைவனத்த ரருள்பழனிச் சேவகனே. (கக)

பொட்டிட்டுமையிட்டுப் பித்தனையோலை புதுக்கியிட்டை
தொட்டிட்டழைத்து முயக்குமின்னுமை யொழிவதென்றே
சுட்டிட்டமான்றசை தேன்கூட்டியுண்குறத தோகைக்குளங்
கட்டிட்டங்கொண்டசு சீலாபழனிக் கலாதரனே. (கஉ)

நரகத்துறைநெறி காட்டுமடநடை நங்கையர்தம
விரகததுழலுங் கொடியேற்கு நின்பத வீடளைதே
கரகத்துதகங் கவிழ்த்தார்கலையவென் கண்மணியே
உரகத்துடல்கிழித் தாடும்பழனி மயூரத்தனே. (கூ)

வெறியார்கலவைக் குழம்பணிபூண்முலை மெல்லியர்க்கே
முறியாக்கிடந்துழல் வேறகுநின்பாத மூளரியுண்டோ
உறியாரையுண்ட வன்மருகாசெறி யூகங்களும்
அறியாதெடும்பொழில் சூழ்பழனிபுரிக் காதிபனே. (கச)

மாதரைப்பழித்தல்-முற்றியது.

வேலுமயிலுந்துணை.

அறுசீர்க்கழிநடில்விருத்தம்.

திருமருவுகாகமலத் தேந்தியருமறையொலிக்குஞ் செம்பொற்றூலை அருகையுறக்கண்ணிலொத்தி மகிழ்வுறுமைங்கரகினேய வருங்குரு ந்தே- இருமைவினைச்சடமொழியாமுன்னமயின்மீதினில்வந் தெனே யாட்கொள்வாய்- குருமணியேதவப்பேறே தென்பழனியம்பதிவாழ் குமரவேளே. (க)

ஆலமெனத்தாலுவுஞ்செவ் விதழுமெயி றுங்கறுத்திட் டைமேலு ந்தி- பாலமுரங்களுமும்மியாத் துச்சியிற்சூடெழுந்தாவி பதைப்புரு முன்-நீலமயின்மீதினில்வந் தஞ்சலெனககடையேற்கோ நிலைதந்தா ளாய - கோலமணிமேடைகள்சூழ் தென்பழனியம்பதிவாழ் குமர வேளே. (உ)

உடலமெலாமல்லியின் றண்டெனச்சிலீலிட்டரையனெனவுரைக்கு நாடி-படபடதம்பரதாடிசசுழிதொடுங்கியுயிரவிடுமுன்பகாமைய ஞ்ஞான-அடலயில்வேலேநதிவந்தீவ் வடிமைதனையஞ்சேலென்றுத ரிப்பாய் - குடவரைமுத்தொளிவயல்சூழ தென்பழனியம்பதிவாழ குமரவேளே. (ஊ)

